மலர் : 50

# சத்தியத்தின் குரல்

THE VOICE OF TRUTH INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 50

# ✯ சத்தியத்தின் குரல் ✯


## Editorial Team

Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Translating Editor
**B.Benny Martin**

**Guest Editors**

Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

**Staff Writers**

Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Kingsly rajah
Abel R. Nayagam

Publishing Consultant
**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from

**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**



# பிச்சைக்காரன்

## The Beggar

Louis Rushmore

செழிப்பான அமெரிக்க ஐக்கிய தேசத்தில் கூட ஒருவர் தெற்கு நோக்கி பயணிக்கும்போது போக்குவரத்து நெரிசலை நெறிமுறைப் படுத்தும் விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கும் இடத்திலும், சாலை சந் திப்புகளிலும் பிச்சைக்காரர்கள் நின்றுகொண்டிருப்பதை நம்மால் காணமுடியும். அவர்கள் அங்கே கைகளில் பதாகைகளை ஏந்திக் கொண்டு நிற்பார்கள். அப்பதாகைகளில் மக்களின் இரக்கத்தைப் பெறவும் அவர்களுடைய உதவிகளைப் பெறவும் வாசகங்களை எழுது வது வழக்கமாகும்.

அப்படிஒரு பிச்சைக்காரர் தன் கைகளில் ஏந்திக் கொண்டிருந்த பதாகையில் எழுதப்பட்டிருந்த வார்த்தைகள் அனைவருடைய கவனத் தையும் ஈர்த்து எல்லோரையும் சிந்திக்க வைத்தது. அப்பதாகையில் இடம் பெற்றிருந்த எளிமையான வார்த்தைகள் இதோ: நான் வேலை யில்லாமல் இருக்கிறேன், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. மேலும், அப்பதாதை சிலுவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

தெளிவாகவே, இந்த மனிதனுடைய வேண்டுகோளும், இலக்கும் கிறிஸ்தவம் எந்த மக்கள்மீது தாக்கத்தை ஏற்படுத்தினதோ அவர்கள் தான் சேவை செய்வதற்குப் பேர்போனது. இயற்கையாகவே, இவர் ஏழைகளுக்கு உதவும் ஈகைக்குணம் உள்ளவர் என்று ஒரு நாத்திகரை சுட்டிக்காட்ட முடியாது.

ஒட்டு மொத்த வரலாற்றை நாம் உற்றுப் பார்த்தால் மருத்துவமனை கள், அனாதை இல்லங்கள், மருத்துவ சேவைகள் மற்றும் ஏராளமான தொண்டு நிறுவனங்கள் கிறிஸ்தவத்தைத்தான் ஆதாரமாக கொண்டுள்ளன. அதாவது, வேதாகமத்தின் தேவனை கனப்படுத்தும் கிறிஸ்தவம் மற்றும் யூதமார்க்கத்திடமிருந்து தான் தொண்டு நிறுவ னங்கள் தோன்றியுள்ளன.

இந்தப் பிச்சைக்காரன் தான் எங்கே இருக்கிறான் என்பதையும் (அதா வது அமெரிக்காவில் ) யாரிடம் உதவிகேட்கிறான் என்பதையும்

நன்றாக அறிந்திருந்தான் (கிறிஸ்தவர்களிடம்). நடந்து செல்லும், அல்லது வாகனத்தில் பயணம் செய்யும் நாத்தீகர்கள் மற்றும் இஸ்லாமியர்களிடம் உதவிக்காக வேண்டுகோள் விடுத்திருந்தால் அது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்பதை அவன் அறிந்திருந்தான். இந்தப் பிச்சைக்காரனைப் பொறுத்தவரை கிறிஸ்தவம் என்பது மற்ற உலக மதங்களை விடவும், நாத்தீகத்தை விடவும் இரக்கமுள்ள உதாரத்துவமுள்ள உயரிய மார்க்கமாக இருந்திருக்கிறது. தேவன் கிறிஸ்தவத்தில் செயல்படுகிறவராக இருக்கிறார். மற்ற மதங்களில் இருப்பதைப் போல் வெளிப்படையாகத் தெரியாமலில்லை. கிறிஸ்தவம் இவ்வுலகிலுள்ள மற்ற மதங்களிலிருந்து, மனுஷருடைய உபதேசங்களிலிருந்தும் உயர்ந்து நிற்கிறது, தனித்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.



என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னில்தானே செத்ததாயிருக்கும். ஒருவன் உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே. (யாக்கோபு 2:14–18)

அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன்; என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள். வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக மிகவும் சிறியவரான என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.(மத்தேயு 25:34–36)



# மானிடத்தின் மாபெரும் தவறு
# The Greatest Error Of Humanity

E.Z.S. Rajanayagam

மனிதன் தவறு செய்வதென்பது, ஏதோ இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் ஏற்பட்டுவிட்ட ஒரு விபத்து அல்ல. பிதாவாகிய தேவனால் மானிடம் சிருஷ்டிக்கப்பட்டு, ஏதேன் தோட்டத்தில் அவனை குடிய மர்த்தினதிலிருந்தே தொடர்ந்து வருகின்ற ஒரு முடிவற்ற செயல் தான் தவறு என்பது. அன்று, சத்துருவாகிய சாத்தானின் வஞ்சக வார்த்தைகளால் கீழ்ப்படியாமை என்கிற விஷ விதை விதைக்கப்பட்டு, ஏவாள், ஆதாம் இவர்கள் மூலம் நீர் பாய்ச்சப்பட்டு, தொடர்ந்து வந்த நமது முன்னோர்களால் உரமிடப்பட்டு, கண்ணும் கருத்துமாக, காலம் காலமாக பராமரிக்கப்பட்டு வரும் இந்த நச்சு மரம், இன்று மாபெரும் விருட்சமாக வளர்ந்து மானிடத்தை அலைக்கழித்துக் கொண்டுள்ளது. இந்த விருட்சத்தின் கீழாக சுகமாக இளைப்பாறிக் கொண்டிருக்கும் மானிடம், இந்த விருட்சம் எவ்வளவு அழகாக, சௌகரியமாக இருக்கிறது என்று பாராட்டுமளவிற்கு நிலமை உள்ளது. இந்த நச்சு மரத்தின் சுகத்தை அனுபவிக்காத மனிதன் ஒருவனும் இல்லை. இந்த அவல நிலையைத் தான் பவுலடியார், "எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி" என்று சொல்லுகிறார். [ரோம 3 : 23]

மானிடத்தின் இந்த தவறுகளுக்கெல்லாம், சிகரமாக இருப்பது, ˚ஆவிக்குரிய காரியங்களுக்கு, சரீரப் பிரகாரமான பொருள் எடுத்துக் கொள்வது தான். ஏன், இது மாபெரும் தவறு? எனெனில், இதன் விளைவு அதி பயங்கரமானது, தேவனால் மனிதன் படைக்கப்பட்ட நோக்கத்தையே சிதைத்து, சின்னாபின்னமாக்குவது.

ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ள முடியாமல், மானிடம் எங்கெல்லாம் தவறிழைத்திருக்கிறது என்பதை வேதத்தின் வெளிச்சத்தில் சிலவற்றை ஆராய்ந்து பார்ப்போம்.

## I யூதர்கள் ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்து கொள்ளவில்லை [யோவான் 2:18-22]

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக நம்மைப் போல் ஒரு மனிதராய், நமதாண்டவர் நன்மை செய்கிறவராய் இப்பூவுலகில் சுற்றித் திரிந்து, ஊழியம் செய்த நாட்களில், யூதமக்கள் ஆண்டவரின் அருளுரையைப் புரிந்து கொள்ள மிகவும் சிரமப்பட்டனர். ஏன், புரிந்து கொள்ளவேயில்லை என்று சொன்னாலும் தவறில்லை. புரிந்து

கொண்டிருந்தால் 'பாவம் அறியாத இயேசுவை சிலுவையில் அறையும் என்றும், 'பாதகன் பரபாசை விடுதலை செய்யும் என்றும் ஏக சத்தமாய் கூக்குரலிட்டிருப்பார்களா?

ஒரு முறை கிறிஸ்துவானவர், பஸ்கா பண்டிகை சமீபித்திருந்த நாட்களில், எருசலேம் பட்டணத்தில், யூத மக்களால் போற்றப்பட்டு வந்த புகழ்மிக்க தேவாலயத்தைக் குறித்து, 'இந்த ஆலயத்தை இடித்து போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்சு என்றார். (யோவா 2:19). அப்பொழுது அங்கு கூடியிருந்த யூதர்கள் அதிர்ச்சியடைந்து, இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருடம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ? என்றார்கள்.

ஆனால், இயேசுவோ, அங்கே தன்னுடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார். மாத்திரமல்ல, தன்னுடைய உயிர்த்தெழுதலைக் குறித்து அங்கே முன்னறிவிக்கிறார். மோசேயின் பிரமாணத்தை முறையாகக் கற்றவர்கள், தீர்க்கதரிசனங்களை அறிந்தவர்கள், கிறிஸ்துவானவர் பேச்சின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாமல் தவறு செய்கிறார்கள், என்னே பரிதாபம் !

**சீடர்கள் ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ளவில்லை (மத்17:1-8)**

நமதாண்டவர் பரம் ஏறுவதற்கு, சரியாக ஒரு வருடம் முன்னதாக தனக்கு நெருக்கமான சீடர்களாகிய பேதுரு, யோவான், யாக்கோபு இவர்களை அழைத்துக் கொண்டு, மறுரூபம் அடைந்த மலை என்று நம்பப்படுகின்ற எர்மோனுக்கு செல்கிறார். அங்கே சீடர்கள் கண்ட காட்சி அவர்களை பிரமிக்க வைத்தது. மோசேயும், எலியாவும் இயேசுவோடு பேசிக் கொண்டிருந்ததைக் கண்டார்கள். எப்போதும் அவசரகோலத்தில் செயல்படும் பேதுரு, 'அங்கே தானே கூடாரம் போடலாம் என்கிறார். அதுவும் எப்படி மூன்று பேருக்கும் மூன் று கூடாரமாம்.

ஆண்டவராகிய இயேசுவின் மீது வைத்த அபார பக்தியினால் தான் பேதுரு அப்படிச் சொன்னார் என்று நாமறிவோம். ஆனால், மறுரூப மலையின் கூடாரவாசியாவதற்கா பரலோகம் விட்டு பூலோகம் வந்தார்? மறுரூபமாகி வெளிப்படுத்தின காட்சி பேதுருவால் கூடாரம் போடுவதற்கா? இல்லை, இல்லவே இல்லை. அங்கே புதைந்து கிடந்த ஆவிக்குரிய காரியங்கள் ஆண்டவருக்கு நெருக்கமாக இருந்த இவர்களுக்கு ஏன் விளங்கமால் போனது? காலமெல்லாம் கூட இருந்து போதனை கேட்டவர்களல்லவா இவர்கள். ஆச்சரியம்! சரீரகண்ணோட்டம் மேலோங்கி இருந்தது தான் இதற்குக் காரணம். நண்பரே, பக்தியின் மிகுதியால் நாம் தவறு செய்தாலும் தவறு, தவறுதான் என்பதை மறந்து விட வேண்டாம்.

சரி, இங்கே என்ன ஆவிக்குரிய அர்த்தம் உள்ளது என்கிறீகளா ?

மறுரூப மலையில் ஆண்டவரோடு மோசேயும் எலியாவும் காட்சி தருகி றார்கள். மோசே நியாயப் பிரமாணத்தின் தந்தை, எலியா தீர்க்கதரிசிக ளில் மகா தீர்ககன். பிரமாணங்களின் பிரதிநிதி மோசே, தீர்க்கதரிசினங் களின் பிரதிநிதி எலியா. இருவரும் கிறிஸ்துவுடன் பேசிக் கொண்டி ருக்கிறார்கள். ஒளியுள்ள மேகம் அவர்கள் மேல் நிழலிடுகிறது. அந்த மேகத்திலிருந்து சத்தம் உண்டாகிறது. **இவர் என்னுடைய நேசகுமா ரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்கு செவிகொடுங்கள் என்று. இயேசுவானவர், ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட நேரத்திலும் வானத்திலிருந்து சத்தம் வந்தது. அது இவர் என்னு டைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று மட்டு மே உரைத்தது.** (மத் 3:17) மறுரூப மலையில் மட்டும்தான், இவருக்கு செவி கொடுங்கள் என்று சத்தம் வந்தது என்பதை கூர்ந்து கவனிப்பது மிக அவசியம். பிறகு சீஷர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்த போது, 'இயேசுவைத் தவிர வேறொருவரையும் காணவில்லை.

மோசேயும், எலியாவும் மறைந்து போனது நியாயபிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் முடிவுக்கு வரப்போகிறது என்பதை சீடர்க ளுக்குக் காட்டுவது தான் அந்தக் காட்சியின் நோக்கம். அது அல்லா மல் வேறு என்னவாக இருக்க முடியும்? ஆனால், அந்த அர்த்தத்தைப் புரிந்து கொள்ள சீடர்களால் அப்பொழுது முடியவில்லை. பின்னொரு நாளில் பேதுரு, அந்தக் காட்சியை நினைத்துப் பார்க்கிறான் (2 பேதுரு 1:16-18).

## III ஜனங்கள் ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ளவில்லை (அப்14:8-18)

முதலாம் நூற்றாண்டில், சத்தியம் திக்கெட்டும் பரவி வெற்றிநடை போட்டு வந்த காலத்திலும் இந்த நிலை தொடரவே செய்தது. புறமார்க் கத்தாருக்கு நற்செய்தியைப் பரப்ப விசேடமாகத் தெரிந்து கொள்ளப் பட்ட பவுல், தன்னுடைய முதலாவது சுவிசேஷப் பயணத்தின் ஒரு பகு தியாக லீஸ்திராவுக்கு வருகிறார். அங்கே தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாய் இருந்த ஒரு மனிதன் பவுலால் சுகமாக்கப் படுகிறான். இந்த அற்புதம் கூடியிருந்தவர்களின் புருவத்தை உயர்த்தி யது, பிரமித்து நின்றனர். பிரதிபலனாக ஏதாவது செய்ய வேண்டு யமென்று துடித்தனர். ஆனால், செய்ததைத் தான் சரியாக செய்ய வில்லை.

பிறவி சப்பாணி சுகமாக்கப்பட்டதில் மறைந்திருந்த ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ள முடியவில்லை. பவுலடியாரின் வார்த் தையின் வல்லமையை ஏற்றுக் கொண்டனர். ஆனால், அந்த வார்த் தைக்கு வல்லமை எப்படிக் கிடைத்தது என்று சிந்திக்க முற்பட வில்லை. அந்த வல்லமையைக் கொடுத்த தேவன் யார் என்று ஆராய வில்லை. ஆனால், அந்த அற்புதத்தை ஏற்றுக்கொண்டனர். பதிலுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றும் விரும்புகின்றனர். என்ன செய்தார் கள் தெரியுமா ? மனிதனை கடவுளாக எண்ணி, அவனுக்கு மாலை,

மரியாதை செலுத்தி ஆர்ப்பாட்டம் செய்ய ஆசைப்படுகின்றனர். – சிந்தனைக்குத் தீனிபோடாமல், உணர்வுகளுக்கு அடிமையாகின்றனர். ஆடிப்பாடி ஆர்ப்பாட்டம் செய்வதோடு தங்கள் பங்கு முடிவடைகிறது என்று நினைக்கின்றனர். அதுவா ஆண்டவருடைய பார்வையில் மதிப்பானது ? இங்கும் ஆவிக்குரிய சிந்தனையில்லாமல், சரீர கண்ணோட்டமே மேலோங்கி ஜனங்கள் தவறு செய்கின்றனர்.

அருமையான நண்பரே! மேலே பார்த்த சம்பவங்கள் முதலாம் நூற்றாண்டுக் காலத்தில் நடந்தவை தானே என்று நினைக்கிறீர்களா ? ஆவிக்குரிய காரியங்களை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் மனிதன் மனநிலையில் பக்குவமோ அல்லது மாற்றமோ இன்றும் பெரிதாக ஏற்படவில்லை. சொல்லப்போனால் நிலைமை இன்னும் மோசமான திசையில் வெகுவேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. மானிடத்தின் மாபெரும் தவறு தொடர்கிறது. தத்துவார்த்த ரீதியாக கிறிஸ்தவத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பி மானிடம் தோற்றுக் கொண்டிருக்கிறது. தத்துவங்களின் மீது அல்ல, பேருண்மைகளின் மீது தான் கிறிஸ்தவம் கட்டப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டதான கிறிஸ்தவத்தை ஆவிக்குரிய சிந்தனையுள்ளவர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

மனித ஞானம் தேவனுக்கு முன்பாக ஒன்றுமில்லை. [I கொரி 1:25] ஆகவே, ஆவிக்குரிய சிந்தனையை நாம் பெற்றுக் கொள்வோம். ஆண்டவரின் காரியங்களை அறிந்து, கீழ்ப்படிவோம். இம்மைக்குரிய ஆசீர்வாதத்தையும், மறுமைக்குரிய ஆசீர்வாதத்தையும் பெற்று சமாதான ஜீவிகளாக மாறுவோம் .

ஆம், அன்பானவர்களே! கிறிஸ்துவானவர் போதித்த உபதேசம் தேவனுடைய உபதேசமாக இருந்தது. அவர் சுயமாக ஒன்றும் பேசாமல் பிதாவானவரிடம் தான் பெற்றுக் கொண்டதையே பேசினார். ஆகையால், இந்த வசனத்தைக் கேட்டு அவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்கிறார். என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு ; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்கு உட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் [யோவா. 5:24]. தேவனுடைய உபதேசம் எல்லோரையும் இரட்சிக்கும்படியான உபதேசம். ஒருவரும் கெட்டுப்போகாமல் மனந்திரும்பவேண்டுமென்று தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். ஆகையால், ஒருவன் அவருடைய வசனத்தைக் கேட்டு விசுவாசித்து மனந்திரும்பும்போது அவன் இரட்சிப்பின் வழியே வழிநடத்தப்படுகிறான். இதைக் கர்த்தர் சொல்லும்போது அவன் மரணத்தை விட்டு விலகி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே சொல்லுகிறேன் என்கிறார். ஆகையால் தொடர்ந்து தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுப்போம்! ஆமென்!!.



# ஏன் கிறிஸ்தவர்கள் இவ்வுலகில் விடப்பட்டிருக்கிறார்கள் ?

# Why are Christians Left in this World ?

J.C. Choate

இதை கற்பனை செய்து பாருங்கள் : ஒருவர் சுவிசேஷத்தைக் கேட்டு புரிந்து கொண்டு, தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகிறார். உடனடியாக தேவன் அந்த மனிதனுடைய சரீரத்தை மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூப்படுத்திவிடுகிறார். அந்த மனிதனுடைய சரீரத்தோடு நித்திய வீட்டிற்கு போய்விடுகிறார், அது எவ்வளவு அற்புதமானதாக, அருமையானதாக இருக்கும் ? போராட்டங்கள் இல்லை, சோதனைகள் இல்லை, ஒரு ஆத்துமாகூட இழந்து போவதில்லை! என்ன ஓர் அருமையான திட்டம் ! இதைப்பற்றி எல்லாம் தேவன் ஏன் யோசிக்கவில்லை ? இப்பஜ நாம் நினைக்கலாம்.

ஆனால், எல்லோரும் தேவனுடைய குடும்பத்தில் பிறந்த அந்த நிமிடமே தேவனோடு எடுத்துகொள்ளப்பட்டால், இரட்சிப்பின் செய்தியை மற்றவர்களுக்கு எடுத்துச்செல்வதற்கு இவ்வுலகில் யார்தான் விடப்பட்டிருப்பார்கள் ? ஒருவருமில்லை ! எனவே சுவிசேஷத்தின் இரட்சிக்கும் வல்லமை சபை ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளிலேயே முடிந்துப்போயிருக்கும், அதிலிருந்து இவ்வுலகம் ஒட்டுமொத்த இருளில் மூழ்கியிருக்கும்! அதனால் தான் இந்த அந்நிய சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நாம் வாழும் இவ்வுலகத்திற்கு சாத்தான் அதிபதியாக இருந்தாலும் கூட நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் ஒளியாக பாவ இருளில் வாழ்பவர்களுக்கு ஒளிவீச முடியும். நீங்கள் மனமாற்றமடைந்ததை திரும்பிப் பாருங்கள். பெரும்பாலும் நம்மீது அன்பும், அக்கறையும் கொண்ட ஒருவர் உங்களுக்கு சத்தியத்தைப் போதித்தனால்தானே இது சாத்தியமாயிற்று. சாத்தான் எத்தனையோ உபத்திரவங்களையும், பாடுகயையும் நம் ஜீவியங்களில் கொண்டு வந்தாலும் கூட நாம் சோர்ந்து போகாமல் கிறிஸ்தவ ஓட்டத்தில் இருக்கிறோம்.

இயேசு தம்மை பின்பற்றினவர்களிடம் கடைசியாக சொன்ன வார்த்தைகள், அந்த முக்கிய கட்டளைகளை உள்ளடக்கியிருக்கிறது. பின்பு அவர் அவர்களை நோக்கி **நீங்கள் உலக மெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்**

சுவிசேவும் உலகமுழுவதும் பரம்பி 2000 ஆண்டுகள் ஆகியும் கூட கிறிஸ்தவர்களுக்கான கட்டளையோ, நாம் எந்த வேலையை செய்யும் படியாக இவ்வுலகில் விடப்பட்டிருக்கிறோமோ அதில் எதுவும் மாற வில்லை. ஆனால், மக்கள் தொகையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டி ருக்கிறது ! குறைந்த எண்ணிக்கையில் உள்ள கிறிஸ்தவர்களால் எழு நூறு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட இவ்வுலகத் திற்கு சுவிசேஷத்தை எப்படி எடுத்துச் செல்லமுடியும் ? இது சாத்திய மா ? மனித முயற்சிகள் மாத்திரம் இப்பணியை முடிக்கிறதாக இருந் தால் அது சாத்தியமில்லை. ஆனால், இயேசு, ... இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கி றேன் என்றார் [மத்தேயு 28:20]. யோவான் 14:18 ல் நான் உங்களிடத் தில் வருவேன் என்றார். இதன் செய்தி என்ன? நம் கைகளில் அவர் ஒப் புக்கொடுத்திருக்கிற பணி அவருடைய பணியாக இருக்கிறபடியால் நம் பாதையின் ஒவ்வொரு அடியிலும் அவர் நம்மோடிருப்பார்.

நடைமுறையில் அதன் பொருள் என்ன ? இவ்வுலகத்தை எடுத் துச்செல்ல சபைக்கு தேவன் கருவிகளைத் தந்திருக்கிறார். தேவன் தம்முடைய பங்கைச் செய்திருக்கிறார். அவர் மேஜையில் கருவிகளை வைத்திருக்கிறார். ஆனால், அவர் தந்திருக்கிற கருவிகளை எடுத்துப் பயன்படுத்தலாமா என்று முடிவு எடுப்பது கிறிஸ்தவர்களிடத்தில் தான் இருக்கிறது.

இன்று இந்த மாபெரும் மக்கள் தொகைக்கு சுவிசேடத்தை எடுத் துச்செல்ல கிறிஸ்தவர்கள் மையமாக இருந்து ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியமாயிருக்கிறது. அமெரிக்காவிலும், இந்தியாவி லும், நைஜீரியா, கானா, தென்னாப்பிரிக்கா, ஜிம்பாப்வே, மாலாவி பெரு, பிரேசில், மெக்சிகோ, பிரான்ஸ், இத்தாலி, பிலிப்பைன்ஸ், மியன்மார், நியுசிலாந்து, ஆஸ்திரேலியா இன்னும் பல நாடுகளில் முப் பது நாற்பது வருடங்களுக்கு முன்பாக ஸ்தாபிக்கப்பட்ட சபைகள் முதிர்ச்சி அடைந்திருக்கின்றன. ஆனால், இன்னும் நாம் செய்ய வேண்டிய வேலைகள் அநேகம் உண்டு. அப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் பயணிக்க திராணி உள்ளவர்களாயிருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் உள்நாட்டிலும், அண்டை நாடுகளுக்கும் பய ணிக்க திராணி உள்ளவர்களாயிருக்க வேண்டும். நிச்சயமாகவே, இத்த கைய செயல்பாடுகள் சாத்தியமானதே. தேவன் உலகெங்கும் இரட்சிப் பின் செய்தியை எடுத்துச்செல்ல தேவையான கருவிகளை சபைக்கு கொடுத்து ஆசீர்வதித்திருக்கிறார்.

ஆனால், இன்று உலகில் திரளான ஆத்துமாக்கள் இருக்கிறார்கள். முதல் நூற்றாண்டில் ஒருவருக்கொருவர் நேரில் சந்தித்தது போல இப் போது சந்தித்தால் அது போதுமானதல்ல என்பதை தேவன்

அறிந்திருக்கிறார். எனவே, ஆதிக்கிறிஸ்தவர்களிடத்தில் இல்லாத ஒரு கருவி இப்போது நம்மிடத்தில் என்ன இருக்கிறது? முழுமையான வேதகாமம் இன்று உலகின் கிட்டத்தட்ட எல்லா மொழிகளிலும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கிறது.

அச்சிடப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் ஏற்கனவே நமக்கு முன்பாக அனுப்பட்டு பலருடைய கைகளில் இருக்கிறபடியால் தேவச் செய்தி நமக்கு முன்பாகச்சென்று பாலைவனத்தில் நமக்குப் பாதையை உண்டாக்கியிருக்கிறது.

அச்சு இயந்திரங்கள், கணிணிகள் மற்றும் பிரதிகள் எடுக்கும் இயந்திரங்கள் போன்றவைகளால் தேவச் செய்திகளை நகல் எடுக்கும் பணிகள் மிகவும் குறைந்த விலையில் செய்து முடிக்கப்படுகிறது. சர்வதேச தபால் முறை கடிதங்கள், வேத பாடங்கள் மற்றும் புத்தங்களை உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் எடுத்துச் செல்ல நம்பகமான முறையாயிருக்கிறது. வானொலி போன்ற தகவல் தொடர்புசாதனங்கள் உலகின் எந்த மூலையில் இருப்பவர்களும் சுவிசேஷத்தைக் கேட்க பேருதவியாக இருக்கின்றன. அதேபோல் தொலைக்காட்சி பெட்டி இருப்பதால் நானிலத்திற்கும் நற்செய்தியை அறிவிப்பது சுலபமாகிறது. அதுபோல் இன்று உலகின் தனிமைபடுத்தப்பட்ட பகுதிகளிலும் பரவலாக குறைந்த செலவில் கிடைக்கிறது. அதேபோல் சபைகள் வலைதளங்களை உருவாக்கி அதில் ஆயிரக்கணக்கான வேத பாடங்களை பதிவேற்றி வைத்திருக்கிறார்கள் மற்றும் பென்டிரைவ் போன்ற கருவிகள் மூலமாக பல மொழிகளில் வேதகாமங்களையும், வியாக்கியான புத்தகங்கள், ஒத்த வாக்கியங்கள் இன்னும் ஏராளமான ஆவிக்குரிய காரியங்களை சேமித்து உலகின் பல பகுதிகளுக்கு பரப்ப முடியும். புத்தக வடிவத்தில் ஆவிக்குரிய காரியங்களை படிக்க முடியாதவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட கருவிகள் பேருதவியாக இருக்கும்.

இன்று உலகில் ஒவ்வொரு நாளும் ஏராளமான தகவல் தொடர்பு கருவிகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன; Skype, Youtube மற்றும் Facebook போன்ற சமூக வலைத்தளங்கள் இன்று வலம் வந்து கொண்டிருக்கின்றன. மேற்சொல்லப்பட்ட கருவிகளையெல்லாம் உலகப்பிரகாரமாகவும் பயன்படுத்த முடியும் – ஆனால் உண்மையில் இந்த தகவல் தொடர்பு சாதனங்கள் எல்லாம் சபையானது சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல தேவனால் வழங்கப்பட்ட வரப் பிரசாதங்களாகும்.

சபைகள் வலைதளங்களை உருவாக்கி அதில் பிரசங்கங்கள், ஆராதனைகள், ஆவிக்குரிய பாடங்கள் போன்றவற்றை பதிவேற்றம் செய்து வருவதை இணையசேவை வசதி கொண்ட எவரும் உலகின் எந்த மூலையிலிருந்தும் கண்டு பயன்பெறமுடியும். மேலும், Youtube

மூலமாக ஏராளமான வேதகாம பாடங்கள், பிரசங்கங்கள் பதிவேற்றப் படுகின்றன. உலகெங்கும் இணைய வழியாக வேத பாடங்களை திருத்தி மதிப்பெண் வழங்குவதற்காவும், மாணவ சமுதாயத்தோடு நல்லுறவை ஏற்படுத்துவதற்காகவும் பல கிறித்தவர்கள் சிரத்தை எடுத்து பணியாற்றி வருகின்றனர். தேவனால் எண்ணற்ற கருவிகள் நம் கரங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

நாம் தனிப்பட்ட கிறித்தவர்களாக, சபையாக நம்மிடத்தில் ஒப்புவிக் கப்பட்டிருக்கிற பணியை எப்படி நிறைவேற்றுவோம்?

✝

## அந்திய நாட்களை அருமையாக்க...

- உங்களுக்கு வயதாகி விட்டது என்கிற உண்மையை நினைத்துப் புலம்பாதீர்கள். உங்களுக்கு வயதாகியிருக்க வில்லையென்றால் நல்ல அனுபவங்கள் கிடைத்திருக்காது.
- உங்களால் முடிந்தவரை உங்கள் தோற்றத்தைப் பராமரியுங்கள். நன்றாக பாதுகாக்கப்பட்ட பிரதானப் பொருட் கள் அழகானவைகளாகவே இருக்கின்றன.
- தன்னிறைவு அடைய கற்றுக்கொள்ளுங்கள் ; ஏனென்றால், நீங்கள் தன்னந்தனியாக விடப்படும் நேரம் ஒருவேளை வரலாம்.
- கடந்த காலத்தை நினைத்து வாழாதீர்கள்.
- கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தில் வாழக் கற்றுக் கொள் ளுங்கள். நீங்களும் தேவனும் சேர்ந்து சமாளிக்க முடியாத சூழ் நிலை என்று எதுவுமில்லை..

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| பிச்சைக்காரன் | Louis Rushmore | ... 1 |
| மானிடத்தின் மாபெரும் தவறு | E.Z.S. Rajanayagam | ... 3 |
| ஏன் கிறிஸ்தவர்கள் இவ்வுலகில்... | J.C. Choate | ... 7 |
| அவர் எங்கே நடத்துகிறாரோ ... | Jerry Bates | ... 13 |
| நாம் தேவனுடைய பிள்ளைகள்... | E.Z. Selvanayagam | ... 16 |
| திருமறையும், தோழமையும்... | P.C. Philemon Rajah | ... 20 |
| எங்களுடைய தகுதி தேவனாலே .... | B. Arjunan | ... 24 |
| நம் நம்பிக்கை நலிவடைந்துவிட்டதா? | Benny Martin | ... 28 |

**தேவன் – God**

| | | |
|---|---|---|
| மிகவும் பிரியமானவன் | Raymond Elliot | ... 31 |
| அதரிசனமானவரை தரிசித்தல் | Brian Kenyon | ... 33 |
| தேவன் எங்கே இருக்கிறார் ... | Robert D. Rawson | ... 35 |
| தேவனைப் பற்றிய சரியான பார்வை | Jop W. Nichols | ... 36 |

**சாட்சியங்கள் – Evidences**

| | | |
|---|---|---|
| செங்கடலைப் பிளத்தல் | Robert Johnson | ... 38 |
| மறுக்கமுடியாத சாட்சியங்கள் | Betty Burton Choate | ... 40 |

**தேவனுடைய வார்த்தை – The Word of God**

| | | |
|---|---|---|
| நற்செய்திப் புத்தகங்கள் இடையே வேறுபாடு | Kevin.L.Moore | ... 45 |
| வேதாகமத்திற்கு அறிமுகம் | Jeremy Barrier | ... 49 |

**சபை – The Church**

| | | |
|---|---|---|
| ஜீவனை ஓட்டச்செய்யும் | Clarence Lavender | ...53 |
| ஊழியக்காரர்கள் | Dwight Fuqua | ...56 |
| மற்றவர்களோடு நன்றாக வேலை ... | Ronald D. Reeves | ...58 |

**செயலில் கிறிஸ்தவம் – Christianity in Action**

| | | |
|---|---|---|
| தேசமே, உனக்கு ஐயோ! | Denny Petrillo | ...59 |
| நியாயமான சோதனை | Aaron Cozort | ...61 |
| கிறிஸ்தவ உறவுகள் | Gary C.Hampton | ...63 |

## ஆராதனை – Worship


| | | |
|---|---|---|
| நம் ஜெபங்களுக்கு தடையா... | David Conley | ...66 |
| ஆவியோடும், கருத்தோடும் | Rudney Nulph | ...67 |
| பாடல் | Cecil may. Jr | ...70 |


## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை – Daily Christian Living


| | | |
|---|---|---|
| அசிங்கத்தை மேற்கொள்ளுதல் | Tam Raynor | ...71 |
| உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது | Sunny David | ...73 |
| நாள் முழுவதும், ஒவ்வொரு நாளும்... | Marilyn lastrape | ...76 |


## கிறிஸ்தவ இல்லம் – Christianity in Action


| | | |
|---|---|---|
| ஒரு நபரா அல்லது வெறுமனே... | Victor M. Eskew | ...79 |
| வீட்டில் கிறிஸ்தவர்கள் | Beth Johnson | ...81 |
| ஆவிக்குரிய பிரகாரமாகவா ... | T. Pierce Brown | ...84 |


## வேதாகம கதாபாத்திரங்கள் – Bible Characters


| | | |
|---|---|---|
| காலத்துக்கு முன்னே ஒன்றையுங்... | JohnGipson | ...89 |
| மூழ்கும் ஆத்துமாக்கள் | Therman Hodge | ...91 |


## வேதாகம கேள்விகள் – Bible Questions


| | | |
|---|---|---|
| ராஜ்யம் வருகிறதா? | Thomas Baxley | ...94 |
| பலதரப்பட்ட மத சம்பந்தமான... | Ken Tyler | ...96 |


## வேதாகம வரலாறு – Bible History


| | | |
|---|---|---|
| மகா அலெக்சாண்டர் | David R. Kenney | ...99 |
| ஆசீர்வாதத்தை பகிர்ந்து கொள்... | Derek Broome | ...101 |
| ஒரு நாளில் ஏழு தரம் | JJ. Turner | ...102 |
| உயிர்தெழுதலுக்கு சாட்சி ... | Serge Shoemaker | ...105 |
| இப்படி ஒரு காட்சி அமைய வாய்... | Betty Burton Choate | ...107 |
| தொடர்ச்சியாக கவனமாயிருங்கள் | Tom Baxley | ...108 |
| அன்பு அயோக்கியமானதைச் .... | Cecil May Jr | ...109 |



# அவர் எங்கே நடத்துகிறாரோஅங்கே அவரை பின் பற்றுவேன்

# Where he Leads, I Will Follow

JERRY BATES

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அநேகமாக மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் வாக்கியத்தை தாங்கள் ஏற்றுக் கொள்வதாக சொல்வார்கள். வேதாகமும் நாம் இதேவிதமான மனப்பான்மையை கொண்டிருக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறது. இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்: ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப் போனார் [1பேதுரு 2:21]. இவ்வசனப்பகுதி இரண்டு முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியது. கிறிஸ்து நம்முடைய மாதிரியாயிருக்கிறார். எப்படி ஒரு கட்டிடமானது அதன் மாதிரியின்படியே கட்டப்பட வேண்டுமோ அதேபோல் நாமும் கிறிஸ்து என்னும் மாதிரியை அப்படியே பின்பற்ற வேண்டும். இரண்டாவது, அவருடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து வருபவராக நம்மை உள்ளடக்கியிருக்கிறது. அதாவது, எப்படி ஒரு சிறு பையன் தன் அப்பாவின் அடிச்சுவடுகள் மீது தன் கால்களை வைத்து நடப்பானோ அதைப்போல் நாம் கிறிஸ்துவைப் பின் தொடர வேண்டும். இந்த எதிர்பார்ப்பை எதிரொலிக்கும் பாடல் ஒன்று உண்டு. பின் செல்வேனே மீட்பர் பின்செல்வேனே என்பது அப்பாடலாயிருக்கிறது.

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவது பரவச மூட்டும் ஒன்றாகத் தோன்றலாம். இயேசு இவ்வுலகில் ஒரு சாதாரண மனிதனாகத்தான் வாழ்ந்தார். நம்மைப்போல் உணர்வுள்ளவராகத்தான் இருந்தார். ஆகவே, நாம் கடினமான வேளைகளை கடந்து வரும் போது கிறிஸ்துவும் நம்மைப் போல் கடினமான வேளைகளை கடந்து வந்திருக்கிறார் என்பதை நிச்சயித்துக் கொள்ளமுடியும். நாம் வாழ்வின் உன்னதமான நிலையை அடைந்ததுபோல் கிறிஸ்துவும் வாழ்வின் உன்னதமான நிலையை அனுபவித்திருக்கிறார். இருந்த போதிலும், நாம் தொடர்ந்து 1 பேதுரு 2 ஆம் அதிகாரத்தை வாசிக்கும்போது நம் பரவசம் குறைந்துவிடுகிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது ஒரு சாகசமல்ல. மாறாக, வெறும் கடின உழைப்புதான் என்பதை காணமுடியும். 23 ஆம் வசனத்தில் நாம் அவர் வையப்படும் போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்பு செய்கிறவருக்குத்

தம்மை ஒப்புவித்தார் என்று வாசிக்கிறோம். நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதில் பாடுகளும் உள்ளடக்கம்தான்.

இயேசு என்னை எங்கெல்லாம் வழிநடத்துகிறாரோ அங்கெல்லாம் அவரைப் பின்பற்றுவேன் என்று சொல்வது எளிதானதுதான். ஆனால், பெரும்பாலும் அவ்வார்த்தைகளைச் சொல்கிறவர்கள், அவ்வார்த்தைகளின்படி நடப்பதில்லை. யாத்திராகமம் 19:8 ல் இஸ்ரவேல் ஜனங்கள் “கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்” ஆனால், தேவன் கொடுத்த கட்டளைகளில் பெரும்பாலானவைகளை அவர்கள் மீறினார்கள். மத்தேயு 8:19 ல் “வேதபாரகன் ஒருவன் வந்து : போதகரே நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன்” என்றான். இந்த மனிதன் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி இந்த வார்த்தைகளை சொன்னபோது திரளான ஜனங்கள் இயேசுவைப் பின்பற்றிக் கொண்டிருந்தார்கள். அவர் பல்வேறுபட்ட வியாதியஸ்தர்களை சுகமாக்கிக் கொண்டிருந்தார். இந்த வேதபாரகன் இயேசுவைப் பின்பற்றுவது பரபரப்பும், பரவசமும், அற்புத அடையாளங்களும் நிறைந்த பயணமாக இருக்கும் என்று கற்பனை செய்துகொண்டான் என்று தோன்றுகிறது. ஆனால், இயேசு அந்த எண்ணத்திற்கு சீக்கரமாக முற்றுப்புள்ளி வைத்தார். இயேசுவைப் பின்பற்றுவது என்பது துக்கம், அவமானம் மற்றும் மரண பாதைகளில் நடப்பது போன்றது. நம்மை முற்றிலுமாக அவருக்கென்று அர்ப்பணிக்க வேண்டும்.




**நான் இயேசுவைப் பின்பற்றுகிறேன்**

இது செய்து முடிக்கக் கடினமான ஒன்றாக இருக்கிறது. பலர் தாங்கள் அர்ப்பணிப்பு இருப்பதாக சொன்னாலும் கூட அது குறிப்பிட்ட அளவுக்குத்தான் இருக்கிறது. அந்த அளவு, நபருக்கு நபர் மாறுபடும். சிலருக்கு அந்த அளவு சபையின் மூப்பரானால் பிறரால் விமர்சனத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்பதற்காக அப்பொறுப்பு எனக்கு வேண்டவே வேண்டாம் என்று சொல்வதை நான் கேள்விப் பட்டிருக்கிறேன்.

கிறிஸ்து ஒருபோதும் விமர்சிக்கப்பட வில்லையா ? சிலர் ஒருபோதும் தங்கள் குடும்பத்தையும், நண்பர்களையும் விட்டுவிட்டு கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களுக்கு போதிக்க விருப்பம் கொள்வதே இல்லை. சிலர் கிறிஸ்துவுக்காக எதையாவது செய்தால் அதன்மூலம் தங்களுக்கு கன மும், புகழ்ச்சியும் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இயேசுவைப் பின்பற்றுவது என்பதன் பொருள் என்னென்ன செய்யப்பட வேண்டுமோ அதைச் செய்யத் தயாராக இருப்பது என்றும் பொருள்படும். இது கர்த்தருக்காக மற்றவர்கள் காரியங்களை ஆற்ற அவர்களுக்கு உதவுவதையும் உள்ளடக்கும். கிறிஸ்துவை உண்மை யாகப் பின்பற்றுவது என்பதன் பொருள் நம் ராஜ்ஜியத்திற்காக அல்ல, தேவனுடைய ராஜ்ஜியத்திற்காக நாம் வேலை செய்வதாகும்.

இது ஒருவர் கர்த்தருக்காக வேலைசெய்து அதன் மூலமாக அவர் கள் புகழ்ச்சியைப் பெற்றுக்கொண்டாலும் அவர்களுக்கு உதவுவதற் கும் பொருந்தும். இந்த உணர்வை கர்த்தருக்காக பாடுபட ஆயத்தப்படு என்னும் பழம்பெரும் பாடல் எதிரொலிக்கிறது.

அவர் எங்கே நடத்துகிறாரோ அங்கே அவரை நான் பின்பற்று வேன் என்பது மதிப்புமிக்க ஒரு வாக்குறுதிதான். ஆனால், அதில் ஈடுப டுத்தப்பட்டிருக்கும் காரியங்களைச் செய்ய நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். அதினிமித்தம் நாம் நிச்சயித்துக்கொள்ளலாம். ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணு வார் என்று இயேசு வாக்குத்தத்தம் செய்தார்.

✝

---

## இயேசுவினிடத்தில் என்ன இருக்கிறது?

1. *அவருடைய கண்களில் ஜீவ ஒளியிருக்கிறது*
2. *அவருடைய குரலில் சத்திய வாக்கிருக்கிறது*
3. *அவருடைய கரங்களில் ராஜ்யத்தின் வேலையிருக்கிறது*
4. *அவருடைய இருதயத்தில் பிதாவின் அன்பிருக்கிறது.*

# நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று உலகம் எதினால் அறியும் ?

# How The World Will Know That we are children of God?

E.Z.S. Selvanayagam

இன்றைய உலகம் விளம்பரம், ஆர்ப்பாட்டம், படோடாபம் ஆகிய வற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. அது அரசியலுக்குள் புகுந்து தொண்டுள்ளம், பொது வாழ்க்கையில் தூய்மை, கொள்கைப்பிடிப்பு ஆகிய நன்னெறிகளில் நம்பிக்கையுள்ள சான்றோர்களை ஓரம் கட்டி விட்டது. இப்பொழுது அது சமயங்களுக்குள்ளும் தன்னுடைய வேலையை ஆரம்பித்திருக்கிறது. நாள்தோறும் ஏதாவது ஒரு விழா, வீதிக்கு வீதி சமயப்பேருரைகள் என்ற பெயரால் கோஷங்கள், கொட்டு முழுக்கங்கள், ஆர்ப்பாட்டங்கள், கூட்டம் சேர்ப்பதற்காக பலவிதமான ஆட்டங்கள், வானவேடிக்கைகள் – ஒரு குறிப்பிட்ட கடவுளுக்கு எவ் வளவு சக்தி இருக்கிறது என்று அறிந்து கொள்ள அங்கு கூடுகிற கூட் டம் தான் அளவு கோல் போலும் ! கூட்டத்துக்கு வருகை தருபவர்கள் எதைப் பார்க்கக் கூடி வந்திருந்தாலும் அவர்கள் அனைவரும் பக்த கோடிகள் என்று முத்திரை குத்தப்படும்.

அவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஏனெனில் அவர்களுடைய சமயங்கள் மனித கற்பனைகளால் தோற்றுவிக்கப் பட்டவைகள். அவர்கள் செய்யும் பூஜை மற்றும் ஆராதனைகள் செய்பவர்களுடைய சுய திருப்திக்காகவே. சம்பந்தப்பட்ட கடவுள்கள் அதை ஏற்றுக்கொள்ளும் என்று அவர்கள் நம்புவதில்லை. ஆகவே, நாம் அவர்களிடமிருந்து பெரிதாக ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் சில கூட்டத்தினர் தங்கள் பக்தி நிலையை உலகுக்குத் தெரிவிக்க மேலே குறிப்பிட்டவர்கள் கையாளும் அதே யுக்திகளைப் பின்பற்றும்போது நமது மனம் வேதனை அடைகிறது. நாம் தேவனுடைய பிள்ளைகள் அல்லது கிறிஸ்துவின் சீடர்கள் என்று உலகம் எதனால் அறியும் என்ற கேள்விக்கு இயேசு கிறிஸ்து தாமே பதில் சொல்லியிருக்கிறார். **'நீங் கள் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாக இருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீசர்கள் என்று எல்லோரும் அறிந்து கொள் வார்கள்** என்கிறார் [யோவான் 13:35] ஆனால், சில மக்கள் இந்த எளிமையான, கர்த்தரே சொன்ன முறையைப் பின்பற்றாமல், இப்பிர

பஞ்சத்தாரின் முறைகளில் ஆசை வைத்து அவர்களுடைய பாணியில் செயல்பட்டு வருகிறார்கள். நாம் தேவனுடைய பிள்ளைகள் அல்லது கிறிஸ்துவின் சீஷர்கள் என்று உலகம் அறிந்து கொள்வதற்கு நாம் கொட்டி முழங்கி ஆவேசம் வந்தவர்கள் போல் கூச்சல்போட்டு ஊரைத் திரட்ட வேண்டும் என்கிறார்கள்.

பேய்கள் போகிறதோ இல்லையோ, அவைகளை நாங்கள் துரத்துகிறோம் என்று சொல்லிக்கொண்டு கத்திக் கூப்பாடு போட வேண்டும். கேட்கிறவர்களுக்கு விளங்குகிறதோ இங்லையோ நாங்கள் அந்நிய பாஷை பேசுவோம் என்று எதையாவது உளரவேண்டும் என்று எண்ணி செயல்படுகிறார்கள். வெளித் தோற்றத்திலும், ஆடைகளிலும் ஒரு குறிப்பிட்ட "ட்ரேடு மார்க்" ஏற்படுத்திக்கொள்கிறார்கள்.

இதைக்குறித்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்வதைக் கவனியுங்கள் : **'பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே ! கர்த்தாவே ! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி, கர்த்தாவே ! உமது நாமத்தினால் திர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா என்பார்கள்.**

**அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்** என்கிறார். (மத் 7: 21–23)

இருப்பினும் இந்த மக்கள் தேவனால் வரும் மகிமையைக் காட்டிலும் மனிதரால் பாராட்டுப் பெறுவதற்கும், சபல புத்தியுள்ளவர்களை வசப்படுத்திக் கொள்வதற்கும், தேவனுக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தங்கள் மாமிசமும், மனசும், விரும்பினதைச் செய்வதில் ஆர்வமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் (யோவான்12:43;2 தீமோ 3:7;எபே 2:3) இவர்கள் தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்களை வாரி வழங்குகிறார்கள் ; இரட்சிப்பு அடைந்து விட்டர்கள் என்று சான்றிதழ் வழங்குகிறார்கள். (2 பேது 2 : 19) இதைக் குறித்து அப்போஸ்தலன் பவுல், **'இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிறபேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுவதற்கேயொழிய மற்றொன்றிற்கும் பயன்படாது** என்கிறார். (கொலோ 2:23).

ஆம், சகோதரர்களே ! கர்த்தருடைய வழி சுலபாமானது, தெளிவானது, வாழ்க்கையை மாற்றி அமைக்கக் கூடியது. அதைக்கற்று, சிந்தித்துக் கைக் கொள்ள வேண்டும். [வெளி 1:3] அதற்கு மாற்று வழியோ, குறுக்கு வழியோ கிடையாது.

**நான் சொன்ன வசனமே ஒருவனைக் கடைசி நாளில் நியாயம் தீர்க்கும்** என்று இயேசுவே கூறியிருக்கிறார். [யோவான் 12:48] ஆகவே, கிறிஸ்துவின் உபதேச நெறிகளின் மேன்மையை உணர்ந்து அதை வாழ்க்கையில் கைக்கொண்டால் உலகம் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அடையாளம் கண்டு கொள்ளும்.

வேறு ஒரு ரக மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனலுமில்லாமல், குளிரும் இல்லாமல் இருப்பவர்கள் [வெளி 21:6]. அவர்களுடைய நிலையை பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர் எசேக்கியேல் மிகத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். '**ஜனங்கள் கூடி வருகிற வழக்கத்தின்படி, உன்னிடத்தில் வந்து, என் ஜனங்கள் போல் உட்கார்ந்து உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள். ஆனாலும், அவர்கள் அதன்படிசெய்வதில்லை, அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள், அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப் போகிறது.** எபே 33:31.

வாரம் ஒரு முறை சபை கூடி வருகிறது. அது வழக்கத்தின்படி தானேயல்லாமல் கர்த்தர் செய்த எண்ணற்ற நன்மைகளுக்கு நன்றி கூற வேண்டும் என்றோ, அவரைப் பாடித்துதித்து மகிமைப் படுத்த வேண்டும் என்றோ, அவரை நினைவு கூர வேண்டும் என்ற ஆர்வம் காரணமாகவோ அல்ல – சடங்காச்சார முறைகளில் ஒன்றையும் விட்டு விடாமல் கிரமத்தின்படி ஆராதனை ஒழுங்கு முறைகளைப் பின்பற்றி, ஜெபித்து, பிரசங்கம் கேட்டு காணிக்கை கொடுத்தால் போதுமா ? கேட்டவற்றைக் கைக்கொள்ள வேண்டியதில்லையா ? மரம் மிகச் செழிப்பாக, இலைகள் பச்சையாக, பார்ப்பதற்கு அழகாக இருந்தால் மட்டும் போதுமா ? கனிகள் வேண்டாமா ? மரத்தின் சிறப்பு நிலை என்ன ? கனி கொடுப்பதல்லவா ?

கிறிஸ்துவின் போதனைகள் ஈடு இணையற்றவை. அவைகளை நாம் வாழ்க்கையில் கைக்கொண்டு நடந்தால் உலகை வெல்லலாம். இயேசுகிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்களை இரண்டு பொருளுக்கு ஒப்பிடுகிறார். ஒன்று **உப்பு** மற்றொன்று **வெளிச்சம். நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும் மனுஷரால்**

**மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாதுசு** (மத் 5:13) இங்கே கர்த்தர் சொல்ல விரும்புகிறது என்ன ? சாரமுள்ள உப்பாக அதாவது, கொள்கைப்பிடிப்புள்ள கிறிஸ்தவனாக வாழாவிட்டால் நீ பயனற்றவன் என்கிறார். உப்பு எப்படி தன்னை அழித்துக்கொண்டு (கரைந்து ) பண்டங்களுக்கு ருசி கொடுக்கிறதோ அவ்விதமாக தியாக வாழ்வு வாழ்ந்து மற்றவர்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்கு உதவ வேண்டும்.

**நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருங்கள் (மத் 5: 14) உங்கள் வெளிச்சம் மக்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக் கடவது. இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளை கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துவார்கள்.** (மத் 5;16) இதன் கருத்தென்ன ? இங்கேயும் எப்படி ஒரு மெழுகுவர்த்தி தன்னை எரித்துக்கொண்டு மற்றவர்களுக்கு வெளிச்சம் கொடுக்கிறதோ அது போன்று உங்கள் அர்பணிப்பு உணர்வைப் பார்த்து மக்கள் வியந்து நாம் வணங்கும் தேவனுடைய மகிமையை உணர்ந்து அவர்களும் நம்மைப் பின்பற்றுவார்கள். தானியேலின் உறுதியான விசுவாசம் அந்நாட்டு அரசனையே வியப்படையச் செய்யவும், மெய்யான தேவன் யெகோவாவே என்று அறிக்கை செய்யவும் ஏதுவாயிருந்ததை நினைவு கூருங்கள். (தானியேல் 6:25–26)!

### ஜெப வேளையில் ஒருவர் என்ன செய்கிறார் ?

- அவர் தன்னுடைய பரமப் பிதாவோடு பேசுகிறார் (மத்தேயு 6:9)
- அவர் தன்னுடைய விண்ணப்பத்திற்கு தேவனால் பதிலளிக்க முடியுமென்று தன் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறார் (யாக் 1:5,6)
- அவர் தனக்காக செயல்படும்படியாக இயேசு கிறிஸ்துவை அனுமதிக்கிறார் (I தீமோ 2:5)
- அவர் ஜெபிக்கும் போது தேவனை சந்தோஷப்படுத்துகிறார் (நீதிமொழிகள் 15:8).

# திருமறையும், தோழமையும்...
# Bible and Friendship

P.C. Philemon Rajah

**நட்பு என்பது என்ன ?**

நீதிமொழி 18:24 "சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும்; சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு".

தோழமை என்பதை சிநேகம் என்றும், நண்பர்களை சிநேகி தன், சிநேகிதி எனவும் நாம் வடமொழியில் அழைப்பது உண்டு. இந்த தோழமை பற்றியும் தோழர்கள் பற்றியும் நம் அனைவருக்கும் மிக உயர்ந்த அபிப்ராயம் உண்டு. தோழமை என்பது பொதுவாகவே, ஆண், பெண், இனம், மதம், ஏழை, பணக்காரன், படிப்பு, பணம், வயது, இடம் மற்றும் உறவு என பாகுபாடின்றி அனைவரிடமும் ஒட்டிக்கொள்ளும் ஒரு நற்குணமாகும். மேலும், எந்தவித எதிர்பார்பின்றி ஏற்படும் ஒரு உறவாகவும் நட்பினைப் பற்றி அநேகர் சொல்வதை நாம் கேள்விப்பட் டிருக்கிறோம்.

**ஏசாயா 41:8,9** "என் தாசனாகிய இஸ்ரவேலே, நான் தெரிந்து கொண்ட யாக்கோபே, என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே, நான் பூமியின் கடையாந்திரங்களிலிருந்து, உன்னை எடுத்து, அதின் எல்லைகளிலிருந்து அழைத்து வந்து; நீ என் தாசன், நான் உன்னைத் தெரிந்து கொண்டேன், நான் உன்னை வெறுத்துவிடவில்லை என்று சொன்னேன்".

தோழமை என்பது ஏறக்குறைய அனைவருக்கும் பிடித்தமான ஒன்று தான். இந்த அண்டசராசரங்கள் அனைத்தினையும் ஒன்றுமில் லாமையிலிருந்து படைத்து, அதனை தனது கட்டுப்பாட்டில் வைத்து ஆளுகின்ற இராஜாதி இராஜாவாகிய பரலோக பிதாவும் கூட, ஆபிர காம் என்ற ஒருவனை தன் தோழன் என்றும், அவனுடைய தலைமு றைகளை என் தோழனின் சந்ததியே எனவும் உரிமையோடு அழைக் கின்றார். மேலும், என் தோழனின் நிமித்தம் உன்னைக் கைவிட மாட் டேன், பாதுகாப்பேன் என்கின்றார். இவைகள் நமக்கு தோழமையின் மேன்மையை அல்லவா வெளிப்படுத்துகின்றன.

**கர்த்தரும், நட்பும்**

**யோவான்** 15:15 "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல் லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியாமாட் டான், நான் உங்களைச் சிநேகிதர் என்றேன். ஏனெனில், என் பிதாவி னிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறி வித்தேன்".

ஆண்டவர் இயேசு தமது அப்போஸ்தலர்களைப் பார்த்து, இனி நீங்கள் எனது பணிவிடையாளர்கள் மாத்திரமல்ல, நண்பர்கள் என்றார். ஏனெனில், நான் பிதாவினிடத்தில் அறிந்துள்ள அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன் என்றார். ஆகையால், ஆண்டவர் இயேசு அப்போஸ்தருக்கு அறிவித்த உபதேசங்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டபடியினால் நாமும் ஆண்டவருடைய ஊழியர்களாக மாத்திரமன்றி நண்பர்களாகவும் இருக்கின்றோம் என சொல்வது ஒன்றும் மிகையாகது.

கர்த்தருடைய சிநேகம் என்பது துவக்கமும், முடிவுமற்றதாகவும், கருணை பொருந்தியதாகவும் இருக்கின்றது. அந்த கருணை நம்மை மீட்கின்றது. நம் மீது இரக்கம் கொள்கின்றது. மேலும், அது நம்மை அவரிடம் கிட்டிச் சேர்க்கின்றது.

**எரேமியா** 31:3 "பூர்வகாலமும் கர்த்தர் எனக்குத் தரிசனமானார் என்பாய்; ஆம், அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன் ; ஆதலால், காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்".

கர்த்தருடைய சிநேகம் என்பது நமது சீர்கேட்டை குணமாக்குவதாக இருக்கின்றது. அதாவது, கர்த்தர் தாம் சிநேகிக்கின்றவர்களை, அவர்கள் தவறுகளிலிருந்து திருத்தி, சீர்படுத்துகின்றார். மேலும், அவரதுசிநேகம் என்பது மனப்பூர்வமானதாக இருக்கின்றது.

**ஓசியா** 14:4 "நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன் ; மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன் ; என் கோபம் அவர்களைவிட்டு நீங்கிற்று".

கர்த்தருடைய சிநேகம் என்பது நம்மை தைரியமாகவும் மற்றும் விசுவாசமாகவும் வாழத்தூண்டுவதாகவும் வழி நடத்துவதாகவும் இருக்கின்றது. நாம் நமது எதிர்காலத்தினை குறித்தோ, நம்மை எதிர்ப்பவர்களைக் குறித்தோ கலக்கம் கொள்ளவேண்டாம் என்கின்றது. நீங்கள் அஞ்சுவதாக இருந்தால் உங்கள் ஆத்துமாவை அழிக்க வல்லவராகிய பிதாவிற்கே அஞ்சுங்கள்; மற்றொன்றிற்கும் அஞ்சவேண்டாம் என்பதாக இருக்கின்றது.

**லூக்கா** 12:4 "என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன்; சரீரத்தைக் கொலைசெய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லதாவர்களுக்கும் பயப்படாதிருங்கள்".

கர்த்தருடைய சிநேகம் என்பது நமக்காக தன்னையே பலியாகக் கொடுப்பதாக இருக்கின்றது. அதுவும் சாதாரணமானது அல்ல, மிகவும்

அவமானப்பட்டு, பயங்கரமாக அடிக்கப்பட்டு, எல்லோராலும் கைவி டப்பட்டு, கொடூரமாக மரிப்பதாக இருந்தது. நாம் நித்தியமாக நிம்மதி மற்றும் மகிழ்வுடன் பரலோகில் வாழும்படி, அநித்தியமான இவ்வுல கில் அவரது சிநேகம் தன்னையே பலியாக தாரை வார்ப்பதாக இருந் தது.

**யோவான்** 15:13 "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொ டுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.

ஆயினும், இந்த உயர்ந்த சிநேகத்தினை உணராதவர்களாக தான் அநேகர் இருக்கின்றனர் என்பதே மிகவும் வருந்தக்கூடிய ஒன்றாக இருக்கின்றது. அது மாத்திரமின்றி, கர்த்தருக்கு தங்களை நேசிக்க வில்லை என இஸ்ரவேலர் குறை சொன்னதுபோல, குறை சொல்பவர் களாகவும் இருக்கின்றனர். கர்த்தர் தன்னுடைய சிநேகத்தினை வெ ளிப்படுத்தியுள்ளார். அதனை அறிய வேண்டியதும் நமது முக்கிய கட மையாகும் என்பதனை நினைவில் கொள்வோம்.

**மல்கியா** 1:2 "நான் உங்களைச் சிநேகித்தேன் என்று கர்த்தர் சொல்லு கிறார்; அதற்கு நீங்கள்; எங்களை எப்படிச் சிநேகித்தீர் என்கிறீர்கள் ; கர்த்தர் சொல்லுகிறார் ஏசா யாக்கோபுக்குச் சகோதரன் அல்லவோ ? ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன்.

**நம்முடைய நட்பு**

**நீதிமொழி** 27:5 "மறைவான சிநேகத்தைப் பார்க்கிலும் வெளிப்படை யான கடிந்துகொள்ளுதல் நல்லது".

நம்முடைய நட்பு எப்படிபட்டதாக உள்ளது ? நாம் யாருடன் நட்பாக இருக்கின்றோம் ? நம்முடைய நட்பின் வட்டம் என்ன ? என்பது மிகவும் அவசியமானதே. "உன் தோழனை காண்பி, நீ யாரென்று சொல்கின்றேன்" என்ற சான்றோர் வாக்கினை நாம் அறிவோம். நண் பனை வைத்து நம்மை அறிந்துகொள்ளுமளவு நட்பு என்பதும், அதன் செல்வாக்கும் வலிமையானதாக இருக்கின்றது. ஆகையால், இந்த வலிமையான சிநேகத்தினை நாம் யாரிடத்தில் கொண்டிருக்கின் றோம் என்பது மிகவும் முக்கியமானது.

ஆண்டவர் இயேசு தன்னை பின்பற்றுகின்ற சீடர்களின் மத்தியில் தன து நண்பர்களை தேர்வு செய்யுமுன் இரவு முழுவதும் ஜெபித்தார் என நாம் பைபிளில் வாசிக்கின்றோம் [**லூக்கா** 6:12,13]. நண்பர்களை தேர்வு செய்வதில் நாம் கவனமாகத்தான் இருக்க வேண்டும். ரகசிய மான நட்பினைவிட, நம்மை வெளிப்படையாக கண்டிக்கும் நட்பே மேலானது என சாலமோன் ஞானி கூறுகின்றார்.

ஆயினும் இன்றைய நாட்களில் இரகசிய நட்பே பெரிதாக விரும்பப்படு கின்றது. யாரென்று அவர்களை பற்றி தெரியாது. ஆனால், அவர்களை நண்பர்கள் என்போம். சமூக வலைத்தளங்களில் உறவும், உரிமையும் கொண்டாடுகின்றோம். அதனால் வரும் பின்விளைவுகளை நாள்தோறும் நாளேடுகளில் படித்தாலும் அதனைப் பற்றிய விழிப்புணர்வு அற்றவர்களாகவே இருக்கின்றோம். அப்போஸ்தலர்கள் தங்கள் நட்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு இருப்பதாக கூறினர் (1 யோவான் 1:1-3). மேலும், நாமும் ஆண்டவர் இயேசுவோடு நட்பாக இருக்க முடியும் எனவும், நட்பாக இருக்க வாருங்கள் எனவும் பைபிள் அறை கூவல் விடுக்கின்றது.

யோவான் 15:14 "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்".

நாம் சக மனிதர்களிடம் காண்பிக்கும் நட்பு என்பது அவர்களது வாழ்வில் ஆண்டவர் இயேசுவை தோழராக கொடுத்து, பாவத்தினால் இருளான வாழ்வை ஒளியேற்றுவதாக இருக்க வேண்டும். நூற்றுக்கதிபதியாக கொர்நெலியு அதை செய்தார் என்பதனை நாம் பைபிளில் வாசிக்கின்றோம். இந்த நிகழ்ச்சி நம்மை அந்த முன்மாதிரியை பின்பற்றும்படி உந்தவே ஆவியானவரால் பைபிளில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை நாம் நிச்சயம் சிந்தித்தே ஆகவேண்டும்.

அப்போஸ்தலர் 10:24 "மறுநாளிலே செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள். கொர்நேலியு தன் உறவின் முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து, அவர்களுக்காகக் காத்திருந்தான்.

இறுதியாக, அன்பான சகோதர, சகோதரிகளே நட்பு என்பது சிறந்ததே. அதனை நாம் சரியானவர்களிடத்தில், சரியான வழியில் வெளிப்படுத்தும்போது, அது கண்ணியமானதாக இருக்கின்றது. நமது நட்பு என்பது ஒருவரை கிறிஸ்துவிடம் சேர்த்து, அவரது வாழ்வில் பாவ விடுதலையை, பரிசுத்தத்தினை மற்றும் பரலோகத்தின் பெற்றுக்கொள்ள பயனுள்ளதாக இருக்கும்படி பார்த்துக் கொள்வோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

✝

# எங்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது

## Our Sufficiency is from God

B. Arjunan

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும் போது: ''எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல: எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது'' என்கிறான் [2கொரி.3:5]. ஆம், அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அவரே அவர்களை அழைத்தும் இருக்கிறார். பிதாவாகிய தேவன் அவர்களைத் தகுதிப்படுத்தியிருக் கிறார். அவர்கள் தங்களைத் தாங்களே தகுதிப்படுத்திக் கொள்ள வில்லை. எங்களால் எல்லாம் கூடும் என்று சொல்லவு மில்லை. சகல அதிகாரம் உடைய ஆண்டவருடைய ஊழியக் காரர்களாக, சீஷர் களாக, அப்போஸ்தலர்களாக அழைக்கப்பட்டார்கள்.

ஒருநறை பேதுருவும், யோவானும் தேவாலயத்திற்கு போகும்போது ஒரு சப்பாணி குணமாக்கப்பட்டான்; அந்த ''குணமாக்கப்பட்ட சப்பாணி பேதுருவையும் யோவானையும் பற்றிக்கொண்டிருக்கையில், ஜனங்களெல்லாரும் பிரமித்து, சாலொமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபத்திலே அவர்களிடத்திற்கு ஓடிவந்தார்கள். பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலரே இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது. எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணி னோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?'' என்று கேட்டார்கள் [அப்.3:11,12], இப்படிப்பட்ட அற்புதத்தை அவர்கள் பார்த்தவுடன் மிகவும் ஆச்சரியத்துடன் பேதுருவையும், யோவானையும் நோக்கிப் பார்க்க ஆரம்பித்தார்கள். அவர்களிடத்தில் எந்தவிதமான சக்தியோ அல்லது அவர்களுடைய பக்தியுள்ள காரியத்தினாலோ இந்த சப்பாணி சுகமாக்கப்படவில்லை. ஆனால் இவர்களால்தான் இந்த சம்பவம் நடந்திருக்கிறது என்ற ஆச்சரியத்தோடு அவர்களை நோக்கிப் பார்த்தனர். அநேகர் தங்கள் மூலமாகவே எல்லாம் நடைபெறுகிறது என்று சொல்லி தன்னுடைய பெயர் பிரஸ்தாபத்தை விரும்புகின்றனர். ஆனால் அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய நாமத்தையே உயர்த்த விரும்பி இயேசுவின் நாமமே இந்த சர்வாங்கிகத்தை இவனுக்குக் கொடுத்தது என்றனர்.

மேலும், அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும், அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலொமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள்'' என அப்.5:12-ல் வாசிக்கிறோம். கர்த்தர்

பரமேறி சென்றபின்பு அப்போஸ்தலர்களைக் கொண்டு தேவன் பெரிய காரியங்களை புதிய ஏற்பாட்டு சபையின் துவக்க காலத்தில் செய்துகொண்டுவந்தார். அதைப்போல பவுலும் பர்னபாவும் ஊழியம் செய்துகொண்டுவந்த நாட்களில் ஒரு சம்பவம் நடந்தது; ''பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கிவந்திருக்கிறார்கள் என்று விக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி, பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள். மனுஷரே. ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப்பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்'' என்றார்கள் [அப்.14:11,12,15].

பிறந்ததுதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் இருந்த அவனை பவுல் உற்றுப்பார்த்து அவனுக்கு இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் உண்டென்று கண்டு; நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில் என்று உரத்த சத்தத்தோடே சொல்ல அவன் குதித்தெழுந்து நடந்தான் [அப்.14:9,10]. இந்த அற்புதத்தைக் கண்ட ஜனங்கள் மனுஷர்கள் தேவர்கள் ரூபமெடுத்து வந்திருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களுக்கு பூமாலைகளையும் எருதுகளையும் பலியிடும்படியாக கொண்டுவந்தார்கள். இந்த புகழ்ச்சியை எற்றுக்கொள்ள மனமில்லாத பவுலும் பர்னபாவும் கூட்டத்திற்குள்ளே தங்களுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு ஓடி நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்கள் தானே என்று சொன்னார்கள். இன்றைக்கு இப்படி சொல்லுகிறவர்களை நாம் பார்த்திருக்கிறோமா? எப்பொழுதும் தங்களைப் புகழவேண்டும் என்று எதிர்பார்ப்போடு காத்திருக்கிறவர்களைத்தான் பார்க்கிறோம். மனுஷரால் வரும் புகழ்ச்சியை அப்போஸ்தலர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால்; அவர்கள் அதற்கு தகுதியானவர்கள் என்றோ அல்லது எங்களால் எல்லாம் செய்யடியும் நாங்கள் அப்போஸ்தலர்கள் என்றோ எங்கும் தங்களை அவர்கள் உயர்வாக பேசிக்கொள்ளவுமில்லை. கருதிக்கொள்ளவும் இல்லை.

மேலும், பவுல் சொல்லும்போது: எங்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது என்கிறார். அப்போஸ்தலர்களைப் பலப்படுத்தி யவர் கர்த்தர். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெல னடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடை சிபரியந்தம் எனக்குச்சாட்சி களாயிருப்பீர்கள் என்றார் [அப்.1:8]. அந்தப்படியாக அப்போஸ்தலர்களைக் கொண்டு தேவன்

முதல் நூற்றாண்டு காலத்தில் பெரிய காரியங்களைச் செய்தார். அவர்கள் கர்த்தருடைய கட்டளையின்படி உலகமெங்கும் புறப்பட்டுச் சென்று சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்து, கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலைக்குறித்து பலமாய் சாட்சி கொடுத்தார்கள். எருசலேம் துவங்கி பல இடங்களில் கர்த்தருடைய சபை உருவானது.

மேலும் பவுல் சொல்லும்போது; எங்களுக்குத்தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப் பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப் பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும், தூதருக்கும், மனுஷருக்கும் வேடிக்கையானோம்''என்றார்கள் (1கொ.4:9). இன்று அப்போஸ் தலர்கள் இருக்கிறார்களா? இல்லை. இவர்களே கடைசி அப்போஸ்தலர்கள். இவர்களுக்கு பின்பு எந்த ஒரு அப்போஸ்தலர் களையும் ஆண்டவர் தெரிந்துகொள்ளவில்லை. ஏற்படுத்தவும் இல்லை. வேதத்தில் எங்கும் சொல்லப்படவுமில்லை. ஏனெனில், ஆரம்ப முதல் இயேசுவின் உயிர்த்தெழுதல் வரை இருந்தவர்கள் இவர்களே எனக்காண்கிறோம். ''இந்த மகத்துவுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்'' என்கிறான் பவுல் (2கொரி.4:7).

பிதாவாகிய தேவனே இவர்களை தம்முடைய ஊழியத்திற்குத் தகுதிப்படுத்தினார். அந்தப்படியாக அவருடைய அநாதிதிட்டத்தின் படியே இவர்களை எடுத்துப் பயன்படுத்தினார். இவர்கள் இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றவர்களாயிருந்தனர். இன்றைக்குப் பதவி, பட்டங்கள் என்று ஜனங்கள் அடித்துக் கொள்ளு கின்றனர். இவர்கள் அப்போஸ்தலர்களுக்குரிய பட்டங்களைப் பெற்றும் தங்களை உயர்வாக எண்ணிக் கொள்ளவில்லை. தேவனையே மகிமைப்படுத்தினார்கள். உங்களுடைய தகுதி எவரால் உண்டானது? உங்களைத் தகுதிப்படுத்திய கர்த்தருக்கு உண்மை யுள்ளவர்களாக இருக்கிறீர்களா? அப்படி உண்மையுள்ளவர்களாக இருந்து அப்போஸ்தலர்களைப்போல பாடுபடும்போது வாடாத ஜீவகிரீடத்தை அவரால் பெற்றுக்கொள்வீர்கள்.

மேலும், அப்போஸ்தலன் பவுல் சொல்லும்போது அவரே எங்களை தகுதியுள்ள வராக்கினார் என்கிறான். ஆம் அவரே அவர்களைத் தகுதிப்படுத்தினார் எனக் காண்கிறோம். ''நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம் என்கிறான் (1கொரி.2:12). இன்றைக்கு ஆவியைப் பெற்றோம், ஆவியைப் பெற்றோம் என்று சொல்லிக்கொண்டு ஒரு சாரார்

தம்பட்டம் அடித்துக்கொண்டு திரிகிறார்கள். அப்போஸ்தலர்கள் எந்த ஆவியைப் பெற்றார்கள்? ஆவிக்குரியவைகளை அறியும்படி ஆவியானவர் கொடுக்கப்படுகிறார். அந்த ஆவியானவருடைய உதவியுடன் அநேக நிருபங்களை எழுதியிருக்கிறார்கள். வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது என்ற வசனத்தின்படி எழுதப்பட்டிருக்கிறது.

மேலும், அப்போஸ்தலர்கள் சொல்லும்போது: நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள் என்றான் (1கொரி.3:9). அப்போஸ்தலர்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாக இருந்தார்கள். அதற்கு அவர்களைத் தகுதிப்படுத்தினவர் தேவன். தங்களைத்தாங்களே தகுதிப்படுத்திக்கொண்டு வேலை பார்க்கிறவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்ல முடியாது. உங்கள்பொருட்டுத் தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன் என்று பவுல் சொல்லுகிறான் (கொலோ.1:26), தேவனாலே இந்த தகுதி ஏற்படுத்தப்படுகிறது. கிறிஸ்துவும் தம்மைத்தாமே உயர்த்தவில்லை பிதாவாகிய தேவனே அவரை உயர்த்தினார். ஆம், பிரியமானவர்களே. தேவன் ஆதி அப்போஸ்தர்களை தகுதிப்படுத்தி தம்முடைய ஊழியத்திற்கு தெரிந்துகொண்டார். இன்றைக்கு உங்களுக்கு ஒரு தகுதியிருக்குமானால் அது தேவனால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒன்றா அல்லது அந்த தகுதிக்கு நான் ஏற்றவனாயிருக்கிறேனா என்று வசனத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். உங்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கட்டும்.

எல்லாவற்றையும் அனுபவிக்க நமக்கு அதிகாரம் உண்டா? பவுல் இதற்கான விடையை அளிக்கிறான். எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரண்டு. ஆகிலும், எல்லாம் தகுதியாயிராது: எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது என்கிறான் (1கொரி.10:23). தான் ஒரு அப்போஸ்தலனாக இருந்தபோதும் அந்த அதிகாரத்தை முற்றிலும் செலுத்தாமல் தன்னைத் தானே எல்லாருக்கும் அடிமையாக ஒப்புக்கொடுத்தான். ஆண்டவர் சொல்லுகிறபடி தன்மையானவன் ஊழியக்காரனாயிருக்க வேண்டும். அப்பொழுது தான் தன்மைக்குரிய தகுதியை பெறுகிறோம். அதிகாரம் இருக்கிறது என்று சொல்லி மேட்டிமை கொள்ளக்கூடாது. அது பக்திவிருத்தியையும் உண்டாக்காது. இதில் தன்னை முழுதுமாக ஒப்புக்கொடுத்தவன் அப்போஸ்தலனாகிய பவுல். பவுலைப்போல நீங்களும் ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம். ✝

# நம் நம்பிக்கை நலிவடைந்து விட்டதா ?

## Has Our hope weakened ?

Bro. பென்னி மார்ட்டின்

யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா ஆரம்ப நாட்களில் தேவனுக்குப் பயந்து, தேவன் மீது அபரிதமான நம்பிக்கை கொண்டிருந்த ஒரு ராஜா வாக இருந்தான். ஆனால், அசீரிய ராஜாவாகிய சனகெரிப் யூதாவுக்கு விரோதமாகப் படையெடுத்து வந்தபோது அவன் நம்பிக்கையில் நலிந்து போனபடியால் தேவனை அறியாத ஒரு மனிதனைக்கொண்டு இவன் உணர்ந்துகொள்ளும்படி தேவன் சில காரியங்களை அறிவித்தார் [2 இராஜாக்கள் 18:19-21]. ஒரு வசனத்திற்குப் பிறகு அதாவது 21 ஆம் வசனத்தில் நீ அந்த எகிப்தை நம்புகிறாய் என்று சனகெரிப்பின் தளபதியால் சராமாரியாக எசேக்கியா மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. பொதுவாக, நாம் பார்க்கும்போது இந்த எகிப்து தேசம் நாகரிகம் மற்றும் கலாச்சாரத்தின் தொட்டிலாக இருந்திருக்கிறது. வேதகாமத்தில் எகிப்துக்கென்று எப்போதும் ஒரு தனி இடம் உண்டு. யோசேப்பின் சகோதரர்கள் பஞ்சக்காலத்தில் ஆகாரத்திற்காக எகிப்துக்குத்தான் சென்றார்கள். இஸ்ரவேலர்களை வனாந்திரத்தில் வழிநடத்தின தேவ தாசனாகிய மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்ப்பிக்கப்பட்டு வாக்கிலும், செய்கையிலும் வல்லவனானான் என்று அப்போஸ்தலர் 7:22ல் வாசிக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் எகிப்து தேசம் பாவத்தையும், அடிமைத்தனத்தையும் நினைவுப்படுத்துகிறது. சரி, இது ஒரு புறம் இருக்கட்டும், மறுபுறம் நம்முடைய நம்பிக்கை அதாவது, தேவன் மீதான நம்முடைய நம்பிக்கை எப்படி இருக்கிறது? என்று அலசி ஆராய்வோம். நம் நம்பிக்கை இந்த எசேக்கியா ராஜாவைப் போல் நலிவடைந்த நம்பிக்கையாக இருக்கிறதா? அல்லது நங்கூரம் பாய்ச்சப்பட்ட நம்பிக்கையாக இருக்கிறதா ?

### I ஒருவரை தேவன் மீது நம்பிக்கை இழக்கச்செய்கிற காரணிகள்

பொதுவாகவே, தேவன் மீது நம்பிக்கை வைத்து வாழ்பவர்கள் காரியங்கள் சுமூகமாக போய்க்கொண்டிருக்கும்போது தேவனோடு கொண்டிருக்கும் உறவில் எந்த விரிசலையும் ஏற்படுத்திக் கொள்வதில்லை. ஆனால், காரியங்கள் நாம் எதிர்பார்த்தபடி நடக்காத போது, எதிராக எழும்போது, புரியாத புதிராக தோன்றும்போது நம்பிக்கை இழந்துபோகிறோம், விழுந்துபோகிறோம். அந்த சந்தர்ப்பத்தில் தேவன் மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையில் சற்று சறுக்கல் ஏற்படுகிறது. பலர் தங்கள் வாழ்வில் பொருளாதார பிரச்சனை ஏற்படும்போது தேவன் மீதான நம்பிக்கையை இழந்து விடுகிறார்கள், அதன் விளைவாக தங்களையே இழந்து விடுகிறார்கள். [I தீமோ 6:10ல்] நாம் பார்க்கும்

போது பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராய் இருக்கிறது, சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டுவழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக, நாம் பார்க்கும்போது பலருடைய குடும்பங்களில் நேரிடும் சோகச்சம்பவங்கள் தேவன் மீதான ஒருவருடைய நம்பிக் கையை குன்றச்செய்துவிடுகின்றன. நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வேதாகம கதாபாத்திரமான யோபு தன்னுடைய சொத்துக்களையும், பத்துப் பிள்ளைகளையும் சில நிமிடங்களில் இழந்தார். பலர் இத்தகைய சூழ்நிலையை எதிர்கொண்டால் அநியாயம் செய்பவர்களெல்லாம் ஐஸ்வரியமாக வாழ்கிறார்களே, நான் அப்படி என்ன பெரிய பாவம் செய்துவிட்டேன் ? தேவன் ஏன் இதை எனக்கு அனுமதித்தார் ? என்று புலம்ப ஆரம்பித்துவிடுவார்கள்.

II **தேவனை நம்புகிறவர்கள் அவர் தங்கள் தேவைகளை சந்திப்பார் என்று நம்புகிறார்கள்.** (பிலிப்பியர் 4:19)

பிரியமானவர்களே, நம் வாழ்க்கையில் உண்டாகும் எல்லா நன் மைகளும் தேவனிடமிருந்துதான் இறங்கி வருகிறது, சுரந்துவருகிறது. நன் மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது (யாக்கோபு 1:17). முகமும், முகவரியும் இல்லாத நம்மை இகபர நன்மைகளால் நிறைத்தது தேவன் என்பதை பல நேரங்களில் மறந்து விடுகிறோம், அல்லது நினைக்க மறுத்து விடுகிறோம். பிதாவாகிய தேவன் நம் அடிப் படை தேவைகளான உணவு, உடை போன்றவைகளை முதலாவது அவருடைய ராஜ்ஜியத்தையும், நீதியையும் தேடும் போது கொடுக்கி றார் (மத்தேயு 6:33). இதன் பொருள் நாம் வேலைச் செய்யாமல் விருத வாக சுற்றவேண்டும் என்பதல்ல. மாறாக வேலைவாய்ப்புகளும் அதி னால் வரும் நன்மைகளும் தேவன் நம்மை பராமரிப்பதின் ஓர் அங்க மாகத்தான் இருக்கிறது. சிலர் தங்கள் தேவைகள் அதிகமாக இருப்பதா கவும், அதை தேவனால் சந்திக்க முடியாததென்றும் நினைத்து தேவ னுடைய வல்லமைக்கு எல்லைகுறிக்கிறார்கள். பூமியும் அதன் நிறை வும் கர்த்தருடையது எனும் வார்த்தைகள் நம்மை பூரணமாக பூரிக்க செய்ய வேண்டும்.

பல வேளைகளில் நம் வாழ்க்கையில் ஏற்படும் மலைபோன்ற பிரச் சனைகளை எண்ணி மலைத்துப்போய், நிலைகுலைந்து போகிறோம். தேவன் நம்முடைய சரீரப்பிகாரமான தேவைகளை மாத்திரமல்ல, ஆவிக்குரிய தேவைகளையும் சந்திக்கிறார். இவைகளோடு நம் தேவன் நின்றுவிடாமல், நமக்கு உணர்வுப்பூர்வமான பாதுகாப்பையும் அளிக்கிறார். இவ்வுலகில் எத்தனையோ பேர் தங்கள் உணர்வுகளுக்கு

மதிப்பளிக்கப்படுவதில்லை, தங்களிடம் யாரும் அன்புகாட்டுவ தில்லை என்று ஏங்குகின்றர். அவர்கள் தேவனுடைய அன்பை ருசி பார்க்கும்போது தேவனை உறுதியாக பற்றிக் கொள்கின்றனர். தேவனு டைய உயரிய உன்னதமான, தன்னலமற்ற அன்பே தங்களுக்கு போது மானது என்று திருப்தியடைகின்றனர். நாசியில் சுவாசம் உள்ள மனி தனை நம்பி ஏமாற்றமடைகிறோம், மாற்றத்திற்காக ஏங்குகிறோம். ஜீவ னுள்ள தேவனை நாம் முழுமையாக நம்பி வாழ்க்கையில் எல்லாவற் றையும் செய்யும்போது நம் நம்பிக்கை ஒருபோதும் வீண்போகாது.

III **தேவனை நம்புகிறவர்கள் போதுமென்ற மனதுடனே இருப்பார்கள்.**

கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் எத்தனையோ தேவனுடை ய ஆசீர்வாதங்களை ருசிபார்த்த போதிலும் கூட திருப்தி இல்லாமல் இன்னும் வேண்டும், இன்னும் வேண்டுமென்று தேவனிடம் தவறா மல் முறையிடுவதை நாம் காண்கிறோம். வேத வாக்கியங்களில் நாம் காணும்போது போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்று காண்கிறோம். [I தீமோத்தேயு 6:6]. பிலிப்பியர் 4:11ல் நான் எந்த நிலையிலிருந்தாலும் மனரம்மியாக இருக்க கற்றுக் கொண்டேன் என்று பவுல் சொல்கிறார். எனவே, திருப்தி அடைவ தென்பது மனிதனிடத்தில் இயற்கையாகவே அமைந்த ஒரு தன்மை யல்ல, அது கற்றுக்கொள்கிற ஒன்றாகத்தான் இருக்கிறது.

நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கி றவைகள் போதுமென்று என்னுங்கள் என்று எபிரெயர் 13:5ல் வாசிக்கி றோம். நாம் பணப்பசி நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கி றோம். மனிதர்களுடைய தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. இந்த நுகர்வு கலாச்சாரத்தில் முகர்ந்து பார்ப் பதையெல்லாம் வாங்கும் வாடிக்கையாளராகி விட்டோம். வீட்டில் விலையுயர்ந்த பொருட்கள் வைத்திருந்தால் அவன் புத்திசாலி எனும் போலி வலையில் சிக்கிக்கொண்டோம். இவ்வுலகில் நமக்கான தேவைகளுக்கான செலவு செய்வதற்கு குறைந்தளவு பணமே போது மானது. ஆனால், நாம் அதில் திருப்திப்படாமல் மற்றவர்களுக்காக வாழ ஆசைப்பட்டு வீணான காரியங்களில் சிக்கிக்கொள்கிறாம்.

அருமையானவர்களே, இவ்வுலகில் எல்லோருக்கும் பிரியமாய் வாழ்வதென்பது கூடாத காரியம். தேவனுக்குப் பிரியமாக வாழ்வதை நம் தலையாய கடமையாக கொண்டிருந்தால், அவர் நமக்கு தந்திருப்ப வைகளில் திருப்தியடைவோம். அதற்காக நன்றியுள்ளவர்களாய் இருப்போம். நம் தேவன் நம்மை பராமரிப்பார் என்ற நம்பிக்கையுடைய வர்களாயிருந்தால் போதுமென்கிற மனதுடன் இருப்போம். ஒருபோ தும் நாம் நம்பிக்கையில் நலிவடையாமல் நாட்களை நகர்த்துவோம், தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக ! ஆமென்.

## தேவன்

# மிகவும் பிரியமானவன்

# Greatly Loved

Raymond Elliot

**வே**தாகமம் தேவனுடைய பார்வையிலும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் பார்வையிலும் தயவு பெற்ற நபர்களின் பெயர்களால் நிரப்பப்பட்டிருக்கிறது. கீழே சில பெயர்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் 5 : 23 – 24 வசனங்களில் "ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமற் போனான், தேவன் அவனை எடுத்துக்கொண்டார்" என்று வாசிக்கிறோம். அதுபோல் எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப் போனான் (II ராஜாக்கள் 2:11). எபிரெயர் 9 : 27 மரணம் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னலும்கூட இந்த இரண்டு மனிதர்களும் மரணத்தை ருசிபார்க்கவில்லை.

ஆபிரகாம் தன் ஒரே குமாரனாகிய ஈசாக்கை பலியாக ஒப்புக்கொடுக்கும் அளவுக்கு தேவன் மீது விசுவாசம் வைத்தார் (ஆதியாகமம் 22 : 1–18). எபிரெயர் எழுத்தாளரும் சரி (எபிரெயர் 11 : 17) யாக்கோபு தன் நிருபத்திலும்சரி (2 : 21) ஆபிரகாம் தேவனுடைய பார்வையில் தன் குமாரனாகிய ஈசாக்கை பலியாக ஒப்புக்கொடுத்தார் என்று அறிவிக்கிறார்கள். ஆபிரகாம் உண்மையாகவே "தேவனுடைய சிநேகிதன்" என்று அழைக்கப்படுகிறார் (யாக்கோபு 2 : 23).

தேவனாகிய கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியைப் பார்த்து " நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன் ; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்" (எரேமியா 1 ; 5) யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருந்த மரியாளைப் பார்த்து தேவதூதன் "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக ; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்றான் (மத்தேயு 1 : 20,21). எவ்வித சந்தேகமுமின்றி அப்போஸ்தலனாகிய யோவான் இயேசுவுக்கு அன்பான சீடனாக இருந்தான் (யோவான் 13 : 23;19:26). இயேசு மார்த்தாளிடத்திலும், அவளுடைய சகோதரியினிடத்திலும், லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார் (யோவான் 11 : 5,36) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டில் தேவனுக்குப் பிரியமாயிருந்த ஐந்து மனிதர்கள் அங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் மோசே, சாமுவேல் (எரேமியா 15:1) நோவா, தானியேல் மற்றும் யோபு போன்றோர்களாகும்

(எசேக்கியேல் 14:14,16, 18–19), இவர்களைப் பற்றி தேவன் சொல்லும் போது , “நோவா, தானியேல் யோபு ஆகிய மூன்று புருஷரும் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்கள் என்று சொன்னார். மேலும், தேவன் இவர்களைப் பற்றிச் சொல்லும் போது “ அந்த மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும் தாங்கள் மாத்தி ரம் தப்புவார்களேயல்லாமல், குமாரரையாகிலும்,குமாரத்தியையாகிலும் தப்புவிக்கமாட்டார்கள்'' என்றும் சொன்னார்.

கர்த்தரால் குறிப்பிடப்பட்டிருக்கிற ஐந்து மனிதர்களால் தானி யேலைப் பற்றி அவர் சொன்ன காரியங்களை கவனிக்க விரும்பு கிறேன். தானியேல் 9:20–23 வசனங்களில் தானியேல் தன்னுடைய ஜனங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார். அப்போது காபிரியேல் தூதன் தானியேலிடம், “நீ மிகவும் பிரியமானவன், ஆதலால், நீ வேண் டிக்கொள்ளத்தொடங்கின போதே கட்டளை வெளிப்பட்டது, நான் அதை அறிவிக்க வந்தேன், இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்கேட்டு, தரிசனத்தை அறிந்துகொள்''என்று சொன்னான் 9:23. இதேவிதமான வார்த்தைகள் அதாவது பிரியமான புருஷனே என்று தானியேலைப் பற்றி தானியேல் 10:11,19 வசனங்களில் பயன்ப டுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு தேவனுடைய பிள்ளைக்கு இப்படிப்பட்ட வார்த்தைகள் பயன் படுத்துவது எவ்வளவு அருமையாக இருக்கும்.

தேவனுடைய வார்த்தையில் நம் பெயர்கள் இடம்பெறாவிட்டா லும் கூட, அவைகள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளமுடியும் (வெளிபடுத்தின விசேஷம் 3:5;21:27). நாம் தேவனுடைய கிருபையினாலும் அவருடைய குமார னாகிய இயேசு கிறிஸ்துவினாலும் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (எபே சியர் 2:8–9; எபேசியர் 1:7). தேவன் நம்மீது பாராட்டின அன்பு எவ்வளவு பெரியது ? “ தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கி றவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடை யும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந் தார்'' (யோவான் 15:13).

“ நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்'' (ரோ மர் 5:8) கல்வாரி குருசில் தேவன் தம்முடைய விலையேறப்பெற்ற குமாரனை நமக்காக மரிக்கும்படி ஒப்புக்கொடுத்தார் ! அவருடைய அன்பு அளவிடமுடியாதது. நம் பரம தகப்பனுக்கும், நம்மிடத்தில் அன் புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களை நம்மைக் கழுவினவராகிய ஆட்டுக்குட்டியானவருக்கும் துதியும், கனமும், மகி மையும் உண்டாவதாக (வெளி. 1:5).

### தேவன்

# அதரிசன மானவரை தரிசித்தல்

# Seeing Him who is Invisible

Brian Kenyon

**வே**தாகமம் மோசேயைப் பற்றி வெளிப்படையாகச் சொல்லும்போது, “விசுவாசித்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறது போல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டுப் போனான்” என்று சொல்லுகிறது (எபிரெயர் 11:27). நோவாவைப் பற்றி முன்பாகவே இவ்விதமாகச் சொல்லப்பட்டது. **விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான் ; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளன தென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுந்தரவாளியானான்** (எபிரெயர் 11:7). இவ்விருமனிதர்களும் எப்படி விசுவாசத்தினாலே நடத்தப்பட்டார்களோ அந்த விசுவாசம், “நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபிரெயர் 11:1). மேற்சொல்லப்பட்ட மூன்று வசனங்களிலுமே அதரிசனமானதற்கு அதிக அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இவ்வுலக வாழ்க்கையில் கிறிஸ்தவனாக நிலைத்திருப்பது சற்று கடினமான காரியம்தான். நாம் மோசேயைப் போல பகையுணர்வு நிறைந்த உலகில் அவைகளை எதிர்த்துப் போராடாலாம். அத்தகைய சூழ்நிலைகளை நாம் எதிர்கொண்டாலும், நாம் விசுவாசத்தோடே போராடினால் நிச்சயம் வெற்றி பெறுவோம். தேவனுடைய வழியை நம் குறைவான அறிவினால் சரியாக அல்லது முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் கூட, உலகத்தாரால் பரிகாசம் செய்யப்பட்டாலும் கூட நோவா செய்தது போல கர்த்தருடைய எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படியவேண்டும். இவ்விரு மனிதர்களைப் போல நாம் எதிர்கொள்ளும் எந்தத் தடையாக இருந்தாலும் அதைக் கீழ்ப்படிதலினாலும் விசுவாசத்தினாலும் மேற்கொள்ள முடியும்.

அப்படிமேற்கொள்வதற்கு முக்கியமானது, “அதரிசனமானவர் மீது கவனத்தைச் செலுத்துவது தான். நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோமென்று பவுல் நமக்கு நினைப்பூட்டுகிறார் (II கொரிந்தியர் 5:7). நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உனைக் கைவிடுவதுமில்லை ; கர்த்தர் எனக்குச்சகாயர் நான் பயப்படேன், மனுதன் எனக்கு என்ன செய்வான் ” என்னும் வார்த்தைகளில் நாம் ஆறுதலைப் பெறுவோமாக (எபிரெயர் 13:5,6). நாம் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய

சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ள நாம் தைரியம் கொள்வோமாக (எபேசியர் 6:10–18). நாம் தைரியத்தோடு "கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களையும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்போமாக (I கொரிந்தியர் 15:58). இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷக்களிடம் "என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள் : முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" மத்தேயு 10:22. நம்மை நாம் காண அதரிசனமான தேவனை நம்புவோம்.

✝

## எங்கெல்லாம் உண்மை இருக்க வேண்டும்?

| | |
|---|---|
| 1. கர்த்தருடைய ஊழியத்தில். | 1 தீமைத்தேயு 1:12 |
| 2. தேவனை தொழுதுகொள்வதில். | யோவான் 4:24 |
| 3. உக்கிராணத்துவத்தின் ஊழியத்தில். | 1 கொரிந்தியர் 4:2 |
| 4. தேவனுடைய வசனத்துக்கு செவி கொடுப்பதில். | உபா 28:1 |
| 5. கர்த்தருக்கு பயந்து அவரை சேவிப்பதில். | யோவா 24:14 |
| 6. பணம் பொருள் செல்வாக்கில். | 2இரா 22:7 |
| 7. காணிக்கை கொடுப்பதில். | 2 நாளா 31:12 |
| 8. உலகப் பொருட்களில். | லூக்கா 15:11 |
| 9. அந்நியருக்கு செய்வதில். | 3 யோவான் 5 |
| 10. நாம் செய்யும் வேலையில். | 2 நாளா 34:12 |
| 11. ஏழைகளை நியாயம் விசாரிப்பதில். | நீதி 29:14 |
| 12. பிறரோடு பேசுவதில். | சங்கீதம் 8:18, |
| 13. தேவனுடைய வீட்டில் | என்னா 12:7 |
| 14. உபத்திரவத்தில் | வெளி 2:10 |
| 15. எல்லாவற்றிலும் | 1 தீமோ 3:11 |

# தேவன் எங்கே இருக்கிறார் என்பதை புரிந்து கொள்ளுதல்!

## Understanding where GOD is!

Robert D. Rawson

சங்கீதம் 46,48,55 மற்றும் 73 போன்றவைகள் தாவீது ராஜா ஆழ்ந்து சிந்தித்துக் கேட்ட கேள்விகளை சுட்டிக் காட்டுகின்றன. இந்த அதிகாரங்களில் அவர் துன்மார்க்கர் தனக்கு ஏற்படுத்திய பிரச்சனைகளை மேற்கோள் காட்டுகிறார். இருந்தபோதிலும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவன் தனிப்பட்ட ரீதியில் தாவீதின் வாழ்க்கையில் அற்புதங்களைச் செய்யாவிட்டாலும் கூட தேவனுடைய தொடர்ச்சியான அன்பையும், நீதியையும், நம்பிக்கையையும் மேற்கோள் காட்டுகிறார்.




தாவீதின் வாழ்க்கையின் துக்கமான வேளைகளில் தேவன் என்ன செய்து கொண்டிருந்தார் ? இதற்கான பதில் சங்கீதம் 73:17ல் இடம் பெற்றிருக்கிறது. இங்கே தாவீது துன்மார்க்கரின் முடிவைக் கவனித்து உணருமளவும் அது அவருடைய பார்வைக்கு விசனமாயிருந்திருக்கிறது. துன்மார்க்கர் ஏன் செழிக்கிறார்கள் என்பதை அறிவதற்காக தேவனுடையை பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்திருக்கிறார். அங்கே அவருக்கு விடை கிடைத்திருக்கிறது, அங்கே தாவீது துக்கமான வேளைகளில் கூட தேவனுடைய நீதியான வழிகளை விட்டு, அவரை மறுதலிக்கவில்லை. ஆனால், தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தபோது தேவன் துன்மார்க்கருக்கு செய்யவிருப்பதை புரிந்துகொண்டார்.

நாம் ஆராதனையில் பங்கெடுத்து, தேவனுடைய வார்த்தை நமக்கு போதிக்கப்படும்போது நாம் எத்தகைய சூழ்நிலைகளை எதிர்கொண்டாலும் நம்மீது அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை புரிந்துகொள்கிறோம். நம்மைச்சுற்றிலுமிருக்கிற துன்மார்க்கரைப் போல் சறுக்கலான இடங்களில் இருக்க விரும்புகிறோமா அல்லது தேவனுடைய போதனைகளில் நிலைத்திருந்து அவருடைய ஆசீர்வாதங்களில் நிலைத்திருக்க விரும்புகிறோமா?

✝

# தேவன்
# தேவனைப் பற்றிய சரியான பார்வை
# Right view of GOD

Joe W. Nichols

மனித இனம் அதன் மார்க்க சம்மந்தமான காரியங்களை ஸ்திரப்படுத்த பெருந்தடைக் கல்லாக இருப்பது பெருமையுள்ள ஆவிதான். பெருமையுள்ள ஆவி மனிதனை உயர்த்தி, தேவனைத் தாழ்த்துகிறது. அதன் விளைவாக தேவன் மனிதனுடைய நிலைக்கு தள்ளப்பட்டு சவால் விடப்பட்டு தீர்க்கப்படுகிறார். தேவனுடைய வார்த்தைகள் செயல்கள் மற்றும் சித்தம் போன்றவைகள் விவாதத்திற்கு உட்படுத்தப்படுகிறது. கடவுள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகிறது. மனிதனுடைய விருப்பத்திற்கும், கற்பனைக்கும் தகுந்தவாறு கடவுள் உற்பத்தி செய்யப்படுகிறார். மனிதனுடைய பெருமையின் ஆவி தேவனுடைய இறையாண்மையையும், மகத்துவத்தையும் அங்கீகரிக்கத் தவறினது மாத்திரமல்லாமல், கனிவுடன் அவருக்கு கீழ்ப்படியவும் அவரைச் சார்ந்திருக்கவும் தவறிவிட்டது. இது ஒரு சிறு குழந்தை தன் தகப்பனிடம் என்னால் எல்லாவற்றையும் செய்துகொள்ளமுடியும் என்று சொல்லவதைப் போலிருக்கிறது.



மதசம்மந்தமான காரியங்களைப் பொறுத்தவரை மனிதனால் எல்லாவற்றையும் செய்ய முடியாது. தேவனில்லாமலும், அவர் நமக்காக கிரியை செய்யாமலும் இருந்திருந்தால் நாம் பாவத்தில் தள்ளாடி இழந்து போயிருப்போம். ''நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கிப் பண்ணுகிறார்'' [ரோமர் 5:8 ; I யோவான் 4:10]

தேவனே ஏகச் சக்கராதிபதியாக இருக்கிறார் ; அவருக்கு ஒப்பானவர் யாருமில்லை. அவருடைய வழி மனிதனுடைய வழிகளை விட முற்றிலும் மாறுபட்டது, மேலானது. மனிதனுடைய வழிகளை தேவனுடைய வழிகளோடு ஒப்பிடவே முடியாது [ஏசாயா 55:11]. ஆகவே, மனிதன் தன்னுடைய இரட்சிப்புக்கு முற்றிலுமாக தேவனையே சார்ந்திருக்கிறான் [I கொரிந்தியர் 1:21]. இது தேவனுடைய திட்டமாயிருக்கிறது ; அது உயரிய ஞானத்தையும், வல்லமையையும், பரிபூரணத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மனிதனை இரட்சிப்பதற்கு தேவனுடைய முழுமையான வழி சுவிசேஷந் தான். அது மட்டுமல்லாமல் மனிதனால் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ளவும் முடியாது.

தேவனுடைய இந்தப் பூரணமான திட்டத்திற்கு எந்த மாற்றோ, போட்டியோ, அல்லது வேற்று வழியோ இல்லை. மனிதன் ஒன்று இந்த பூரணமான தேவனுடைய திட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் அல்லது நித்திய நித்தியமாக இழந்துபோக வேண்டும் [யோவான் 14:6;4:44-45; அப்போஸ்தலர்:4:12].

மனிதன் தான் இரட்சிக்கப்பட தன் பெருமையுள்ள ஆவியை அடிபணியச்செய்து அன்பும், இரக்கமும் உள்ள சர்வ வல்ல தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்மைப்படுத்த வேண்டும் [I பேதுரு 1:22-23]. "மனிதன் சுவிசேஷத்தின் நிபந்தனைகளுக்குத் தன்னை உட்படுத்தும் போது தேவன் கிரியை செய்து இரட்சிப்பை வழங்குகிறார், மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டதபடிக்கு அப்படிச்செய்தார்" [I கொரிந்தியர் 1:29]. தேவ எழுத்தாளராகிய பவுல் தொடர்ந்து சொல்லும்போது " அந்தப்படி நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத்தக்காதாக அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" [I கொரிந்தியர் 1:30-31வு]. எனவே, இங்கே மனிதன் பெருமை பாராட்டுவதற்கு இடமே இல்லை.

தேவனை அறிந்துகொள்வதென்பது, அவன் தேவனுடைய பரிபூரண திட்டத்தை ஆட்சியை, மகத்துவத்தை புரிந்துகொள்வதாகும். தேவனை அறிந்துகொண்டு அவருக்குத் தன்னை முழுமையாக கீழ்ப்படுத்தாதவன் சுயவிருப்பமாக செய்தாலும் சரி, வேறு விதமாக செய்தாலும் சரி அவன் தவறாக வழிநடத்தப்படுகிறவனும், ஒழுங்கற்றவனுமாயிருக்கிறான் [ தீத்து 1:16; மத்தேயு 7:21; லுக்கா 6:46; எபிரேயர் 11:6]

## வேதாகமத்தின் கண்ணோட்டத்தின்படி எது மன்னிப்பல்ல

- மன்னிப்பு என்பது தவறை கண்டுகொள்ளாமல் இருப்பதோ அல்லது அதற்கு ஆதரவு கொடுப்பதோ அல்ல.
- மன்னிப்பு என்பது ஒருவருடைய தவறான செயல்பாடுகளுக்கு அந்த நபரை பொறுப்பாளி ஆக்காமல் அப்படியே விட்டுவிடுவதுமல்ல.

## சாட்சியங்கள்

# செங்கடலைப் பிளத்தல்

# Parting the Red Sea

Robert Johnson

Reuters செய்தி நிறுவனம் சமீபத்தில் வெளியிட்ட செய்தி அறிக்கையில் இவ்விதமாக குறிப்பிடப்பட்டிருந்தது. "மோசேயால் செங்கடலைப் பிளந்திருக்க முடியாது. இராமுழுவதும் வீசிய பலத்தக் காற்று தான் வேதவாக்கியங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி சமுத்திரத்தின் தண்ணீரை இரண்டாகப் பிரித்தது" என்று. அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் பலத்த காற்றால் இயற்கை விதிகளுக்கு இசைவாக கடலை இரண்டாகப் பிரித்து, கடலின் இருபுறத்திலும் பாதுகாப்பான பாதையை உண்டாக்கி மறுபடியும் திடீரென சங்கமிக்க முடியும் என்று கணினி வழியாகப் பரிசோதித்துப் பார்த்துச் சொல்கிறார்கள்.

சந்தேகப் பேர்வழிகள் எப்போதுமே வேதாகமத்தின் அற்புத சம்பவங்களை, இயற்கை விதிகளின் ஆளுகைக்குட்படுகிற சாதாரண நிகழ்வாகக் காட்ட அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். உண்மையில், செங்கடல் இரண்டாகப் பிளந்த சம்பவம் வேதாகத்தின் வரலாற்றுத் துல்லியத்திற்கு சாட்சியாக இருக்கிறது. இதுபோன்ற வேதாகமச் சம்பவங்களெல்லாம் புராணக் கதைகள் அல்ல, தெய்வீக இடைபாட்டினால் நடந்தேறியவைகளாகும்.

செங்கடல் இரண்டாகப் பிரிந்தது சம்மந்தாக வேதாகமம் பலத்த காற்று கடல் தண்ணீரைப் பிரித்ததாக தெளிவுப்படுத்துகிறது. "மோசே தன் கையை சமுத்திரத்தின் மேல் நீட்டினான், அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து அதை வறண்டு போகப் பண்ணினார்; ஜலம் பிரிந்து போயிற்று [யாத்திராகமம் 14:21]. இஸ்ரவேலர்கள் செங்கடலைக் கடந்த பிறகு, கர்த்தர் மோசேயை நோக்கி ; ஜலம் எகிப்தியர் மேலும், அவர்களுடைய இரதங்கள் மேலும் திரும்பும் படிக்கு, உன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டு என்றார். அப்படியே மோசே தன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டினான். விடியற்காலத்தில் சமுத்திரம் பலமாய்த்திரும்பி வந்தது: எகிப்தியர் அதற்கு எதிராக ஓடும்போது கர்த்தர் அவர்களைக் கடலின் நடுவே கவிழ்த்துப் போட்டார் [யாத்திராகமம் 14:26–27].

இந்த அற்புத சம்பவத்தில் விஞ்ஞானிகள் அறியாத காரியம் என்னவென்றால், செங்கடலின் தண்ணீர் பிரிந்துபோவதற்கு காற்று மாத்திரம் காரணமல்ல, அச்சம்பவத்தின் சரியான சமயம் மிக முக்கியமான

ஒன்றாக இருக்கிறது. ஓர் அற்புதம் என்று வரும் போது தேவன் இயற்கை சக்திகளை வைத்து மாத்திரம் தண்ணீரைப் பிரிக்கிறார் என்று நினைத்து விடக்கூடாது. அது எப்போது அல்லது எந்த சந்தர்ப்பத்தில் நடந்தது என்பதை கவனிக்க வேண்டும். தேவன் தாம் பிரித்த செங்கடலை மறுபடியும் சேர்ப்பதற்கும் அந்த தண்ணீர் எகிப்தியர் மேலும் அவர்களுடைய இரதங்கள் மேலும் திரும்பும்படிக்கு மோசேயை சமுத்திரத்தின் மேல் கையை நீட்டும்படி கட்டளையிட்டார். மோசே தன் கையை சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போகத் தக்கதாக சமுத்திரம் இரண்டாகப் பிரிந்தது. அதேபோல் எகிப்தியர் மேலும், அவர்களுடைய இரதங்கள் மேலும் பிரிந்த தண்ணீர்கள் திரும்ப வந்து அவர்கள் மேல் விழுந்து. அவர்கள் அமிழ்ந்து போகத்தக்க தேவன் தண்ணீரை திரும்ப வரச் செய்தார். இந்த அற்புதத்தை தாம் நிகழ்த்தப் போவதாக தேவன் ஏற்கனவே மோசேயிடம் முன்னறிவித்தார் (யாத்திராகமம் 14:15-18). "இப்படி நான் பார்வோனாலும், அவன் இரதங்களாலும், அவன் குதிரை வீரராலும் மகிமைப் படும்போது, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள் என்றார்" (யாத்திராகமம் 14:18 ). இங்கே அற்புதம் வெறுமனே பலத்த காற்றினால் மாத்திரம் நிகழ்த்தப்படவில்லை. மாறாக, இந்த அற்புதம் ஏற்கனவே தேவனால் முன்தீர்மானிக்கப்பட்டு மோசேக்கு வெளிபடுத்தப்பட்டது. ✝

## இருதயத்தின் வகைகள்

| | |
|---|---|
| 1. நொறுங்குண்ட இருதயம் | (சங்கீதம் 34:18) |
| 2. பெருமையுள்ள இருதயம் | (நீதிமொழிகள் 16:5) |
| 3. மகிழ்ச்சியான இருதயம் | (நீதிமொழிகள் 17:22) |
| 4. இளைத்துப்போன இருதயம் | (நீதிமொழிகள் 13:12) |
| 5. சுத்த இருதயம் | (நீதிமொழிகள் 51:10) |
| 6. ஞானமுள்ள இருதயம் | (நீதிமொழிகள் 16:21) |
| 7. மூட இருதயம் | (நீதிமொழிகள் 15:7) |

# மறுக்கமுடியாத சாட்சியங்கள்

## Undeniable Evidences

Betty Burton choate

தேவத்துவத்தின் மூவரில் ஒருவராக தேவனுக்குச் சமமாக, ஆதியிலிருந்தே தேவனோடிருந்த வார்த்தையாகிய கர்த்தருடைய தூதனானவரைப் பற்றி வாசகர்களுக்குச் சொல்ல நாம் அநேக வழிகளை பயன்படுத்த முடியும். வார்த்தையாகிய கர்த்தருடைய தூதனானவர் தேவத்துவத்தில் தேவனுக்கு சமமாக இருந்தார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதாவது, சேனைகளின் கர்த்தர், கர்த்தருடைய தூதனானவர், மற்றும் பரிசுத்த ஆவியானவரை உள்ளடக்கியதுதான் தேவத்துவம். இந்த வார்த்தை மாம்சத்தில் இயேசு கிறிஸ்துவாக வெளிப்பட்டார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பழைய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி முன்னுரைக்கப்பட்டிருக்கிற நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் நிறைவேறியிருப்பதை நாம் அறிவோம். அவர் பிறக்கப்போகும் இடம் (மீகா 5:2 ; மத்தேயு 2:1), அவர் ஒரு கன்னியினிடத்தில் பிறப்பார் என்பது (ஏசாயா 7:14 ; மத்தேயு 1:22-23) அவர் ஆபிரகாம் மற்றும் யூதாவின் சந்ததி (ஆதியாகமம் 12:3 ; மத்தேயு 1:1; லூக்கா 3:33) அவர் காட்டிக் கொடுக்கப்படுவார் என்பது (சகரியா 11:12-13; லூக்கா 22 :47-48)அவர் அக்கிரமக்காரரோடு சிலுவையில் அறையப்படுவார் என்பது, ஏசாயா 53:12 ; மத்தேயு 27:38) அவருடைய கைகளையும், கால்களையும் உருவக் குத்துவார்கள் (சங்கீதம் 22:16 ; யோவான் 20:25-27), அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவார் என்பது (சங்கீதம் 16:10 ; அப்போஸ்தலர் 2:22-32) அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்காருவார் என்பது (சங்கீதம் 110:1 மாற்கு 16:19) இன்னும் பல வசனங்களை நம்மால் மேற்கோள் காட்ட முடியும். ஆனால், இந்த வசனப்பகுதிகளை நீங்கள் ஜெபத்தோடு ஆழ்ந்து சிந்திக்கும்படி உங்களைக் கேட்டு கொள்கிறோம்.

காலங்காலமாக நாம் பார்க்கும்போது சக்திவாய்ந்த மனிதர்கள் உலக வரலாற்றில் தங்கள் வாழ்நாள் காலத்தில் ஆதிக்கம் செலுத்தியிருக்கிறார்கள். எகிப்தின் பார்வோன்கள் வல்லமை பொருந்திய ஆட்சியாளர்களாக இருந்தார்கள். வல்லமை பொருந்திய ராணுவத்தின் தளபதியும், மக்கதோனியாவின் ராஜாவுமாகிய மகா அலெக்சாண்டர் பழங்கால உலகின் மிகப் பெரிய சாம்ராஜ்யத்தை நிலை நாட்டினார்.

அதேபோல், ரோம சக்கரவர்த்திகள் ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவின் பெரும் பகுதியையும், மேற்கு ஆசியாவையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார்கள். அவர்களுடைய பெயர்களைம்,

அதிகாரக் கட்டிலில் ஏறிய மற்றவர்களுடைய பெயர்களையும் உலக வரலாறு நினைவில் வைத்திருக்கிறது. அநேகமாக மேற்சொல்லப் பட்ட ராஜாக்களின் பெயர்கள் நமக்கு பரிச்சயமாகத்தான் இருக்கும். ஆனால், இன்று நம் ஜீவியத்தின் மீது அவர்கள் தாக்கத்தை ஏற்படுத்து கிறார்களா? இல்லை.

தோராயமாக வரலாற்றின் அதே காலக் கட்டத்தில் யூதே யாவிலிருந்த பெத்லகேம் என்னும் சிற்றூரில் மாட்டுத்தொழுவில் ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் பெற்றோர் உயிருக்குப் பயந்து எகிப்துக்கு ஓடிப்போய் மறுபடியும் நாசரேத் என்னும் சிறிய நகரத்திற்கு வந்தார்கள். அக்குழந்தை அங்கே நாசரேத்தில் தச்சுவேலை செய்து கொண்டிருந்த தன் தகப்பனாகிய யோசேப்பின் போதனையிலும், வளர்ப்பிலும் வளர்ந்து முதிர்ச்சி அடைந்தது. இயேசு என்னும் அக்குழந் தையின் மனித தொடக்கம் மிகவும் தாழ்மையாகவும், ஏழ்மையாகவும் இருந்தது.

முப்பதாவது வயதில், அவர் தம்முடைய சிறிய தேசம் முழுவதும் சுற்றித்திரிய ஆரம்பித்து மீனவர்கள் மற்றும் சமுதாயத்தின் அடித்தட் டில் இருந்தவர்களை சீஷர்களாக்கிக் கொண்ட, அவருடைய போத னைகள் தேசத் தலைமையால் தேவதூஷணமாகவும், தேசத் துரோகமாக வும் கருதப்பட்டது. இறுதியாக, அவர் கைது செய்யப்பட்டு தவறாக வி சாரணை செய்யப்பட்டு குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டு, கொலை செய் யப்பட்டார்.

கடந்த கால வரலாற்றை நாம் புரட்டிப் பார்த்தால் இப்படிப்பட்ட மனிதர்களெல்லாம் மண்ணோடு மண்ணாக மறக்கப்படுவார்கள். இருந்த போதிலும், யாரும் அறியாத, ஊர் ஊராகச் சென்று பிரசங்கித்த இந்த மனிதனின் கதை அதோடு முடிந்துவிட்டதா ?

இன்று, நம் இரட்சகர் சிலுவையில் அறையப்பட்டு இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டது. உலகமுழுவதும் நாள் காட்டிகள் கிறிஸ்துவின் பிறப்பை மையப்படுத்தியே குறிக்கப்படுகிறது. இயேசு வின் புகழ் அவர் பிறந்த சிறிய நாட்டிலிருந்து எல்லைகளைத் தாண்டி உலகமெங்கும் பரவிவிட்டது. உலக மக்கள் தொகையில் 32 சதவீதம் கிறிஸ்தவர்களாயிருக்கிறபடியால் கிறிஸ்தவம் உலகின் மிகப் பெரிய மார்க்கமாக உருவாகியிருக்கிறது. இந்தக் கலிலேயனாகிய கிறிஸ்துவைப்போல் வரலாற்றின் மீது எந்த ஒரு தனிமனிதனாலும் தாக்கத்தை ஏற்படுத்தவே முடியவில்லை.

நசரேயனாகிய இயேசுவைப் பற்றிய சம்பவங்கள் சுமார் இரண்டாயி ரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே எழுதப்பட்டது. புதிய ஏற்பாடு முதல் நூற்றாண்டின் இறுதியிலேயே எழுதி முடிக்கப்பட்டபடியால் அவரை

அர்ப்பணிப்புடன் பின்பற்றினவர்கள் தவிர மற்றவர்களிடத்தில் அது அதன் முக்கியத்துவத்தை இழந்திருக்க வேண்டும், மறக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், மறக்கப்படுவதற்கு பதிலாக, காலத்திற்கு ஏற்றாற் போல் மாற்றி அமைக்கப்படுவதற்குப் பதிலாக பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலினால் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களால் எழுதப்பட்ட புதிய ஏற்பாடு பரிசுத்த வேதாகமத்தின் ஒரு பகுதியாக இருந்துகொண்டு, உலகில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப் பட்டு உலகில் உள்ள மற்ற புத்தகங்களை விட அதிக விற்பனையாகும் புத்தகமாகவும் இருக்கிறது.



வரலாற்றில் வல்லமை பொருந்திய மனிதர்களை கனப்படுத்துவதற்காக மிக அழகான நினைவுச் சின்னங்கள் அமைக் கப்பட்டுள்ளது. அவைகளில் பெரும்பாலா னவைகள் சிதைந்து அழிந்து போய்விட் டன. பல நாடுகளில் இயேசுவின் பிறந்த நாளை ''கிறிஸ்துமஸ்'' என்றும், அவர் மரித்து உயிர்த்தெழுந்த நாளை ''ஈஸ்டர்'' என்றும் கொண்டாடுவதற்காக வருடந்தோ றும் தேசிய விடுமுறை நாட்களாக விடப்படு கின்றன. உலகின் எல்லா நாடுகளிலும் வா ரத்தில் ஏழு நாட்கள் முறையே பின்பற்றப்படு கிறது (வேத வாக்கியங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிற படி). மேலும், உலகின் பெரும்பாலான நாடுகளில் ஞாயிற்றுக்கிழமையில் தான் கிறிஸ்துவை விசுவாசிப்பவர் கள் தேவனை ஆராதிப்பதற்கென்று ஒன்று கூடுகிறார்கள்.

ரோமக் கட்டிட இடுபாடுகளில் அமர்ந்து இயேசு கிறிஸ்துவை கனப்படுத்தும் விதத்தில் நாங்கள் எந்த நினைவுச்சின்னத்தைப் பார்த்தோம்? உலகம் கிறிஸ்துவை மறந்துவிடக்கூடாது என்பதற்காக மிகப் பிரமாண்டமான பொன்னினாலான நினைவுச் சின்னத்தை பார்த்தோமா? இல்லை!

நம் பாவங்களுக்காக சிலுவையில் ஒப்புகொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்ற புளிப்பில்லாத அப்பத்தை புசித்தோம், திராட்சரத்தைப் பருகினோம். இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்படுவதற்கு முன்பாக, ''பின்பு அவர் அப் பத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீர மாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என் றார். போஜனம் பண்ணின பின்பு அந்தப்படியே பாத்திரத்தையும்

கொடுத்து இந்தப்பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்'' [லூக்கா 22:19–20]. எப்படி இந்த ஞாபகார்த்த செயல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் வாரத்தின் முதல் நாள் தோறும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களால் கடைப்பிடிக்கப்படுகிறது ? இதற்கு மனித கண்ணோட்டத்தில் வரலாற்றுப் பூர்வமான விளக்கமில்லை.

அதற்கான ஒரே பதில் மனித அவதாரத்தில் வந்த தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துதான்.

''பின்பு இயேசு பிலிப்பு செசரியாவின் திசைகளில் வந்தபோது தம்முடைய சீஷரை நோக்கி : மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள், சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறுசிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர் நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக : நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்'' [மத்தேயு 16:13–16].

''அதற்கு இயேசு : பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா ? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய் ? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா ? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாயச் சொல்லவில்லை ; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார். நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா ? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாயச் சொல்லவில்லை ; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார் ''. [யோவான் 14:9–11].

''அதற்கு இயேசு : நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் '' [யோவான் 14:6] அவர்களை நோக்கி : மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகெல்லாம் நிறைவேற வேண்டியதென்று நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேத வாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை

அவர் திறந்து அவர்களை நோக்கி : எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடு படவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண் டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருச லேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிர சங்கிக்கப்படவும் வேண்டியது நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயி ருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெ லனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.

"பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டுபோய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வ தித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர்களை விட்டுப் பிரிந்து பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் அவரைப் பணிந்து கொண்டு மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள்" (லூக்கா 24:44-52).

✝

## <u>ஏன் முயற்சிக்கக் கூடாது?</u>

1. உண்மையான சத்தியத்தைக் கண்டுபிடிக்க **(யோவான் 17:7)**

2. உண்மையான அன்பை அடையாளம் காண **(அப்போஸ்தலர் 2:28)**

3. உண்மையான ஆராதனையை ஏற்றெடுக்க **(யோவான் 4:24)**

4. உண்மையான இரட்சிப்பின் திட்டத்திற்கு ஒப்புக்கொடுக்க **(மத்தேயு28:18-20)**

5. உண்மையான சபையை அடையாளம் கண்டுகொள்ள **(ரோமர் 16:16)**

# நற்செய்திப் புத்தகங்கள் இடையே வேறுபாடுகள் இருப்பதாக யூகிக்கப்படுபவைகள் பற்றிய நெருக்கமாக பார்வை

## A Closer Look at Alleged Discrepancies Among the Gospels

Kevin L. Moore

நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மறுரூபக்காட்சியை விவரிக்கிற காரியத்தில் மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷப் புத்தகங்களின் ஆசிரியர்கள் அப்போஸ்தலனாகிய பேதுரு சொன்ன வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். உதாரணமாக, மாற்கு **ரபீ** என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார் (மாற்கு 9:5). மத்தேயு **ஆண்டவரே** என்னும் பதத்தைப் பயன்படுத்துகிறார் (மத்தேயு 17:4). Kurios என்னும் கிரேக்க பதத்ததைப் பயன்படுத்துகிறார். லூக்கா **ஐயரே** என்னும் பொருள்கொண்ட Epistates என்னும் கிரேக்க பதத்தைப் பயன்படுத்துகிறார் (லூக்கா 9:33). மேற்சொல்லப்பட்ட வார்த்தைகளில் உண்மையாகவே பேதுருவால் எந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. இது நியாயமாக வேத வாக்கியங்களின் முரண்பாட்டிற்கு வழிவகுக்குமா ? இது நியாயமாக வேதாகமப் பதிவுகளின் உத்தமத்தை, உண்மைத்தன்மையை கேள்வி கேட்குமா ? இப்பிரச்சனைகளுக்கெல்லாம் ஒரே தீர்வு ஒரு வசனத்தின் முன்னும், பின்னும் படிப்பதுதான்.

கிறிஸ்துவுக்கும், பேதுருவுக்கும் இடையே நடந்த இந்த உரையாடல் அராபிக் மொழியில்தான் நடந்தது. அதை மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா புத்தகங்களின் ஆசிரியர்கள் தாங்கள் யாருக்கு எழுதினார்களோ அவர்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் மொழிபெயர்த்து பதிவு செய்திருக்கிறார்கள். இதில் வேதவாக்கியங்களின் உண்மைத் தன்மையை சந்தேகிக்கும் நபர்கள் குற்றஞ்சாட்டுவதுபோல் முரண்பாடு எதுவுமில்லாமல், இயேசு கிறிஸ்து வாழ்ந்த வாழ்க்கைக்கு சாட்சிகளாக இருக்கின்றன. **ரபீ** என்பது எபிரெயச் சொல். இதன் அர்த்தம் **போதகர்** என்பதாகும். கிரேக்க கண்ணோட்டத்தில் எழுதிய லூக்கா எபிரெய பதமாகிய ரபீயை பயன்படுத்தவேயில்லை. அதே நேரத்தில் யூத ஆசிரியரான யோவான், யூதரல்லாத வாசகர்களுக்கு எழுதும் போது எபிரெய வார்த்தையான **ரபீ** யை பயன்படுத்திவிட்டு, பின்பு தன் புறஜாதி வாசகர்களுக்காக அதைப் **போதகர்** என்று மொழிபெயர்க்கவும் செய்கிறார்.

இயேசு கிறிஸ்துயின் மறுரூப காட்சியை பதிவு செய்யும் காரியத்தில் மாற்கு **ரபி** என்னும் அதே எபிரெய பட்டத்தையே பயன்படுத்தி இருக்கிறார் .(மாற்கு 9:5) மத்தேயு **ஆண்டவரே** என்னும் பொருள்கொண்ட Kurios என்னும் கிரேக்க பதத்தைப் பயன்படுத்துகிறார்( மத்தேயு 17:4). அதேபோல் லூக்காவும் **ஐயரே** என்னும் பொருள் கொண்ட Epistates என்னும் கிரேக்க பதத்தைப் பயன்படுத்துகிறார் ( லூக்கா 9:33). மேற்சொல்லப்பட்ட வித்தியாசமான மொழிபெயர்ப்புகள் அந்தந்த மொழி வாசகர்களுக்கு கிறிஸ்துவின் மறுரூபக் காட்சியை விவரித்தது மட்டுமல்லாமல், கிறிஸ்து எந்தப் பட்டத்தினால் அழைக்கப்பட்டாரோ அதன் மரியாதையுள்ள நோக்கத்தையும் தெரியப் படுத்துகிறது.

**இயேசுவின் சிலுவையில் எழுதப்பட்டிருந்த வார்த்தைகள்**

இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் மேல் எழுதப்பட்டிருந்த வார்த்தைகள் நற்செய்தி எழுத்தாளர்களால் வித்தியாசமாக விவரிக்கப்பட்டிருக்கிறது A. **இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு** (மத்தேயு 7:37); B. **யூதருடைய ராஜா** (மாற்கு 15:26); C. **யூதருடைய ராஜா** (லூக்கா 23:38 ); D. **நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா** (யோவான் 19:19) போன்றவைகள் அந்த வார்த்தைகளாகும். ஒவ்வொரு சுவிசேஷ எழுத்தாளர்களும் சிலுவையில் பொறிக்கப்பட்டிருந்த வார்த்தைகளைப் பதிவு செய்திருக்கிறார்கள். சிலுவையில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் முழுமையாக இவ்விதமாக வாசிக்கப்படுகிறது "இது நசரேயனாகிய இயேசு யூதர்களின் ராஜா. நான்கு சுவிசேஷ எழுத்தாளர்களின் எழுத்துக்களை ஒன்று சேர்த்தால் முழுமையான வார்த்தைகள் கிடைக்கும். இது நான்கு தனித்தனி சாட்சிகளுக்கு ஆதாரமாயிருக்கிறது (உபாகமம் 19:15). இயேசுவின் சிலுவையில் பொறிக்கப்பட்ட வார்த்தைகள் மூன்று மொழிகளில் பொறிக்கப்பட்டிருந்தது.

**அபியத்தார் என்னும் பிராதன ஆசாரியன்**

பரிசேயர்களின் கேள்விக்கு இயேசு பதிலளிக்கும் சம்பவத்தை பதிவு செய்யும் காரியத்தில் (மத்தேயு 12:1-8; மாற்கு 2:23-28; லூக்கா 6:1-5) சுவிசேஷ எழுத்தாளர்களில் மாற்கு மட்டுமே **அபியத்தார்** " என்னும் பெயரை பதிவு செய்திருக்கிறார் (2:26). இது சம்மந்தமாக தோல்சுருள்களிலேயே வேறுபாடுகள் இருக்கின்றன. இங்கே சூழ்நிலை தாவீது தெய்வ சமுகத்தப்பங்களை பசியின் காரணமாக புசித்ததை

சுட்டிக்காட்டுகிறது. இது அபியத்தார் என்னும் பிரதான ஆசாரியனுடைய நாட்களில் நடந்திருந்தாலும், உண்மையில் அது அபியத்தாரின் தகப்பனாகிய அகிமலேக்கின் நாட்களில் தான் நடந்தது. அகிமலேக்கு கொல்லப்பட்ட உடனே, அவனுடைய குமாரனாகிய அபியத்தார் பிரதான ஆசாரியனாக நியமிக்கப்பட்டான். [ I சாமுவேல் 22:17-21]. வருங்கால நிலையை எதிர்பார்த்து அதை மனதில் கொண்டு மாற்கு அந்நூலை எழுதிய நாட்களில் அறியப்பட்டிருந்த அபியத்தாரின் பெயரைப் பதிவு செய்திருக்கிறார்.

**எதை எடுக்கவேண்டும், எதை எடுக்கக்கூடாது ?**

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பன்னிரெண்டு பேரை ஊழியத்திற்கு அனுப்பும் போது “வழிக்காக இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது எடுத்துச்செல்ல வேண்டாம்” என்று அறிவுரை வழங்கியதாக மத்தேயு ஆசிரியர் பதிவு செய்கிறார் [மத்தேயு 10:10]. ஆனால், இதே காரியத்தை மாற்கு ஆசிரியர் பதிவு செய்யும்போது “ஒரு தடியை மாத்திரம் எடுத்துக்கொண்டு போகவும், பாதரட்சைகளைப் போட்டுக்கொண்டுபோகவும் கட்டளையிட்டார்” என்று பதிவு செய்திருக்கிறார் [மாற்கு 6:89]. இவ்விரு வசனப்பகுதிகளிலும் தேவைகள் சந்திக்கப்படும். எனவே, தேவைக்கு அதிகமாக உபரியாக எதையும் எடுத்துச் செல்லவேண்டாம் என்று நிச்சயப்படுத்துகிறார். அப்போஸ்தலர்கள் ஊழியத்திற்குப் போகும்போது தங்குமிடம் இலவசமாக கிடைக்கும் என்பதால் வெளியே போர்த்திக்கொள்வதற்கு கூடுதலான அங்கிகள் வேண்டும் என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

**சேவல் எத்தனை முறை கூவியது ?**



மத்தேயு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய மூவருமே அப்போஸ்தலனாகிய பேதுரு மூன்று முறை மறுதலித்த பிறகு சேவல் கூவுகிறதை குறித்து நம் கர்த்தர் முன்னறிவித்ததை பதிவு செய்திருக்கிறார்கள். பின்பு அது நிறைவேறியதையும் உறுதி செய்திருக்கிறார்கள் [மத்தேயு 26:34 74-75;லூக்கா 22:34 60-61; யோவான் 13:38; 18:27]. மாற்கு இரண்டு தரம் சேவல் கூவுகிறதாகக் குறிப்பிட்டிருக்கிறார். முதல் முறை பேதுரு மறுதலித்த பிறகு சேவல் கூவியது. இரண்டாம்

முறை, பேதுரு மூன்றாவது முறையாக கிறிஸ்துவை மறுதலித்தபோது சேவல் கூவியது (மாற்கு 14:30,68–72). பழங்கால மத்தியதரைக்கடல் உலகில் இராத்திரி நேரம் நான்கு ஜாமங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. மூன்றாம் ஜாமம் என்பது சேவல் கூவும் நேரமாயிருந்தது. அதாவது, (அதிகாலை 12–3)(மாற்கு 13:35) பேதுரு நம் ஆண்டவரை மறுதலிக்கும் சம்பவத்தைப் பொறுத்தவரை மத்தேயு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர் அதைக் குறித்த நம் கர்த்தரின் முன்னறிவிப்பைத் தான் பதிவு செய்திருக்கிறார்கள். அதே போல் அது நிறைவேறியதையும் சுருக்கமாகத்தான் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால், மாற்கு சம்பவங்கள் நிறைவேறிய நேரத்தையும் குறிப்பாகவும், மிக விவரமாகவும் பதிவு செய்திருக்கிறார்.

✝

## சாத்தான்


1. சர்ப்பம்
2. வலுசர்ப்பம்
3. பழைய பாம்பு.
4. பிசாசு
5. அசுத்த ஆவி
6. ஆதி முதல் பாவம் செய்கிறவன்...
7. மனுஷகொலை, பாதகன்...
8. பொய்யின் பிதா
9. தந்திரள்ளவன்..
10. மோசம் போக்குகிறவன்...

தேவனுடைய வார்த்தை

# வேதாகமத்திற்கு அறிமுகம்

# Introduction to the Bible

Jeremy Barrier




பல தரப்பட்ட மதங்கள் மற்றும் கலாச்சாரங்களுக்குள் இருக்கும் சில இலக்கியங்கள் தெய்வங்களிடமிருந்து வந்த வேதவாக்கியங்களாக அவர்களைப் பின்பற்றுபவர்களால் கருதப்பட்டு அந்த தெய்வங்கள் தங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கின்றன என்பதை அறிந்துகொள்வதற்காக அந்த வேத வாக்கியங்களை அவர்கள் அதிக மதிப்புடன் உயர்வாகப் பார்க்கிறார்கள். இந்து மதத்திற்குள்ளே நாம் பார்க்கும் போது வேதங்கள், உபனிஷதங்கள், ராமாயணம் மற்றும் பகவத்கீதை போன்ற இலக்கியங்கள் மக்களை தெய்வத்தினிடத்திற்கு அழைத்துச் செல்ல முயற்சிக்கின்றன. அதேபோல் இஸ்லாமுக்குள், முஸ்லீம்கள் “Quran” “குர்ஆன்” என்பது முகமது நபி மூலமாக பேசப்பட்டு பதிவு செய்யப்பட்ட அல்லாவின் வார்த்தைகளை உள்ளடக்கிய புத்தகம் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அதேபோல் பழங்கால வேத வாக்கியங்கள் இந்திய – ஐரோப்பிய, ஈரானிய மொழிநடையில் எழுதப்பட்டிருக்கிறது. அம்மதத்தைப் பின்பற்றுபவர்கள் அந்த இலக்கியங்களை மிக உயர்வாகப் பார்க்கிறார்கள்.

இருந்த போதிலும் அதே கிழக்கத்திய உலகத்திலிருந்து உலகின் பிரதான மதம் அல்லது மார்க்கம் தோன்றி பல நூற்றாண்டுகளாக கோடிக்கணக்கான மக்கள் மீது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதுதான் கிறிஸ்தவ மார்க்கம். கிறிஸ்தவ மார்க்கத்திலும் வேத வாக்கியங்கள் உண்டு. நாம் அவைகளை வேதாகமம் என்றழைக்கிறோம். அது எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தியதென்றால் மகாத்மா காந்தி அவர்கள் தன் அரசியல் பயணத்தைக் தொடங்கிய போது வேதாகமம் அவருக்கு உந்தும் சக்தியாக அமைந்திருந்தது.

ஒருவர் வேதாமத்தை அணுகத் தொடங்கும் போது ஒரே நேரத்தில் அந்த நபரை ஆட்கொள்ளவும் செய்கிறது, ஆச்சரியப்படுத்தவும் செய்கிறது. ஒருவரால் வேத வாக்கியங்களில் உலகத்தோற்றத்தையும்,

மத்திய கிழக்கில் சர்வ வல்ல தேவனை சேவித்த ஒரு சிறு கூட்டத்தையும், கடைசியாக, தேவனுடைய இறுதிக்கட்ட வெளிப்பாட்டையும் காணமுடியும். பல வழிகளில், சுவிசேஷப் புத்தகங்கள் கிறிஸ்தவத்தின் மையத்தை பதிவு செய்திருக்கின்றன. கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவை மாதிரியாக வைத்து வாழ முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்.

இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கிய சுவிசேஷப் புத்தகங்களைத் தொடர்ந்து ஒருவரால் ஆதித்திருச்சபையின் வரலாற்றை அப்போஸ்தலருடைய நடப்புகளில காணலாம். புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களில் இயேசு தம்முடைய செய்தியை உலகத்திற்கு எடுத்துச் செல்லப்பன்னிருவரை தெரிந்து கொண்டார் என்பதை ஒருவரால் கற்றுக்கொள்ள முடியும். ஆனால், அப்போஸ்தலர் நடப்புகள் இப்பணியை பேதுரு மற்றும் பவுல் செய்ததாக வலியுறுத்துகிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்குப் பிறகு ஒருவரால் (ரோமரிலிருந்து – பிலேமோன் வரை) கடிதங்களை வாசிக்க முடியும். இவைகள் பவுலால் எழுதப்பட்டவைகள். பவுலால் எழுதப்பட்ட இந்த கடிதங்கள் கிறிஸ்தவர்கள் எப்படி கிறிஸ்து மூலமாக தேவனுக்கு சிறந்த ஆராதனையை ஏறெடுக்க முடியுமென்று போதித்தன. பவுலின் நிருபங்களைத் தொடர்ந்து மற்ற அப்போஸ்தலர்களால் எழுதப்பட்ட நிருபங்களையும் ஒருவரால் காணமுடியும் (எபிரெயர் – யூதா ). இந்த எழுத்துக்கள் ஆதிதிருச்சபையின் நம்பிக்கை மற்றும் நடைமுறையைப் பற்றிய பல்வேறுபட்ட போதனைகளால் நிறைந்திருக்கிறது. புதிய ஏற்பாட்டின் கடைசி புத்தகம் கடைசி காலத்தை முன்னறிவிக்கிறது. அக்காலத்தின் பூமியில் உள்ள ஜனங்களெல்லாம் கிறிஸ்துவை ராஜாவாகவும், கர்த்தாவாகவும் கொண்டாடத்தக்கதாக அவர் சகல ஜனங்களையும் நமக்கு கீழ்ப்படுத்துவார்.

ஒருவரால் தன் சொந்த மொழியில் வேதாகமத்தைக் காணமுடியும். வேதாகமத்தின் மூல பாஷைகளை எபிரெய மொழியில் அச்சிபட்ட வேதாகமத்தையும், கிரேக்க மொழியில் எழுதப்பட்ட வேதாகமத்தையும் எண்ணற்ற வேதவித்தகர்களும், வேதாகம மாணவர்களையும் யூத மதத்திலும், கிறிஸ்தவத்திலும் இன்னும் பயன்படுத்திக் கொண்டு தான் இருக்கிறார்கள். இன்று வேதாகமம் எண்ணற்ற

மொழிகளில் கிடைக்கிறது. கிறிஸ்தவத்தின் உற்சாகமூட்டும் அம்சம் என்னவென்றால், தேவன், ஒருவர் எபிரெய, கிரேக்க மொழிகளை அறிந்திருக்கிறாரா என்பது பற்றி அக்கறைப்படவில்லை என்பதுதான். தேவனை அறிந்துகொள்வதற்கு பிரதான ஆதாரம் வேதாகமம் தான். தேவன் நற்செய்தியை இப்பூமிக்கு அறிவிக்க வேதாகமம் தேவனுடைய வாயாக இருந்து வருகிறது. எளிய நடையில் சொல்ல வேண்டுமென்றால், உலகத் தோற்றமுதல் தேவன் மனிதர்களோடு எப்படி இடைப்பட்டார் என்பதை நமக்கு அறிவிக்க வேதகாமம் அவருடைய கருவியாக இருக்கிறது. மனித இனம் தேவனோடு எப்போதுமே நட்பை பகிர்ந்து கொள்ள அவர் கிறிஸ்து மூலமாக நமக்கு வழியை உண்டாக்கி யிருக்கிறார்.

**முக்கியமான வசனங்கள் மீதான துரித வர்ணனை** (மத்தேயு 5:43–44)

"உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவை சிநேகிப்பாயாக என்று சொல்லப்பட்டதை கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்"; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

**நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்மை மையப்படுத்தியே கட்டளைகளை விதித்தாரா ?**

நிச்சயமாகவே, நாம் அவசரப்பட்டு இல்லை என்று தான் சொல்வோம். இருந்தபோதிலும், ஒரு நிமிடம் நாம் நின்று சிந்திப்போம். நான் என் சத்துரு மீது எப்படிப்பட்ட மனநிலையைக் கொண்டிருக்கிறேனோ அது வாய் ரீதியாகவோ, சரீரப் பிரகாரமாகவோ வெளிபடுத்தப்பட்டால் தான் ஒருவன் அதை உணரமுடியும். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அப்படிச் செய்வதில்லை.

நம் அன்றாட வாழ்வில் நாம் பெரும்பாலும் பகை உணர்வை வெளிப்படுத்தாமல் மனதுக்குள்ளேயே போட்டு புழுங்கி கொள்வோம். அது ஆழ்மனதில் கடுந்தீயைப் போல் கொழுந்துவிட்டு எரிகிறது;

ஆனால் அந்த பகையுணர்வும், கோபமும் நம் மனதுக்கும், சரீரத்திற்கும் என்ன செய்யும்? மருத்துவர்களும், விஞ்ஞானிகளும் நம் உடல் உறுப்புகளில் உண்டாகும் பெரும்பாலான உயிர்க்கொல்லி நோய்கள் கோபத்தின் விளைவுகள் என்று நெடுங்காலம சொல்லி வருகிறார்கள். எனவே, இயேசு இங்கே தம்முடைய சீஷர்களிடம் சத்துருக்களை சிநேகியுங்கள் என்று கட்டளையிட்டபோது இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கும் அன்பு அல்லது சிநேகம் என்பதற்கான கிரேக்கப் பதம் உணர்வுப்பூர்வமான அன்பை குறிக்காமல், நாம் மற்றவர்களை எப்படி நடத்துகிறோமோ அதன் மனநிலையைக் குறிக்கிறது. இங்கே கிறிஸ்து உண்மையாகவே இறுதியில் தற்காப்புக்கு வழிநடத்தும் கட்டளையைத்தான் கொடுத்தார்.

பின் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என்று இயேசு கட்டளையிட்டபோது, அந்த ஜெபங்களின் இறுதி விளைவு என்னவாயிருக்க முடியும்? அந்த ஜெபங்களுக்கான பதில் நம்மிடம் பகைகொண்டிருந்த அந்த ஆத்துமா மனமாற்றம் அடைய வேண்டும் என்பதற்காகதான் இருக்கக்கூடும். சவுலுக்கு என்ன நடந்தது ? காலமும், காட்சிகளும் சத்துருவின் மனநிலையை பாதிக்கும் இன்றைய உலகில் அது அந்த நபருடைய ஒட்டு மொத்த இருதய மாற்றத்திற்கு வழிவகுக்கும். எனவே, நம்மைப் பகைக்கிறவர்களுக்காக நாம் ஜெபிக்கும்போது, அந்த ஜெபங்கள் அந்த ஆத்துமா நம்முடடைய பிரியமான சகோதரனாகவோ, சகோதரியாகவோ மாறுவதற்கு கருவியாக அமையும். நான் மறுபடியும் கேட்கிறேன், கிறிஸ்துவின் கட்டளைகள் அவரை மையப் படுத்தியவைகளா ? நீண்ட கால அடிப்படையில் நாமல்லவா நன்மைகளைப் பெறுவதற்கு உத்திரவாதிகளாக இருக்கிறோம். ✝

## உண்மையாய் இல்லையெனில்

| | |
|---|---|
| 1. தேவன் தமது முகத்தை மறைப்பார். | உபா 32:20 |
| 2. எஜமான் தண்டிப்பார். | லூக்கா 12:46 |
| 3. நம்பிக்கை குறைந்து போகும். | லூக்கா 16:11 |
| 4. தேசத்தின் மேல் கர்த்தருக்கு வழக்குகளும். | ஓசியா 4:1 |
| 5. மாறுபாடான சந்ததியாக மாறும். | உபா 32:20 |


# ஜீவனை ஒட்டச்செய்யும் பசை

## The Glue Of Life

Clarence Lavender

1992 வருடம் செப்டம்பர்28 ஆம் தேதி Time பத்திரிக்கையில் ஒரு அருமையான கட்டுரை வெளியானது. அந்தக் கட்டுரையின் தலைப்பு ஜீவனை ஒட்டச் செய்யும் பசை என்பதாகும். அக்கட்டுரை Dick Thompson அவர்களால் எழுதப்பட்டது. அக்கட்டுரை நம் உடலில் உள்ள செல் அமைப்பின் ஒட்டும் தன்மையை பற்றியதாகும்.

நம் சரீரத்தில் உள்ள உயிருள்ள செல்கள் ஒட்டும் தன்மையை உடையதாய் இல்லாவிட்டால்,நாம் எல்லோரும் வழுவழுப்பாக காணப்படும் கூழ் போன்ற அமைப்பைத்தான் பெற்றிருப்போம். ஆனால்,அதிர்ஷ்டவசமாக நம் சரீரத்தில் உள்ள செல்கள் சரீர உருவத்துக்கும், அதன் செயல்பாட்டுக்கும் அவசியமான அடிப்படை உயிரியல் தன்மையான ஒட்டும் தன்மையை பெற்றிருக்கின்றன. நம் சரீரத்தில் உள்ள செல்கள் அதிக வழுவழுப்புத் தன்மையை பெற்றிருந்தால் தமனியில் ஓடும் ரத்தத்திற்கு பெரிய தடை ஏற்பட்டு புற்றுநோய் செல்கள் நம் சரீரத்தில் சர்வ சாதாரணமாக விளையாடிக் கொண்டிருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையில், நம் உடலில் ஏற்படும் வீக்கங்கள் வற்றுவதற்கு மிகுந்த சிரமம் ஏற்படும். மேற்சொல்லப்பட்ட கட்டுரை அறிவியல் உலகில் பலருடைய புருவங்களை உயர்த்தி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.



மேற்சொல்லப்பட்ட கட்டுரையை நான் முழுமையாக படித்துடித்த பிறகு தேவன் நம்மை எப்பஜ பிரம்மிக்கத் தக்க அதிசயமாய் உண்டாக்கியிருக்கிறார் என்று மலைத்து நின்றேன். எவ்வித சந்தேகம் இன்றி எல்லா வகையான பாவங்களும் தேவன் உண்டாக்கிய நம் சரீரத்தில் மிகப்பெரிய குறையை,மிகப்பெரிய கறையை ஏற்படுத்திவிட்டது. ஏனென்றால், தேவன் அவ்விதமான குறையோடு நம் சரீரத்தை உண்டாக்கவில்லையே. தேவன் உண்டாக்கியதெல்லாம் நன்றாகவே இருந்தது. ''அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார்,அது மிகவும் நன்றாய் இருந்தது; சாயங்காலம் விடியற்காலமாகி ஆறாம் நாள் ஆயிற்று (ஆதியாகமம்1:31).

தேவனுடைய அற்புதமான சிருஷ்டிப்பை பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் இதே வேளையில் ஆவிக்குரிய சரீரமாகிய சபையின் ஒற்றுமையை பற்றியும் சிந்தித்துப் பார்க்கிறேன்.சபையாகிய சரீரத்துக்கு கிறிஸ்துவே தலையாயிருக்கிறார் [கொலோசெயர்1:18]. வேதாகமம் போதிக்கிறபடி சபையானது அதன் தன்மையையும், செயல்பாட்டையும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டுமென்றால் சபைக்குள் ஒற்றுமையும் ஒருங்கமைவும் எப்போதும் நிலைக் கொண்டிருக்க வேண்டும். எனவே தான் நம் ஆண்டவராகிய இயே' கிறிஸ்து இவ்விதமாக ஜெபித்தார் '' நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்கிறேன். அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும் .பிதாவே . நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாய் இருக்கவும் வேண்டிக்கொள்கிறேன். நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும், படி நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்கு கொடுத்தேன் [யோவான்17:20-22].

சபையின் அங்கத்தினர்களாகிய நமக்கு ஆவியின் ஒருமையை காத்துக் கொள்ளும் பொறுப்பும்,கடமையும் தரப்பட்டிருக்கிறது. இதை மனதில் கொண்டவராகத்தான் எபேசியர் 4:3 ல் சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையை காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாக இருங்கள் என்று சொல்லுகிறார். இவ் வசனத்தின் பொருள் ஆவிக்குரிய பந்தத்தை காத்துக் கொள்வதற்காக நாம் கடுமையான முயற்சி எடுப்பது மட்டுமல்லாமல் அதற்காக நாம் மிகச் சிறந்ததைச் செய்ய வேண்டும் . அது மாத்திரமில்லாமல்,சமாதான கட்டினால் ஆவியின் ஒருமையை காத்துக் கொள்வதற்கு நாம் மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாம் நம்முடைய சிறந்ததை செய்யாவிட்டால், ஆவிக்குரிய சரீரத்தில் பல பிரச்சனைகள் எழும்பும் அது ஆவிக்குரிய சரீரத்துக்கு சொல்லொண்ணா தீங்கை விளைவிக்கும்.

நம் உடலில் உள்ள செல்கள் அதிக ஒட்டும் தன்மையை பெற்றி ருந்தாலோ அல்லது அதிக வழுக்கும் தன்மையை பெற்றிருந்தாலோ அது உடலுக்கு எப்படி ஊறுவிளைவிக்குமோ அதேபோல ஆவிக்குரிய சரீரத்திலும் மித மிஞ்சிய நிலை ஊறுவிளைவிக்கும். எனவே தான், ஆவிக்குரிய சரீரத்தில் மிதமிஞ்சியநிலை எப்போதுமே தவிர்க்கப்பட வேண்டும்.

அதாவது மத சம்மந்தமான காரியங்களில் பழைய சிந்தனைகளைப்

பிடித்துக் கொள்கிறவர்களாகவும் இருக்கக் கூடாது,அதே நேரத்தில் மிகவும் தாராளமயமாகவும் இருக்கக் கூடாது. இரண்டு மித மிஞ்சிய நிலைகளாலும் சபைக்கு எந்த நன்மையும் கிடைக்காது. நம்டைய ஆவிக்குரிய ஒற்றுமை நம்டைய அதிகாரமாகிய வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் [ 2 தீமோத்தேயு3:16,17;2 யோவான் 9–11]. வேதாகமம் மட்டுமே நம்மை ஒன்றிணைக்கும் சக்தியாக இருக்கிறது [யோவான்10;10].

சகோதரர்களே, நாம் சமாதான கட்டினால் ஆவியின் ஒருமையை காத்துக் கொள்ள வேண்டுமென்றால் நாம் தனிப்பட்ட நபர்களாக நம்டைய பொறுப்பை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் பொறுப்பு ஆராதனையிலும், சபை மூலமாக நடத்தப்படும் எல்லா கூட்டங்களிலும் பங்கெடுப்பது நம் அயலகத்தாருக்கு 'விசேஷத்தை போதிப்பது,உற்சாகமாக தேவனுக்கு கொடுப்பது நம்டைய தாலந்துகள் எல்லாவற்றையும் தேவனுக்காக பயன்படுத்துவது போன்றவைகளை உள்ளடக்கும். நம் செயல்பாட்டுக்கான ஆதாரம் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் அன்பாகவும் தேவன் மீதான அன்பாகவும் இருக்க வேண்டும். அதனால் தான் தேவன் பவுல் மூலமாக இவ்விதமாகச் சொன்னார்.

அன்புடன் சத்தியத்தை கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நம் வளருகிறவர்களாய் இருக்கும்படியாக அப்படிச்செய்தார். அவராலே சரீரம் ழுவதும்,அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசையாய் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவம் தன் தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாக சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது'' [எபேசியர் 4:15 16].

நித்தியத்திற்காக இவ்வுலகில் நம்மை நாம் ஆயத்தமாக்கி கொண்டிருக்கும் இந்த நாட்களிலே சபையில் ஒருவருக்கொருவர் உண்மையான அன்பும், இசைவும்,ஒற்றுமையும் ஒருங்கமைவும் இருக்க வேண்டும். ஆவிக்குரிய பிரகாரமாக இருந்தாலும் சரி, சரீர பிரகாரமாக இருந்தாலும் சரி ஒற்றுமை என்பது தற்செயலாக ஏற்படாது. ஒற்றுமை ஏற்பட ஒவ்வொரு சபை அங்கத்தினரும் தங்கள் முழுமையாக பங்களிப்பை அளிக்க வேண்டும் [எபேசியர் 4: 15].

✝

சபை

# ஊழியக்காரர்கள்
# Ministers
Dwight Fuqua

என்னுடைய அலுவலகக் கதவில் ஊழியக்காரன் பெயர் போடப்பட்டிருக்கும் ஒரு பலகை காணப்படும். பிரசங்கியார்கள் ஊழியக்காரர்களா? பிரசங்கியார்கள் மாத்திரம் தான் ஊழியக்காரரா?

புதிய ஏற்பாட்டில் பல சந்தர்ப்பங்களில் பிரசங்கியார்கள் ஊழியக் காரர்களாக குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னை உடன் ஊழியர்களோடுII விசுவாசிக்கிறதற்கு ஏதுவாய் இருந்த ஊழியக்காரர் என்று குறிப்பிடுகிறார் (1 கொரிந்தியர் 3:5). கிறிஸ்துவின் ஊழியக்காரர்2 கொரிந்தியர்11:23; புதிய உடன் படிக்கையின் ஊழியக்காரர் என்றும் தன் உடன் ஊழியர்களை பவுல் குறிப்பிடுகிறார் (2 கொரிந்தியர்3:6). ஒரு பிரசங்கியாரை ஊழியக்காரர் என்று குறிப்பிடுவது பொருத்தமானது தான். இருந்த போதிலும், ஊழியக்காரர் என்னும் பதம் என்ன பொருள் கொடுக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது. அது ஒரு அதிகாரப்பூர்வமான பதவி அல்ல. ஓர் ஊழியக்காரர் என்ன செய் கிறாரோ அதை விவரிக்கும் பதம் தான். எனவே, ஓர் ஊழியக்காரன் ஒரு வேலைக்காரராயிருக்கிறார். மேற்சொல்லப்பட்ட வசனப் பகுதியில் இடம்பெற்றிருக்கும் ஊழியக்காரர் என்னும் பதம் "diakonos" என்னும் கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகும். எனவே, ஒரு பிரசங்கி யாரை ஊழியக்காரர் என்று குறிப்பிடும் போது அவர் தேவனுக்கு ஊழியம் செய்கிறார் என்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம்.

அப்படி என்றால் பிரசங்கியார்கள் மாத்திரம் தான் ஊழியக்காரரா ? அப்படி இல்லை. ஊழியக்காரர் என்பதன் பொருள் வேலைக்காரராய் இருக்கிற படியால் புதிய ஏற்பாட்டில் இந்த ''diakono??'' என்னும் கிரேக்க பதம் சாதாரண வேலைக்காரர்களை குறிக்கும் படியாகவும்(, யோவான் 2:5), அர' ஊழியர்களை குறிக்கும்படியாகவும்( ரோமர்13:4), கள்ள போதகர்களை உதவிக்காரரை குறிக்கும் படியாகவும்(1 தீமோத்தேயு3:8-13), இயேசுக்' கிறிஸ்துவை குறிக்கும் படியாகவும்

பயன்படுத்தப்பட்டிருக்கிறது [ரோமர் 15 :8]. எனவே? ஓர் ஊழியக்காரர் வேலைக்காரராக இருக்கிறார் ஒரு வேலைக்காரர் ஊழியக்காரராக இருக்கிறார். குறிக்கும்படியாகவும்[2 கொரிந்தியர் 11:15], சபையில் அதேபோல் ஒரு ஊழியக்காரர் வேலைக்காரராக இருக்கிறார். இங்கு கருத்து என்னவென்றால் வெறுமனே பிரசங்கியார் மாத்திரம் அல்ல, ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஊழியக் காரராயிருக்கிறார். உங்களில் எவனாகியிலும் முதன்மையானவனாய் இருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன் என்று நம் எஜமான் சொன்னார் [மத்தேயு 20 :26]. ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான், ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார் [யோவான் 12:26].

✝

*ஞாயிற்றுக்கிழமை அநேகர் செய்யும் பாவங்கள்*

1. ஆயத்தமாகமல் சபைக்கு வருவது.
2. ஜெபிக்காமல் சபைக்கு வருவது.
3. வேதத்தை தியானிக்காமல் சபைக்கு வருவது.
4. தாமதமாக சபைக்கு வருவது.
5. பிறருடன் ஒப்புரவாகாமல் மனக்கசப்புடன் சபைக்கு வருவது.
6. பைபிள் இல்லாமல் சபைக்கு வருவது.
7. அரை மனதுடன் சபைக்கு வருவது.

# மற்றவர்களோடு நன்றாக வேலை செய்தல்
# Working Well With Others

Ronald D. Reeves

ஒரு சிறந்த சபை மற்றவர்களோடு இணைந்து நன்றாக வேலை செய்து சக அங்கத்தினர்களோடு ஆழமான தெய்வ பக்திக்கேற்ற ஐக்கியத்தை மேம்படுத்த பாடுபடும் அங்கத்தினர்களை கொண்டிருக் கிறது. பிலிப்பி பட்டணத்து கிறிஸ்தவர்களோடு அப்போஸ்தலனாகிய பவுலுக்கு இருந்த பணி உறவு நேர்மறையான வெளிச்சத்தில் காட்டப்பட்டு அது நம் எல்லோருக்கும் நல்ல முன்மாதிரியாக இருக்கிறது (பிலிப்பியர் 4:3). அப்போஸ்தலனாகிய யோவானும் கூட தேவபக்தியுள்ள ஐக்கியத்தை மேம்படுத்த தன் விருப்பத்தை வெளிப்படுத்தினதை அவர் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு எழுதின நிருபத்தில் நாம் காண முடியும்( 1 யோவான் 1:3). மற்றவர்களோடு இணைந்து நன்றாக பணி புரிவது உண்மையுள்ள தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் ஆழமான மற்றும் உறுதியான ஐக்கியத்தை ஏற்படுத்த வழிவகுக்கிறது. தங்கள் சக வேலை ஆட்களோடு தரமான பணி உறவை கொண்டு அதில் வெற்றி பெற்றவர்கள் தனிப்பட்ட அதிகாரம், கௌரவம், செல்வாக்கு போன்றவைகளுக்குமுக்கியத்துவம் கொடுப்பதில்லை. மாறாக, இப்படிப்பட்டவர்கள் பிராந்திய சபையில் தங்களுக்கு எந்த வேலை உகந்தது என்பதை தேடுகிறவர்களாக இருக்கிறார்கள்(1 கொரிந்தியர்12). இத்தகைய முயற்சிகள் மூலமாக தெய்வ பக்தி உள்ள ஐக்கியம் மேம்படுத்தப்பட்டு தரமான முறையில் தாக்கத்தை ஏற்படுத்து கிறது. காலமானது ஒரு கிறிஸ்தவருக்கு மற்ற கிறிஸ்தவர்களோடு நெருக்கமாக பணிபுரிய வாய்ப்புகளை அளிக்கும். நம் தனிப்பட்ட அதிகாரம், கௌரவம் செல்வாக்கு போன்றவைகளை நாம் இழந் தாலும் கூட கிறிஸ்துவின் சரீரத்தில் மற்றவர்களோடு இணைந்து பணி புரிய மாற்று வழிகளை தேர்ந்தெடுக்க தேவன் நமக்கு ஞானத்தை தருவாராக.

ஆசிரியர் குறிப்பு: ஒரு சபை இயேசு கிறிஸ்து உடையது என்பதை ஒரு பிராந்திய சபை எப்போதும் நினைவில் வைத்திருந்தால்,பிராந்திய சபைகளில் காணப்படும் அனாவசியமான கூச்சல் குழப்பத்தையும், பிரிவினை வாதத்தையும் தவிர்க்கமுடியும் அல்லது கட்டுப்படுத்த முடியும். கிறிஸ்துவின் சரீரம் அல்லது சபை (எபேசியர் 4:12) மடிந்து போகும் மனிதர்கள் தங்கள் ஆதிக்கத்தை செலுத்த சண்டை போடுவதற்கு அது ஒரு மனித சொத்தல்ல (3 யோவான் 9–11). ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் கிறிஸ்துவின் ஊழியக்காரரா யிருக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவராய் இருக்கக் கூடாது (11 தீமோத்தேயு2:24).

# தேசமே, உனக்கு ஐயோ !

# Woe To the Land !

Denny Petrillo.

தேசத் தலைவர்கள் "முதலில் ஆட்டம் பாட்டம், பின்பு வேலை" என்னும் தத்துவத்தை தேசத்தில் நடைமுறைப்படுத்தினால் அத்தேசத்தில் நிறைய பிரச்சனைகள் உண்டாகும். ஏனென்றால், நன்றாகப் புசித்துக் கூத்தாடிவிட்டு பின்பு வேலை செய்யலாம் என்றால் வேலை செய்வதற்கு நேரமே கிடைக்காது. நம்முடைய நலனில் அக்கறை உள்ளவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும். நாம் அவர்களைச் சார்ந்து தான் இருக்கிறோம்.

இங்கே சாலொமோன் பிரசங்கி 10:16ல் அரசியல் அறிவியலுக்கான ஆலோசனைகளை கொடுக்கவில்லை. அவ்வசனம் இப்படியாக சொல்கிறது. **ராஜா சிறுபிள்ளையுமாய், பிரபுக்கள் அதிகாலமே உண்கிறவர்களுமாயிருக்கப்பட்ட தேசமே, உனக்கு ஐயோ !** இங்கே ஞானி ஒருவருடைய நேரத்தை ஞானமாக பயன்படுத்துவதைக் குறித்து பேசுகிறார்.

**முதலாவது, வேலை நெறிகள் மற்றவர்களைப் பாதிக்கிறது**

தேசத்து ராஜாவின் சோம்பேறித்தனம் அத்தேசத்தின் மீது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதேபோல், பெற்றோர்களின் சோம்பேறித்தனம் பிள்ளைகள் மீது நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒரு நிறுவனத்தில் மோசமான வேலை அறநெறிகள் பின்பற்றப்படும்போது அந்நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டு மற்ற பணியாளர்கள் அதிக வேலை செய்ய காரணமாகி விடுகிறது. சபையில் செய்யப்படும் 80 சதவீதம் பணிகள் 20 சதவீத அங்கத்தினர்களால் செய்யப்படுகிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நம் சரீரத்திலுள்ள எல்லா உறுப்புகளும் அதன் அதன் பங்களிப்பை ஆற்றுவதுபோல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கத்தினர்களாக இருக்கும் நாமும் அவரவருடைய பங்களிப்பை ஆற்ற வேண்டும் [I கொரிந்தியர் 12:11; ரோமர் 12:3] சாலொமோன் முன்பே **செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவே அதை உன் பெலத்தோடே செய்** என்று சொல்லியிருந்தார் [பிரசங்கி 9:10] ஞானி பிரசங்கி 11:6ல் **காலையிலே உன் விதையை விதை ; மாலையிலே உன்கையை நெகிழவிடாதே**

**இரண்டாவது, நம் வேலை நெறிகள் நம்மைப் பாதிக்கிறது.**

நமக்கு நல்ல வேலை அறநெறிகள் இல்லையென்றால், நாம் பாடுபடுவோம். சாலொமோன் **மிகுந்த சோம்பலினால் மேல்மச்சுப்**

**பழுதாகும் ; கைகளின் நெகிழ்வினாலே வீடு ஒழுக்காகும்** [பிரசங்கி 10:18] என்று கணித்தார். நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம். மேலும், சாலொமோன் சோம்பேறி மோசமான விளைவுகளை அறுப்பான் என்று குறிப்பிடுகிறார் [நீதிமொழிகள் 6:9–11]

**மூன்றாவது, நம் வேலைநெறிகள் தேவனைப் பாதிக்கிறது.**

நாம் நற்கிரியைகளை செய்யும்படியாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் [எபேசியர் 2:10; தீத்து 2:14; யாக்கோபு 2:14–26]. சோம்பேறித்தனம் தேவனுடைய கோபாக்கினையை வருவிக்கும். **மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்** [கலாத்தியர் 6:7]. ஓசியா தீர்க்கதரிசி சிலவேளைகளில் நாம் விதைத்ததை விட அதிகமாகவே அறுப்போம் என்று குறிப்பிடுகிறார் [ஓசியா 8:7].

பொதுவாக, செல்வம் உற்சாகமின்மையையும், சோம்பேறித்தனத்தையும் கொண்டுவருகிறது என்னும் உண்மை எல்லோராலும் அங்கீகரிக்கப்படுகிறது [பிரசங்கி 5:11]. நம்முடைய செல்வத்தினாலே நாம் மெத்தனமாகி விட்டோமோ? ஒரு கிறிஸ்தவன் வேலை ஸ்தலத்திலும் [கொலோசெயர் 3:23], கர்த்தருடைய வேலையிலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் [II தீமோத்தேயு 2:15].

## எச்சரிக்கையாயிருங்கள்

உங்கள் எண்ணங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்
ஏனென்றால், அவைகள்தான் வார்த்தைகளாகின்றன.

உங்கள் வார்த்தைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.
ஏனென்றால், அவைகள்தான் செயல்களாகின்றன.

உங்கள் செயல்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்
ஏனென்றால், அவைகள்தான் பழக்கங்களாகின்றன.

உங்கள் பழக்கங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்
ஏனென்றால், அவைகள்தான் குணங்களாகின்றன.

செயலில் கிறிஸ்தவம்

# நியாயமான சோதனை

# A Fair Test

Aaron Cozort

பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், ஓர் ஆணையைப் பிறப்பித்தான். ராஜா தான் உண்ணும் போஜனத்திலேயும், தான் குடிக்கும் திராட்ச ரசத்திலேயும் தினம் ஒரு பங்கை தன் அரசாங்கத்தில் சேவை செய்ய பயிற்சி எடுத்துக்கொண்டிருந்த நான்கு வாலிபர்களுக்கும் கொடுக்கக் கட்டளையிட்டான். ஆனால், அந்த நான்கு வாலிபர்களும் ராஜா தங்களுக்கு ஒதுக்கிய போஜன பதார்த்தத்தையும், திராட்ச ரசத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா ஆகிய நான்கு வாலிபரும் யூதாவைச் சேர்ந்தவர்கள். இந்த நால்வரும் தான் யூதா தேசத்திலேயே மிகச் சிறந்தவர்களாக இருந்தார்கள். பாபிலோனிய ராஜா யூதாவை முற்றுகையிட்டபோது அவர் இந்த நால்வரையும், வேறு பலரையும் தன் அரமனையிலே சேவை செய்ய பயிற்சி அளிக்கும்படியாகக் கொண்டு போனார்.




தானியேலும், அவருடைய நண்பர்களும் ராஜாவால் நியமிக்கப்பட்ட உணவு வகைகள் ருசியுள்ளதாய் இருக்கும் என்பதை அறிந்திருந்தார்கள். அதே நேரத்தில் தேவன் மோசே மூலமாக தங்கள் முற்பிதாக்களிடத்தில் என்ன பேசினார் என்பதையும் அறிந்திருந்தார்கள். அதாவது, ருசியுள்ள அந்த ராஜ போஜனத்தையோ அல்லது போதை தரும் அந்த திராட்சரசத்தையோ ருசிபார்க்கக்கூடாது என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அப்படிச் செய்வது தேவனுக்கு முன்பாக அவர்களை அசுத்தப்படுத்துவது மாத்திரமல்ல, தேவனுடைய கட்டளைகளுக்கு விரோதமாக அவர்களை மாற்றும்.

எனவே, இந்த நால்வரும் தங்களுக்கு மாற்று ஆகாரம் கொடுக்கப் பட வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். தானியேல் ராஜ

போஜனத்தினாலும், திரட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தாத படி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். ஆனால், பிரதானிகளின் தலைவன் ராஜா தன்னை சிரச்சேதம் செய் வார் என்று பயந்து தானியேலின் விண்ணப்பத்திற்கு தயக்கம் காட்டினார்.

**தானியேல் மாற்றை நாடினார்.**

தானியேல் 1:12–13 வசனங்கள் இவ்விதமாகச் சொல்கின்றன. “அப்பொழுது பிரதானிகளின் தலைவனாலே, தானியேல், அனனியா, மீஷாவேல் அசரியா என்பவர்கள் மேல் விசாரிப்புக்காரனாக வைக்கப் பட்ட மேல்ஷார் என்பவனைத் தானியேல் நோக்கி : பத்துநாள் வரைக் கும் உமது அடியாரைச் சோதித்துப் பாரும். எங்களுக்குப் புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும், என்று ”

**சோதனை அங்கீகரிக்கப்பட்டது.**

**பத்துநாள் சென்ற பின்பு ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப் பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது** [தானியேல் 1:15]. தேவன் தானி யேல், அனனியா, மீஷாவேல், அசரியா போன்றோருடைய உண்மைத் தன்மைக்காக அவர்களை ஆசீர்வதித்தார். ஞானத்துக்கும், புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக்கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும், ஜோசியரி லும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்.

இச்சம்பவத்திலிருந்து இங்கே நமக்கு சில பாடங்கள் உள்ளன. நன்மை, தீமை இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுக்கும்படி நமக்கு சூழ் நிலை ஏற்பட்டால், நாம் முடிவெடுத்துவிட்டால், அவிசுவாசிகள் நம் வழியில் குறுக்கே தடையாக வரும்போது நாம் பின்வாங்கக்கூடாது. கடைசியாக, நாம் சரியான செயலை செய்யத் தெரிந்தெடுத்து, அதில் பொறுமையோடு நிலைத்திருக்கும் போது, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாகி, நம்மை விசாரிக்கும் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

✝

## செயலில் கிறிஸ்தவம்
## Christian Relationships
## கிறிஸ்தவ உறவுகள்

Gary C. Hampton

**நா**ம் எல்லோரும் பாவிகளாயிருக்கிறோம். பாவத்தின் பலன் நித்திய மரணமாகும் [ரோமர் 3:23;6:23]. தேவன் தம்முடைய இளகிய மனதினாலே, இரக்கத்தினாலே நம் இரட்சிப்பிற்கு வழி வகுத்திருக்கிறார். அந்த இரக்கத்தின் அடிப்படையில், பவுல் தன் சக கிறிஸ்தவர்கள் தங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறார் [ரோமர் 12:1]. ஒரு கிறிஸ்தவனுடைய சரீரம் தேவுனுடையதாக இருக்கிறபடியால், அது தேவனுடைய பணிக்காக பாவக் கறைபடாதபடி தூய்மையாக, பரிசுத்தமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். ஒவ்வொருவரும் தேவசித்தத்தை செய்வதன் மூலமாக அவர் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் அவரவர் சரீரங்களை வைத்துக்கொள்ள வேண்டும் [I யோவான் 5:3]. இது நியாயமானதுதான். ஏனென்றால், தேவன் கிறிஸ்தவர்களுடைய சரீரங்களைத் தம்முடைய குமாரனுடைய இரத்தத்தைக் கொண்டு வாங்கியிருக்கிறார் [I கொரிந்தியர் 19-20, I பேதுரு 1:18-19].

பவுல் ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள், இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரிக்கக் கூடாது என்று விரும்பியிருக்கிறார். மேலும், கிறிஸ்தவர்கள் தேவனுடைய வழியின் மதிப்பை உணர்ந்து கொள்வதற்காக தங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்டுமென்று அறிவுறுத்துகிறார் [ரோமர் 12:2; II கொரிந்தியர் 3:17-18; 4 :16; 5:17; I பேதுரு 1:14-15]. அவர்கள் கிறிஸ்தவர்களாவதற்கு முன்பாக மாம்ச இச்சையின்படியே நடந்து, மாம்சமும், மனசும் விரும்பினவைகளைச் செய்து வந்தார்கள். இப்போது அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்களாகிவிட்டபடியால், தேவனுடைய உயரிய அளவுகோலின் நன்மையை பரிசோதித்துப் பார்க்கும் படியாக அவர்களை பவுல் கேட்டுக்கொண்டார்.

மேலும், பவுல் ரோமக் கிறிஸ்தவர்கள் தங்களைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண

வேண்டும் என்று கட்டளையிடுகிறார் [ரோமர் 12:3]. நம் ஆண்டவர் **சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்** என்று சொல்லியிருக்கிறார் [மத்தேயு 5:5]. நாம் பெற்றிருக்கும் எந்த ஈவும், திறமைகளும் நம்மால் உண்டானவைகள் அல்ல, தேவனால் கொடுக்கப்பட்டவைகள். அவனவனுக்குரிய பங்கை தேவன் அளந்துகொடுக்கிறார். யாருக்கும் தங்கள் தகுதி மதிப்பு போன்றவற்றை வைத்துக்கொண்டு மற்றவர்களைவிட சிறந்தவர்கள் என்று சொல்லும் உரிமை இல்லை. எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையம் சகலத்தையும் தேவனே கொடுக்கிறார் [அப்போஸ்தலர் 17:25].

சபையும் மனித சரீரம் போன்றதாகும். பல உறுப்புகள் சேர்ந்துதான் ஒரு சரீரத்தை உண்டாக்குகிறது. ஒவ்வொன்றுக்கும் அதினதின் செயல்பாடு உண்டு. எந்த உறுப்பும் தான் மற்ற உறுப்பை விட சிறந்தது என்று பெருமைப் பாராட்ட முடியாது [ரோமர் 12:4-5; I கொரிந்தியர் 12:2-27].

நாம் ஒவ்வொருவரும் உலக சிந்தை நம்மை ஆட்கொள்ள அனுமதிக்காதபடி தேவ சித்தத்தை நிறைவேற்றப் பாடுபட வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவரும் கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதர சகோதரிகளின் மதிப்பை உணர்ந்துகொள்ள வேண்டும். அவர்களைப் பாராட்ட வேண்டும், அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். இவைகளின் மூலமாக தேவனோடும், அவருடைய குடும்பத்தோடும் நல்ல உறவைக் கொள்ளமுடியும்.

✝

## பொறாமை


1. காயின் ஆபேலை கொன்றது பொறாமையினால்
   [ஆதி 4:1-8]
2. யோசேப்பை சகோதரர்கள் விற்றது பொறாமையினால்
   [ஆதி 37:11]
3. தாவீதை சவுல் பகைத்தது பொறாமையினால்
   [1சா 18:1-9]
4. மொர்தெகாயை ஆமான் தூக்கிட நினைத்தது பொறாமையினால்
   [எஸ்தர் 3:1-6]
5. இயேசுவை ஏரோது கொலை செய்ய நினைத்தது பொறாமையினால்
   [மத் 2:1-11]

## நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?

Betty Burton Choate

பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில் ; பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது.

நீங்களோ, பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள். அல்லாமலும், நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து



சிலருக்கு இரக்கம் பாராட்டி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து, மாம்சத்தால் கறைபட்டிருக்கிற வஸ்திரத்தை வெறுத்துத் தள்ளுங்கள். வழுவாதபடி உங்களைக்காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக் குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமேன்! யூதா, 3 20–25

# நம் ஜெபங்களுக்கு தடையாயிருப்பவை!

# Some things that Hinder our Prayers!

David Conley

நாம் தேவனிடம் ஜெபிக்கும்போது, தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சில விளைவுகளைக் காண முடியும் ! நாம் தேவனிடம் ஜெபங்களை ஏறெடுக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார் ! நாம் ஜெபிக்கும் போது, தேவன் நம் ஜெபங்களுக்கு பதிலளிக்கிறார் ! ஓ ! இதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்; அண்டசராசரங்களை உண்டாக்கின தேவன் நம் ஜெபங்களை கவனிக்கிறார். நம் தேவன் இப்பூமியை அசைக்க நம் ஜெபங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறார். ஆனால், நம் ஜெபங் களைத் தடைசெய்யும் சில காரியங்களும் இருக்கத்தான் செய்கின் றன. இவைகள் நம் ஜெபங்கள் வல்லமையுள்ள ஜெபங்களாக ஆகாதப டிக்கு தடைசெய்கின்றன. கீழே பட்டியலிடப்பட்டிருக்கும் ஆறு காரி யங்கள் நம் ஜெபங்களுக்கு பெருந்தடைகளாக இருக்கின்றன.

1. சாத்தான் [எபேசியர் 6:12] ; I பேதுரு 5:8].


2. சந்தேகம் [யாக்கோபு 1:6–7 ; மத்தேயு 11:22–24].

3. தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுதல் [யாக்கோபு 4:3].

4. மாய்மாலம் [மத்தேயு 6:5–8].

5. பெருமை [லூக்கா 18:9–41].

6. பாவம் [I பேதுரு 3:7 ; யோபு 42:8].



அடுத்தமுறை நாம் தேவனிடம் ஜெபிக்கும்போது, இத்தடைகள் நம்மி டமிருந்து நீங்கிப்போகும்படி தேவனி டம் கேட்கவேண்டும் ! தேவன் நம் விண்ணப்பங்களுக்கு விடையளிக்க விரும்புகிறார் ; அவைகள் தடைபட அனுமதிக்க வேண்டாம்.

✝

# ஆவியோடும், கருத்தோடும்

## With the spirit and with the understanding also

Rudney Nulph

கிறிஸ்தவம் ஒரு பாடும் மார்க்கமாகும் ! தேவனுடைய ஜனங்கள் பாடுவார்கள். உண்மையில், பாடல் என்பது கட்டளயிடப்பட்ட ஆராதனையின் ஒரு பங்காகும் [எபேசியர் 5:19; கொலோ 3:16]. இருந்தபோதிலும், ஓர் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளைக்கு பாடல் என்பது கட்டளையைத் தாண்டிய ஒன்றாக இருக்கிறது. நாம் தனிப்பட்ட முறையில் தேவனை ஆராதிப்பதாக இருந்தாலும் சரி, பொது இடத்தில் தேவனை ஆராதிப்பதாக இருந்தாலும் சரி, சர்வவல்லவருக்கு துதிபாடல்களை ஏறெடுப்பதன் மூலமாக சிறந்த முறையில் ஆராதிக்க முடியும். உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் யாக்கோபு ஆசிரியருடைய ஞானத்தின்படி வாழ்கிறார்கள் "... ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்" [யாக்கோபு 5:13]. அப்போஸ்தலனாகிய பவுல் தேவ ஆவியினால் ஏவப்பட்டு நாம் ஏறெடுக்கும் பாடல் ஆவியோடும், கருத்தோடும் இருக்க வேண்டும் என்று அறிவிக்கிறார் [I கொரிந்தியர் 14:15]. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டு மாதிரியின்படி வாய்ப்பாட்டுக்கான தேவையும், அவசியமும் இருப்பதை புரிந்து கொண்டாலும் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன் என்னும் பகுதிக்கு யாரும் அதிக அழுத்தம் கொடுக்கப்படுவதில்லை என்று ஆசிரியர் பயப்படுகிறார். நாம் ஆவியோடும் பாட வேண்டும், கருத்தோடும் பாட வேண்டுமென்றும் தேவன் கட்டளையிடும்போது அவர் என்ன பொருள்படும்படி அப்படிக் கட்டளையிடுகிறார் ?

முதலாவது, ஆவியோடும் கருத்தோடும் என்பது கவனம் செலுத்துவதை உள்ளடக்குகிறது. I கொரிந்தியர் 14 ஆம் அதிகாரத்தின் உடனடி சந்தர்ப்பத்தை நாம் பார்த்தால், அங்கே கொரிந்து விசுவாசிகள் ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக பக்தி வைராக்கியமாக இருந்தார்கள் [அற்புத அடையாளங்கள் ]. ஆனால், மற்றவர்களுடைய ஆவிக்குரிய பக்திவிருத்தியில் விருப்பமில்லாதவர்களாக இருந்தார்கள் [I கொரிந்தியர் 14:12]. கொரிந்து சபையில் அற்புத அடையாளங்கள் செய்யும் வரம் கொடுக்கப்பட்டதற்கான முக்கிய காரணம் அந்த வரங்களைப் பயன்படுத்துபவர்களுக்கு மாத்திரமல்ல எல்லோருக்கும் ஆவிக்குரிய அறிவில் ஒரு புரிதல் ஏற்படவேண்டும் என்பதாகத்தான் இருந்தது.

இன்றைய நாட்களில் அற்புத அடையாளங்கள் செய்யும் வரம் இல்லையென்றாலும் கூட, விதி இன்றும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. வாய்ப்பாட்டின் ஒரு பலன் அது ஆராதிப்பவர்களை பக்தி

விருத்தியடையச் செய்கிறது (I கொரிந்தியர் 14:16). நாம் பாடலின் போது வார்த்தைகளிலும், அதன் அர்த்தத்திலும் கவனம் செலுத்த வில்லையயென்றால் நம் பாடல்கள் திரும்ப திரும்ப வார்த்தைகளை ஒப்புவிக்கும் செயலாகத்தான் இருக்கும். அத்தகைய சூழ்நிலையில் நாம் தேவ எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்வதில்லை, பாடலுக்கான தேவையையும் பூர்த்தி செய்வதில்லை.

இரண்டாவது, "ஆவியோடும் கருத்தோடும் என்பது வியாக்கியானம் செய்வதை உள்ளடக்குகிறது". புரியாத, தெரியாத வார்த்தைகளை உள்ளடக்கிய பாடலைப் பாடுவது ஆவிக்குரிய பிரகாரமாக நேரத்தை வீணடிக்கும் செயலாகும். பாடலின் வரிகளைப் புரிந்து பாடுவது தேவனைப் பிரியப்படுத்துவதின் ஒரு முக்கிய பகுதியாகும். பாடலின் போது நமக்கு கவலை அளிக்கும் மற்றுமொரு காரியம் என்னவென்றால், அவைகள் சத்தியத்தை போதிப்பதில்லை. மாறாக, அவைகள் தவறைப் போதிக்கின்றன. ஆராதனைப்,பாடல்கள் என்று அழைக்கப்படும் பாடல்களில் நாம் பாடும் பெரும்பாலான பாடல்கள் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களால் எழுதப்படவில்லை. எனவே, ஒரு பாடல் நம் பாடல் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது என்பதற்காக அது ஆவிக்குரிய பாடல் என்று பொருள் படாது. பல பாடல்கள் ஆயிரம் வருட அரசாட்சி, விசுவாசத்தினாலே மாத்திரம் போன்றவைகளை போதிக்கின்றன. பல பிராந்திய சபைகள் கள்ள உபதேசங்கள் உபதேசிக்கப்படுவதை அனுமதிப்பதில்லை. ஆனால், பாடல்கள் மூலமாக கள்ள உபதேசங்கள் ஊடுருவ அனுமதிக்கின்றன. ஒரு கர்த்தருடைய சபையின் மூப்பர்கள் பாடல் புத்தகத்தை ஆராய்ந்தபோது அதில் கள்ள உபதேசங்களைக் கண்டுபிடித்து அப்பாடல்களைப் பாடவேண்டாம் என்று பாடல் புத்தகத்தில் முத்திரைப் போட்டுவிட்டார்கள். இது மூப்பர்கள் நம் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் இருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாயிருக்கிறது (எபிரெயர் 13:17). பாடல் என்று நாம் பிரதானமாக கவலைப்படுகிற காரியம் இசைக்கருவிகளை பயன்படத்தக்கூடாது என்பதுதான். கிறிஸ்தவ ஆராதனையிலே இசைக்கருவிகளை பயன்படுத்த எந்த அதிகாரமும் இல்லை என்பது உண்மையாக இருந்தாலும், அதில் மாத்திரம் நாம் கவனம் வைத்து பாடல் வரிகளில் உள்ள உபதேசப் பிழைகளை கண்டுகொள்ளாமல் இருப்பது தேவனுக்கு பிரியமாயிருக்காது.

மூன்றாவது, ஆவியோடும் கருத்தோடும் என்பது ஊக்கப்படுத்துதலை உள்ளடக்கியதாயிருக்கிறது.

ஆவியோடு பாடுதல் என்பது நம் உணர்வுகளை ஈடுபடுத்துகிறது. நம் உணர்வுகள் நாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட வரங்களாக இருக்கின்றன. நாம் தேவனை துதிக்கும்போது அவைகள் ஈடுபடுத்தப்படவேண்டும். பாடல் நமக்கு ஒரு பாதையை வகுத்து தந்திருக்கிற நாம் பாடினபடியே வாழ வேண்டும். நம் பாடல் நம்மை ஊக்கப்படுத்தவில்லையென்றால் அப்பாடல் சரியான முறையில் நிறைவேற்றப்பட்டதா என்று ஒருவர் கேள்வி எழுப்பிக்கொள்ள வேண்டும். பாடல் அதன் தன்மையிலேயே நம் உணர்வுகளை உயர்த்தி, தாக்கத்தை ஏற்படுத்துகிறதாயிருக்கிறது.

ஆவிக்குரிய பாடல் என்பது நம் இருதயங்களில் அக்கினியை உண்டாக்கி, நாம் அனல் மூட்டப்பட்ட நிலையில், நாம் யாரைப்பற்றி பாடினோமோ அவருக்கு சேவை செய்ய நம்மைத் தூண்ட வேண்டும். நம் ராஜாவைப் போற்றி துதிப்பதற்கு மிகச் சிறந்த வழிகளில் ஒன்று பாடல் பாடுவது என்று நம்புகிறேன். அடுத்த முறை நம் இருதயத்தில் கர்த்தரைப் பாடடிக் கீர்த்தனம் பண்ணும்போது ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன் என்னும் பவுலின் புத்திமதிகளை நினைவில் கொள்வோம். “ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்” [எபிரெயர் 13:15]. “என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக” [சங்கீதம் 19:14].

✝

## திரும்ப வனைந்த பாண்டம்.

| | | |
|---|---|---|
| 1. தோமா | = | இரண்டாம் விசை வந்து கர்த்தர் அவரை சந்தித்தார் – யோ.20: 26– 29 |
| 2. யோனா | = | இரண்டாம் விசை கர்த்தர் வார்த்தையை தந்தார். யோனா.3:1,2 |
| 3. குருடன் | = | இரண்டாம் விசை கர்த்தர் கண்களை தொட்டார்.மாற்.8:22–25 |
| 4. சிம்சோன் | = | இரண்டாம் விசை கர்த்தர் அவரை ஆவியால் நிரப்பினார். நியா.16:28–30 |
| 5. பேதுரு | = | இரண்டாம் விசை கர்த்தர் அவரை சந்தித்தார். யோ.21:3–7 |


# பாடல்
# Singing

Cecil may, Jr

நாம் தேவனை ஆராதிக்கவும், ஒருவருக்கொருவர் போதித்து புத்திச்சொல்வதற்கும் சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும், ஞானப், பாட்டுகளையும் பாடுகிறோம் [எபேசியர் 5:19; கொலோ 3:16]. இந்த மூன்று பதங்களுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளைக் கண்டறிய பல முயற்சிகள் எடுக்கப்பட்டும், எந்த ஒரு விளக்கமும், பரவலாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இருந்தபோதிலும், சங்கீதங்கள், கீர்த்தனைகள், மற்றும் ஞானப் பாட்டுக்கள் கூட்டாக மது போதையில் பாடப்படும் பாடல்கள், காதல் பாடல்கள், போர்ப் பாடல்கள், நகைச்சுவைப் பாடல்கள் போன்றவைகளிடமிருந்து வேறுபடுகின்றன. சங்கீதங்கள், கீர்த்தனைகள், மற்றும் ஞானப்பாட்டுக்களில் இடம் பெற்றுள்ள உணர்வுகள் மற்றும் வார்த்தைகள் என்ன நோக்கத்திற்காக அவைகள் இயற்றப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்றன.அதாவது, அந்த நோக்கம் தேவனை துதிப்பதும், ஒருவருக்கொருவர் போதித்து, புத்திசொல்வதுமாயிருக்கிறது. பாட்டின் இசைவும், வேகமும் முக்கியம் தான். ஆனால், பாடல் வரிகள் மிக முக்கியமானதாகும்.

பாடல், போதனை மற்றும் புத்திசொல்லுதல் ஆகிய இரு நோக்கங்களையும் சிறப்பாக நிறைவேற்றுகிறது. ஆர்கன், கீபோர்ட், பியானோ, கிட்டர் போன்ற இசைக்கருவிகள் எந்த நோக்கத்தையும் நிறைவேற்றுவதில்லை.



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன்பாடி [கொலோசெயர் 3:16].என்று பார்க்கிறோம்.

## அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

# அசிங்கத்தை மேற்கொள்ளுதல்

# Over coming Ugly

Tam Raynor

என் சகோதரி கள்ளிச்செடி பயிர் செய்வதை பொழுதுபோக்காகக் கொண்டிருந்தாள். அவளுக்கு விசித்திரமான, தோற்றத்தில் அசிங்கமான கள்ளிச்செடிகளை கண்டுபிடித்து அதிலிருந்து அழகு சாதன பொருட்களைச் செய்வது கைவந்த கலையாகும். சமீபத்தில் அவள் சில கள்ளிச் செடிகளைப் பார்த்து புகைப்படம் எடுத்து எனக்கு அனுப்பியிருந்தாள். அந்த கள்ளிச்செடி எந்த வகையைச் சேர்ந்தது என்பதை அறியாதபடியாலும், அதன் உண்மையான பெயர் தெரியாதபடியாலும் அதற்கு கம்பளிப்பூச்சி என்று பேர் வைத்து அழைத்தாள். அது பாவத்தைப் போல் அசிங்கமாகவும், பார்ப்பதற்கு மிருகக் கழிவுகளைப் போலவுமிருக்கும். இருந்த போதிலும் ஒரு நாள் திடீரென தோல் போன்ற அமைப்பு தோற்றமளித்தது, அதுவும் பார்ப்பதற்கு அசிங்கமாகத்தான் இருந்தது. இரண்டு நாட்களுக்கு பிறகு, ஓர் அழகான பூ அத்தோலில் இருந்து எட்டிப்பார்த்தது. அந்தப் மென்மையாகவும், இளஞ்சிவப்பு, ஊதா, மற்றும் நீல வர்ணங்களில் காட்சி அளித்தன. அம்மலர் பல அடுக்குகளுடன் அழகாக இருந்தது. என் சகோதரி அனுப்பிய புகைப்படங்களை பார்த்து என் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. "ஓ இது மக்கள் போன்றது" ! என் மனதில் உதித்த கருத்துக்களை கீழ்க்கண்டவாறு பதிவு செய்கிறேன். அழுக்கிலிருந்து கூட அழகு ஊற்றெடுக்கும்.

பாவம் இந்த கம்பளிப்பூச்சி கள்ளியைவிட அசிங்கமானது. ஆனால் மனிதர்கள் தங்களை அழகு படுத்திக்கொள்ளவும், அழகான மலர்களை இயேசு கிறிஸ்து மூலமாக உண்டாக்கவும் தேவன் வழியை ஏற்படுத்தியிருக்கிறார். இயேசு கிறிஸ்து இல்லை என்றால் இன்னும் பாவத்தில் தான் உழன்று கொண்டிருப்போம். நாம் கிறிஸ்துவில் நாம் அழுக்கான அசிங்கமானவைகளை மேற்கொண்டு அழகான காரியங்களை உருவாக்க முடியும் ! அப்போஸ்தலனாகிய பவுல் பெருமையாக "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்" என்று அறிவித்தார் [கொலோசெயர் 1:13].

இதன் காரணமாக அனுதின அடிப்படையில் ஆவிக்குரிய கண்ணாடியில் நாம் நீண்ட நேரம் நம்மை நாமே உற்றுப்பார்த்து, தொடர்ந்து புது சிருஷ்டியாகிக் கொண்டே இருக்க வேண்டும் [ரோமர் 12:1-2; II கொரிந்தியர் 5:17; கலாத்தியர் 6:15]. அழுக்கானவைகளிலிருந்துஅழகானவைகளை உருவாக்குவதில் தேவனுக்கு நிகர் யாருமில்லை. தேவனுக்கு இணையான கைவினைக் கலைஞர் யாருமில்லை [எசேக்கியேல் 37].

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" [ரோமர் 12:1,2].

✞

## விசுவாசம்.

1. சொன்னால் போதும் - நூற்றுக்கதிபதி [லூக்7:7 1-10]

2. தொட்டால் போதும் பெரும்பாடுள்ள ஸ்திரீ [மாற் 5:27,25-34]

3. இருந்தால் போதும் - மார்த்தாள், மரியாள் [யோ11:21.32, 1-45]

4. பார்த்தால் போதும் - சகேயு [லூக் 19:3 1-10]

5. நினைத்தால் போதும் சிலுவையில் இருந்த கள்ளன் [லூக்23:42]

***நம்முடைய விசுவாசம் எப்படி ?***

# உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது ?

# For what is your Life ?

Sunny David

கடந்து செல்லும் ஒவ்வொரு வருடமும் இப்பூமியில் நம் காலம் எவ்வளவு குறுகியது என்பதை நமக்கு நினைப்பூட்டிக் கொண்டே இருக்கிறது. யாக்கோபு ஆசிரியர் சொன்னது போல், "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே, உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது ? கொஞ்சங்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே"(யாக்கோபு 4:14). நம் வாழ்க்கையின் சுருக்கமும், பெலவீனமும், நிச்சயமின்மையும் ஒவ்வொருவருடைய அதீத நம்பிக் கையும், மலையான எதிர்பார்ப்பையும் கட்டுப்படுத்த வேண்டும். இருந் தபோதிலும், கிட்டத்தட்ட எல்லோருமே இப்பூமிக்குரிய ஜீவன் கொஞ் சங்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக் கிறது என்பதை உணராமல், தொடர்ச்சியாக இப்பூமியில் வாழலாம் என்று எதிர்பார்ப்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. நாம் உத்தே சித்திருக்கும் காரியங்களை அடுத்த சில வாரங்களில் செய்யலாம் என்று நாம் திட்டமிடலாம். ஆனால், நாம் வாழ்க்கையில் அதைச் செய்து முடிக்காமல் தடுக்க எது வேண்டுமானாலும் நடக்கலாம். இங்கே, கருத்து கவனிக்க வேண்டிய நம் வாழ்க்கை நிச்சயமற்றதாயி ருக்கிறது என்பது தான். நாளைக்கு என்ன நடக்கும் என்பதுகூட நமக்குத் தெரியாது, அடுத்த வருடம் என்ன நடக்கும் என்பது நமக்கு நிச்சயம் தெரியவே தெரியாது (நீதிமொழிகள் 27:1).

மனிதனுடைய சரீர வாழ்க்கை நிச்சயமற்றதாக இருந்தாலும் கூட (I பேதுரு 1:24) அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கை நிச்சயமான ஒன் றாக இருக்கிறது. ஆரம்பத்தில் ஏதேன் தோட்டத்தில், மனிதன் தேவ சா யலிலும், தேவனுடைய ரூபத்தின்படியேயும் உண்டாக்கப்பட்டபடி யால், அவன் தன் சிருஷ்டிகரைப்போல் என்றென்றும் வாழும்படி யாகத்தான் உண்டாக்கப்பட்டான். ஆனால், மனிதனுடைய பாவம் அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது (ஆதியாகமம் 1:26-27). இப்பூ மியில் மனிதனுடைய சரீர வாழ்வே அவனுடைய முடிவல்ல. மனிதனு டைய ஆவிக்குரிய தன்மையை முற்றிலுமாக அழிக்க இப்பூமியிலே எந்த சக்தியும் இல்லை. மனிதனுடைய சரீர வாழ்க்கை இப்பூமியோடு மறைந்து போனாலும், அவனுடைய அடுத்த வாழ்க்கை ஆவிக்குரிய உலகில் தொடரும்.

இவ்வாழ்க்கை நிச்சயமற்றதாக இருக்கிறபடியால் நாம் ஒவ்வொருவரும் ஆயத்தமாகி, நித்தியத்திற்காக பொக்கிஷங்களை சேர்த்து வைக்கவேண்டும். இருந்தபோதிலும், இங்கே முரண் என்னவென்றால், மனிதனால் எதை சேமிக்க முடியாதோ அதை சேமிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறான். அந்த செயல்முறையின் போது அவன் சேமிக்க வேண்டிய நித்தியமானதை ஆவிக்குரியதை இழந்துபோகிறான். வரவிருக்கும் உலகத்துக்கு தன்னை ஆயத்தப்படுத்துவதற்கான அவசியம் மண்ணான மனிதனுக்கு சிறிதும் இருப்பது போல் தெரியவில்லை. நித்தியத்தோடு இப்பூமிக்குரிய வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் இங்கே சில நிமிடங்கள் தான் இருக்கிறோம். நம் இரட்சகராகிய கிறிஸ்து இப்பூமியில் இருந்தபோது “பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்” (லூக்கா 12:15). நித்தியத்தோடு ஒப்பிடும் போது இப்பூமிக்குரிய காரியங்கள் அந்த அளவு முக்கியமானவைகளல்ல. அந்த நித்தியத்திற்குள் நீதிமான்கள் இவ்வுலக வாழ்க்கை முடிவடைந்த பிறகு பிரவேசிப்பார்கள் (மத்தேயு 25:46).

எனவே" உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது", ? இப்பூமிக்குரிய காரியங்களை மையமாகக் கொண்டிருக்கிறதா ? அல்லது பரத்திற்குரிய காரியங்களை மையமாக கொண்டிருக்கிறதா ? அப்போஸ்தலனாகிய பவுல் “மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்” (கலாத்தியர் 6:78). பூமிக்குரிய, தற்காலிகமான காரியங்களைத் தேடி நாட்களை வீணடிப்பது ஆவிக்குரிய காரியங்களுக்கு மேல் சரீரப்பிரகாரமான காரியங்களை தெரிந்தெடுத்து வாய்ப்புகளை வீணடிப்பது அன்றாட மானிட வாழ்வின் அங்கமாகவே மாறிவிட்டது.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, “மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்” என்று கேட்டார். (மத்தேயு 16:26). ஆதியிலே

மனிதன் தேவனிடமிருந்து நேரடியாக பெற்றுக்கொண்ட ஆத்துமா தான் உலகிலேயே விலை உயர்ந்த பொருளாக இருக்கிறது (ஆதியாகமம் 2:7). ஆகவேதான், மனிதனை பாவத்திலிருந்து மீட்க தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை இப்பூமிக்கு அனுப்பி நமக்காக சிலுவையில் மரிக்கும்படி ஒப்புக்கொடுத்தார் (யோவான் 3:16; I யோவான் 2:2). இவ்வுலகில் மனித வாழ்க்கை நிச்சயமற்றதாக இருந்தாலும் கூட நித்தியம் நிரந்தரமானதும் நிச்சயமானதுமாயிருக்கிறது. பின்னே ஏன்?

நாம் தேவனுடைய ஈவான நித்திய ஜீவனை ஏற்றுக்கொள்ளக் கூடாது? தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்போது நாம் தேவனுடைய அந்த ஜீவகிரீடத்தை பெற்றுக்கொள்ள மரணபரியந்தம் உண்மையுள்ள வாழ்க்கையை வாழ வேண்டும் (வெளி 2:10).

✝

## சபைகள் ஏன் மந்தமாகி விடுகிறது?

1. விசுவாச குறைபாட்டால் – (ரோமர். 1:17)

2. உலகப்பிரகாரமாவதால் – (I யோ.2:15)

3. குளிருமில்லாமல் போவதால், அனலுமில்லாமல் போவதால் (வெளி.3:15-16)

4. சபை ஒழுங்கை கடைபிடிக்காததால். (I கொரி.5 ம் அதி)

5. ஒழுங்காகக் கொடுக்க மறுப்பதால் – (I கொரி.16:2)

6. ஜெபமின்மையால் – ஜெபகுறைச்சலால் – ரோமர்.3:11

## அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

# நாள் முழுவதும் – ஒவ்வொரு நாளும்–தேவனுக்கு நன்றி செலுத்துதல்

# Thanking God All Day - Every Day

Marilyn Lastrape

2016 நவம்பர் மாதத்தில் நான் ஒரு கட்டுரையை எழுதினேன். அக் கட்டுரையின் தலைப்பு, தேவன் நமக்கு எல்லாவற்றையும் தருகிறார். என்பதாகும். அதிலிருந்தே என் கவனம் கிட்டத்தட்ட எண்ணற்ற முறை வேதாகமத்தின் பக்கம் இழுக்கப்பட்டு தேவன் நமக்கு என்னதரு கிறார் ஏன்தருகிறார் என்று வேதாகமம் சொல்வதைக் குறித்து சிந்தித் துக் கொண்டிருக்கிறேன். மேலும், அவர் நான் இவ்வுலகத்தை முடி வுக்குக் கொண்டுவரும் வரை என்ன செய்வார் என்று தெளிவாகத் தெரிவிக்கிறது. எதுவாக இருந்தாலும் தேவன் அதை நமக்குத் தரவில் லையென்றால் உண்மையாகவே நாம் எதையும் பெற்றுக் கொள்ளவதுமில்லை, பெற்றுக்கொள்ளவும் முடியாது !




தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்''[ஆதியாகமம் 2:7]. எதுவாக இருந்தாலும் தேவன் அதை நமக்குத் தரவில்லையென்றால், உண்மையாகவே நாம் எதையும் பெற்றுக் கொள்வதுமில்லை, பெற்றுக்கொள்ளவும் முடியாது என்னும் மாற்ற முடியாத உண்மை எவ்வித விவாதத்திற்கும் இடமின்றி உறுதிபடுத்தப்படுகிறது. தேவன் ஆதாமுக்கு ஜீவ சுவாசத்தைக் கொடுக்கும் வரை அவன் பிணமாகத்தான் இருந்தான். “தேவன் ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதின பிறகே அவன் ஜீவாத்துமாவானான்''. யோபு 12:10ல் சகல பிராணிகளின் ஜீவனும் மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது “என்று வாசிக்கிறோம்''. தேவன் அநியாயஞ்செய்யாமலும், சர்வ வல்லவர்

நீதியைப் புரட்டாமலும் இருக்கிறது மெய்யே. பூமியின் மேல் மனுஷனுக்கு அதிகாரம் கொடுத்தவர் யார் ? பூச்சக்கரம் முழுவதையும் ஒழுங்குப்படுத்தினவர் யார் ? அவர் தம்முடைய இருதயத்தை அவனுக்கு விரோதமாகத் திருப்பினாராகில், அவனுடைய ஆவியையும், அவனுடைய சுவாசத்தையும் தம்மிடத்தில் இழுத்துக் கொள்ளுவார்.

கிறிஸ்தவர்கள் தேவனுக்கு நன்றி செலுத்துவதென்பது நாம் எப்படி இயற்கையாக சுவாசிக்கிறோமோ அதேபோல் இருக்க வேண்டும். நாம் ஜீவனுக்காக, ஆரோக்கியத்திற்காக, பெலனுக்காக, பராமரிப்புக்காக, அக்கறைக்காக, அனுதினமும் நன்றி செலுத்த வேண்டும். தேவன் நம் சுவாசத்தை அவர் கரங்களில் வைத்து, நம் வழிகளையெல்லாம் கட்டுப்படுத்துகிறார். உமது கட்டளைகளையும் உமது சாட்சிகளையும் காத்து நடக்கிறேன் ; என் வழிகளெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது"என்று வேதம் சொல்கிறது. நன்றி செலுத்துவதை நினைவு கூரும்படியாக ஒரு எழுத்தாளரின் கருத்துக்கள் கவனத்தை ஈர்க்கிறது. "நம் ஆயுசு நாட்கள் குறைக்கப்பட்டிருந்தாலும் கூட, நாம் கர்த்தருடைய நன்மையான காரியங்களை அனுபவிக்காமல் இல்லை. அதையெல்லாம் வைத்து நாம் பார்க்கும் போது நம்முடைய மோசமான காலக்கட்டங்களில் கூட நன்றி நிறைந்த உணர்வோடு அவரைத் துதிப்பதுதான் பொருத்தமான ஒன்றாயிருக்கும். தேவன் தம்முடைய பார்வையை படச் செய்கிறதற்காக அனுதினமும் நன்றி செலுத்துகிறோமா" ?

"எந்தாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக, நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே.

நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளும் தேவனாயிருக்கிறார். ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கதும் வழிகளுண்டு (சங்கீதம்" 68:19,20). "நான் படுத்து நித்திரை செய்தேன், விழித்துக் கொண்டேன் கர்த்தர் என்னைத் தாங்குகிறார்" (சங்கீதம் 3:5) சமாதனத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன், கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர் (சங்கீதம் 4:8). சங்கீதம் 68 : 19-20 குறித்து ஒரு வேதவித்தகர் இவ்விதமாகச் சொல்கிறார்.

தேவனுடைய ஆசீர்வாதங்கள் விட்டுவிட்டு வருவதில்லை, அது அனுதினத்துக்குமானது. தேவனுடைய ஆசீர்வாதங்கள் நமக்கு குறைவாக அல்ல அபரிதமாக கிடைக்கிறது. நாம் சோகத்தில் மூழ்கிப்போனால், நம் தேவன் நமக்கு ஆறுதலை அளிக்கிறார்; நாம் பயத்தோடிருந்தால் அவர் நமக்கு தைரியத்தைத் தருகிறார். பாரம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் சரி, நம் தேவன் அதிலிருந்து நமக்கு விடுதலையை தருகிறார்.

மரணம் நம்மை எல்லாப் பக்கத்திலும் நெருக்குகிறது. நாம் ஒவ்வொரு நாளும் மரணத்தின் விளிம்புவரை சென்று வருகிறோம். செய்தித்தாள்களில் நாம் காணும் மரணச்செய்திகளும், நாம் தினமும் காணும் மரண ஊர்வலங்களும் மரணம் எவ்வளவு உண்மையானது என்பதைக் காட்டுகின்றன. இருந்தபோதிலும் அதன் தாக்கம் கடுமையானதாக இருக்கும். மனிதன் மரணத்திற்கு மருந்து கண்டு பிடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறான். ஆனால், அதில் அவன் வெற்றி பெறவே இல்லை, வெற்றி பெறவும் முடியாது. "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபிரெயர் 9:27).

தேவன் நம்மீது பொழிந்து கொண்டிருக்கின்ற ஆசீர்வாதங்களுக்கு நன்றிசெலுத்திக் கொண்டிருந்தாலும், நாம் அதிக கவனத்தைக் கொடுக்க வேண்டிய வசனம் ( I தெசலோனிக்கேயர் 5:17) தான். " இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்பது சிறிய வனசமாக இருந்தாலும் கூட அது அதிக வல்லமை உடையதாக இருக்கிறது. தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிற விதத்தைப் பார்த்தால் நான் முழுவதும் அவரை நாம் ஸ்தோத்தரித்துக் கொண்டே இருக்கவேண்டும். தேவன் நம்மிடத்தில் இவ்விதமாக அன்புகூருவதைத் தெரிந்து கொள்ளும்போது, நாள் முழுவதும் நாம் தேவனுக்கு நன்றி சொல்ல நாம் ஏன் விரும்பக்கூடாது? "மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து, ஆனந்த சத்தத்தோடே அவர்"சந்நிதிமுன் வாருங்கள் என்று சங்கீதம் 100 : 2ல் வாசிக்கிறோம். ஓர் வர்ணனை, நாம் அவருடைய மேய்ச்சலின் ஆடுகளாய் இருக்கிறபடியால் நம் எல்லா ஆவிக்குரிய ஆகாரத்திற்கும் தேவனே ஆதாரமாயிருக்கிறார்.

சங்கீதம் 107;81, வசனங்கள் இவ்விதமாகச் சொல்கின்றன. கர்த்தரைத் துதியுங்கள். அவர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது அவருடைய கிருபையினிமித்தமும்; மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதிப்பார்களாக.

தேவன் நமக்குச் செய்யும் நன்மைகளுக்காக நாம் நாள் முழுவதும் நன்றி செலுத்திக்கொண்டிருக்கிறோமா? தேவனை மகிமைப்படுத்துவதென்பது கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை என்பதை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறோமா? நாம் நாள் முழுவதும் தேவனுக்கு கொடுக்கவேண்டிய துதியையும் கனத்தையும், மகிமையையும் கொடுக்கிறோமா? நம்மெல்லாருடைய பதில் நிச்சயமாக "ஆம்" என்று இருக்கட்டும்.

# ஒரு நபரா அல்லது வெறுமனே ஒரு பாகமா ?

## A Person or Just a Part ?

Victor M. Eskew

பொதுவாக கருக்கலைப்பு பிரச்சனையானது கருவில் இருக்கும் சிசு உயிரோடிருக்கும் நபரா அல்லது வெறுமனே தாயின் ஒரு பாகமா ? என்பதை மையாமாகக் கொண்டே சுழன்று வருகிறது. அது ஒரு நபராக இருந்தால் கருக்கலைப்பு செய்வது சிசுக் கொலையாகும். ஆனால் அது தாயின் ஒரு பகுதியாக இருந்தால், கருக்கலைப்பு என்பது ஒரு செயல்முறைதான். மேற்சொல்லப்பட்ட இரு கருத்துக்களுக்கிடையே மிகப்பெரிய இடைவெளி காணப்படுகிறது

**கேள்விகள் :**

★ சரீரத்தின் ஒரு பாகம் ஒரு முழு மனிதனைப் போலிருக்குமா ?

★ சரீரத்தின் ஒரு பாகத்திற்கு இருதயம் இருக்கிறதா?

★ சரீரத்தின் ஒரு பாகத்திற்கு மூளை இருக்கிறதா ?

★ சரீரத்தின் ஒரு பாகத்திற்கு சிறிய முகம் இருக்கிறதா?

★ சரீரத்தின் ஒரு பாகம் அது நீக்கப்பட்ட பிறகும் வாழ்கிறதா?

★ சரீரத்தின் ஒரு பாகத்திற்கு ஆத்துமா இருக்கிறதா?

★ சரீரத்தின் ஒரு பாகத்திற்கு ஆவி இருக்கிறதா?

★ சரீரத்தின் ஒரு பாகம் தாயின் கர்ப்பப்பையில் இருக்கும் போதே எட்டி உதைக்கிறதா?

★ சரீரத்தின் ஒரு பாகம் கரு வளர்ச்சிப் பரிசோதனையின் போது மனித உருவத்தை பிரதிபலிக்கிறதா?

★ சரீரத்தின் ஒரு பாகம் "அம்மா" என்று கதறுகிறதா?

★ சரீரத்தின் ஒரு பாகம் சரீரத்தை விட்டு வெளியேவந்து தாயின் கையைப் பிடித்து செல்கிறதா?


★ சரீரத்தின் ஒரு பாகத்திற்காகவா லட்சக்கணக்கான மக்கள் அதன் வாழ்வு ரிமைக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள் ?

மேற்காணும் கேள்விகளுக்கு யார் நேர்மையாக பதில் அளித்து விட்டு கருக்கலைப்பு மூலமாக தாயின் கர்ப்பப் பையிலிருந்து அகற்றப் படும் ஒரு சிசு (குழந்தை) சரீரத்தின் ஒரு பகுதிதான் என்று சொல்ல முடியும் ? இது ஒரு பச்சைப் பொய் என்பது எல்லாருக்கும் தெரியும் !

கர்ப்பபையில் இருக்கும் ஒரு குழந்தை எப்படி ஒரு கழுகு குஞ்சு முட்டையில் இருக்கும் போதே கழுகாகத்தான் இருக்கிறதோ அதேப் போல் குழந்தையாகத்தான் இருக்கிறது. இருந்தபோதிலும், நாம் கழுகு முட்டைகளைப் பாதுகாக்க ஒரு சட்டத்தையும், சிறு பிள்ளைகளைக் கொலைசெய்ய அனுமதிப்பதற்கு மற்றொரு சட்டத்தையும் இயற்றுகிறோம். இச்சட்டங்களை இயற்றுகின்ற நம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட அரசு அதிகாரிகளும், இச்சட்டத்தை ஆதரிக்கின்றவர்களும் வெட்கப்பட வேண்டும். கருக்கலைப்பில் ஈடுபட்டு சிறு பிள்ளைகளைக் கொலைசெய்கின்ற மருத்துவர்களும், செவிலியர்களும் வெட்கப்பட வேண்டும். தன் கருவைக் கலைக்கின்ற எந்த ஒரு தாயும் வெட்கப்பட வேண்டும்.

நாம் குழப்பமடைந்த பொல்லாத தேசமாக இருக்கிறோம். நாம் இந்த தேசிய அவமானத்திலிருந்து மனந்திரும்பி வயிற்றில் வளரும் பச்சிளங்குழந்தைகளின் வாழ்வுரிமைக்காக போராட வேண்டும்.

நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டடியால், உம்மைத் துதிப்பேன். உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது, என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புத்தகத்தில் எழுதியிருந்தது. [சங்கீதம் 139:14-16].






# வீட்டில் கிறிஸ்தவர்கள்

## Christians in the home

Beth Johnson

“புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்” [கொலோசெயர் 3:19]. கீழ்ப்படிதலில் வளர நிச்சயமாக மனைவிகளுக்கு நேரம் எடுக்கும். மனைவிகள் தங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படிய வேண்டும், புருஷர்கள் தங்களுக்கு கீழ்ப்படியும்படி மனைவிகளை நிர்ப்பந்திக்ககூடாது.



புருஷர்களும் தங்கள் மனைவிகளில் அன்பு கூர்ந்து எப்படி கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தாரோ அப்படியே மனைவிகளில் அன்பு கூர வேண்டும் [எபேசியர் 5:25-28]. மனைவியை விட உங்களுக்கோ அல்லது உங்கள் வேலைக்கோ அல்லது வேறு ஏதாவது ஒன்றுக்கோ முக்கியத்துவம் கொடுப்பது இக்கட்டளைக்கு இசைவாக இல்லை. மாறாக, எதிராக இருக்கிறது. இங்கே நோக்கம் மனைவி பரிசுத்தமாய் வளருவதற்கும், ஆவிக்குரிய பிரகாரமாக கறைதிரை இல்லாமல் வளர்வதற்கும் அவர்களை உற்சாகப் படுத்துவது [நிர்பந்திப்பதல்ல] இவ்வகையான அன்புக்கு நேரமும், கவனமும், மனைவியின் சரீரப்பிரகாரமான மனரீதியான உனர்வுப் பூர்வமான மற்றும் ஆவிக்குரிய நலன் குறித்த அக்கறையும் அவசியப்படுகிறது.

“பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாகவும், பின்பு சமாதானமும்,சாந்தமும்,இணக்கமுள்ளதாகவும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும் பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயுமிருக்கிறது” [யாக்கோபு 3:17 ] “ தேவன் ஆபிரகாமிடம் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள் என்று சொன்னார். ஒருவர் தன்னுடைய மனதை மாற்றுவதென்பது பெலவீனத்தின் அடையாமல்ல” [ஆதியாகமம் 21:12].

**மனைவிகள் :**

“மனைவிகள் கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்” [கொலோ 3:18]. மனைவிகள் தங்கள் புருஷர்களுக்கு

எந்தக் காரியத்திலெல்லாம் கீழ்ப்படிய வேண்டும்? சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபேசியர் 5:22–24).

இதற்கு ஒரே விதிவிலக்கு கணவன் மனைவி தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டாம் என்று வற்புறுத்தினால், அதற்கு மனைவி கணவனுக்கு கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை (அப்போஸ்தலர் 5:29). மனைவிகள் கணவன்மார்களிடம் எந்தெந்த காரியங்களிலெல்லாம் உடன்படுகிறார்களோ அந்தக் காரியங்களில் மாத்திரம் கீழ்ப்படிவது கீழ்ப்படிதலே அல்லதன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரியும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள் (I கொரிந்தியர் 11:5). அப்படியிருக்கும் போது, கலகம் பண்ணுகிற எதிர்த்துப் பேசுகிற ஸ்திரீ தன் கணவனை எவ்விதமாக கனவீனப்படுத்துவாள்? "குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கீரீடமாயிருக்கிறாள். இலச்சை உண்டுபண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்" (நீதிமொழிகள் 12:4).

**தகப்பன்கள் :**

தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளை பயிற்றுவிக்க வேண்டும் அவர்கள் சோர்வடையச் செய்ய வேண்டாம். "பிதாக்களே உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி அவர்களுக்குக் கோப மூட்டாதிருங்கள்" (கொரிலோசெயர் 3:2). "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" (எபேசியர் 6:4)

பிள்ளைகள் எவ்விதமாக வளர்க்கப்படுகிறார்கள் என்பதைக் குறித்து தகப்பன்மார்கள் மீது தேவன் பொறுப்பை வைத்திருக்கிறார். குழந்தைகளை வளர்ப்பதில் (பயிற்றுவிப்பதில் தகப்பன்மார்கள் ஊக்கமாக ஈடுபட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். சரீரப்பிரகாரமாக பிள்ளைகளின் தேவைகளை சந்திப்பது அவர்களை போஷிப்பது முக்கியமானதுதான். ஆனால், அதைவிட முக்கியமானது பிள்ளைகள் நடக்கவேண்டிய வழியிலே அவர்களை நடத்துவதுதான் (நீதிமொழிகள் 22:6)

**தாய்மார்கள் :**

பிள்ளைகளை வளர்ப்பதில் தாய்மார்களுக்கும் முக்கியப்பொறுப்பு உண்டு. "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து : அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதிமொழிகள் 22:6). ஸ்திரீகள் தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்புள்ளவர்களாயிருந்து, வீட்டில் தரித்திருக்கிறவர்களாயிருக்க வேண்டும் என்று

கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள் [தீத்து 2:45]. இங்கே வீட்டில் தரித்திருக்கிறவர்கள் என்பது சொல் அர்த்தரீதியாக வீட்டைப் பாதுகாக்கிறவர்கள் என்று பொருள்படும். குறிப்பாக, அவர்களுடைய ஆத்துமாக்களை பாதுகாப்பது என்று பொருள்படும். இளம் தாய்மார்கள் முதிர்வயது கிறிஸ்வத் தாய்மார்களிடமிருந்து, பிள்ளைகளிடம் தேவ அன்பை எப்படி வெளிப்படுத்த வேண்டுமென்று கற்றுக்கொள்ள வேண்டும். இதன் பொருள் பிள்ளைகளை எவ்விதமாக சரியான பாதையிலே நடத்த வேண்டுமென்பதை கற்றுக்கொள்ள வேண்டுமென்பதாயிருக்கிறது. "முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்திற்கேற்ற விதமாய் நடக்கிறவர்களும் அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்ததிற்கு அடிமைப்படாதவர்களாயிருக்கவும், தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும் ; தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்தி சொல்லு" [தீத்து 2:3–5].

I தீமோத்தேயு 5:14 ல் ஸ்திரீகள் தான் வீட்டை நடத்த வேண்டுமென்று பார்க்கிறோம். இருந்த போதிலும், வீட்டை நடத்துவதற்கான விதிகள் தேவனிடமிருந்து வர வேண்டும். தான்தோன்றித்தனமாக பெண்கள் வீட்டை நடத்துவதற்கான விதிகளை ஏற்படுத்தி தேவ கோபாக்கினைக்கு ஆளாகிவிடக்கூடாது. வீட்டை நடத்துவதற்கு தேவன் என்னென்ன வழிமுறைகளை கொடுத்திருக்கிறாரோ அவைகளை வைத்து கணவனும், மனைவியும் ஜெபித்து, திட்டமிட்டு அவைகளை வீட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும். வீட்டுத்தலைவர் வெளியே போகும் போது வீட்டை நடத்துவதற்கான விதிகளை மனைவிதான் நடைமுறைப்படுத்த வேண்டும். "பிரம்பும் கடிந்து கொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும், தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்" [நீதிமொழிகள் 29:15].

**பிள்ளைகள் :**

"பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள். இது கர்த்தருக்குப் பிரியமானது" [கொலோசெயர் 3:20]. "பிள்ளைகளே உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்" [எபேசியர் 6:1]. பெற்றாருக்கு கீழ்ப்படிவது சில வருடங்களுக்குத் தான் நீடிக்கும் ; ஆனால், அவர்களை கனப்படுத்துவது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் [I தீமோத்தேயு 5:4,8,16]

# ஆவிக்குரிய பிரகாரமாகவா அல்லது சரீரப்பிகாரமாகவா ?

# SPIRITUAL OR MATERIAL ?

T. PIERCE BROWN

இந்த நாட்களில், ஒரு சாரார் மற்றொரு சாராரை விட ஆவிக்குரியவர்களாக இருப்பதாக சொல்லிக் கொள்ளவதை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். அவர்கள் உரத்த சத்தமாய் துள்ளல் இசையுடன் பாடல்களைப் பாடலாம், பரிசுத்த முத்தத்துடன் ஒருவரை யொருவர் வாழ்த்தலாம், அவர்கள் செய்யும் அல்லது சொல்லும் ஏதாவது ஒன்றினால் தங்களை உயர்வானவர்களாக உணரலாம். இருந்த போதிலும், ‘‘ஆவிக்குரிய’’ என்பதற்கான வேதகாம அர்த்தம் என்ன ?

பெரும்பாலான நம்முடைய உரையாடல்களிலும், ஜெபங்களிலும் ஆவிக்குரியவைகள் மற்றும் சரீரபிகாரமானவைகள் என்று குறிப்பிடப்படும்போது, அவைகள் பிரத்யேகமான வார்த்தைகளாகவே யூகிக்கப் படுகிறது. நம் அகராதியில் அதற்கான அர்த்தத்தைப் பார்த்தால் ‘‘ஆவி சம்மந்தமான’’, ஆவியை உள்ளடக்கிய ‘‘ஜடப்பொருளல்லாத’’ போன்ற விளக்கங்களைக் காணமுடியும். ஏதோ ஒன்று ஒரு பொருளால் உண்டாக்கப்படவில்லையென்றால், அநேகமாக அது ஆவிக்குரியதாகத் தான் இருக்க வேண்டும் ! தேவன் கலாத்தியர் 6:1 ல் இந்தப் பொருள் படும்படியாகவா ‘‘ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவர்களைச் சீர் பொருந்தப் பண்ணுங்கள்’’ என்றார். நிச்சயமாக அந்த அர்த்தத்தில் அவர் அப்படிச் சொல்ல வில்லை ! நம்முடைய பெரும்பாலான சிந்தனையும், மொழி நடையும், சாக்ரட்டீஸ், அரிஸ்டாட்டில் மற்றும் பிளேட்டோ போன்ற தத்துவ ஞானிகளின் கருத்துக்களின் அடிப்படையிலேயே இருக்கிறது. வேதாகம அடிப்படையில் இல்லை.

கலாத்தியர் 6:1 அநேகமாக இந்த அர்த்தத்தைத்தான் கொடுப்பது போல் உள்ளது. ‘‘ஆவிக்குரிய’’ என்னும் பதம் தேவ ஆவியால் உண்டாக்கப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட போன்ற பொருள்களைக் கொடுக்கிறது. இப்பதம் புதிய ஏற்பாட்டில் எப்படிப் பயன்படுத்தப்பட்டடிருக்கிறது, எப்படிப் பொருந்துகிறது என்று பார்ப்போம்.

ரோமர் 1:10 ல் பவுல் சில ஆவிக்குரிய வரங்களைப் பற்றிப் பேசுகிறார்.

பவுல் I கொரிந்தியர் 12:1,11,30,31;14:1,12 போன்ற வசனங்களிலும் ஒரே மாதிரியான காரியத்தை பற்றித்தான் பேசுகிறாரா ? எவ்வித

சந்தேகமுமின்றி ஒரே காரியத்தை பற்றித்தான் பேசுகிறார். அப்படியென்றால், அந்த ஆவிக்குரிய வரங்கள் ஆவியினாலே உண்டாக்கப்படுகிறது [I கொரிந்தியர் 12:8–11].

"ஆவிக்குரிய" என்று எந்த வசனங்களிலெல்லாம் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ அவைகளைப் பற்றிய பகுதி விளக்கங்களைக் கொடுக்கக்கூட பக்கங்களில் இடமில்லை. ஆனால், இந்த வசனப்பகுதிகளை எல்லாம் சாதாரணமாக படித்துப் பார்த்தால் கூட " ஆவிக்குரிய" என்பதற்கு நாம் இதுகாறும் பார்த்த அர்த்தம் தான் பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன். ரோமர் 7:14;15:27;I கொரிந்தியர் 2:13;3:1;9:11 மற்றும் 14:37 போன்ற வசனங்கள் "ஆவிக்குரிய" என்னும் வார்த்தையை தேவ ஆவியினால் உண்டாக்கப்பட்ட ஒன்றாகவே குறிப்பிடுகின்றன என்பதை நம்மால் காணமுடிகிறது. பவுல் I கொரிந்தியர் 15:44–46 வசனங்களில் ஜென்ம சரீரம் மற்றும் ஆவிக்குரிய சரீரத்தைப் பற்றி பேசும்போது நாம் மரணத்திற்குப் பிறகு சரீரத்திலிருந்து பிரிந்து அலைந்து திரிகின்ற ஆவிகளாக இருக்க மாட்டோம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். நமக்கு ஆவிக்குரிய சரீரங்கள் கொடுக்கப்படும். பூமிக்குரிய தாயும், தகப்பனும் இணைந்ததன் காரணமாக இப்போதிருக்கின்ற ஜென்ம சரீரத்தைப் பெற்றிருக்கிறோம். இந்த செயல்முறைக்கு சுமார் பத்து மாதங்கள் எடுக்கும். தேவனுடைய ஆவியானவர் ஆவிக்குரிய சரீரத்தை ஓர் இமைப்பொழுதிலே உண்டாக்கிடுவார்.

I கொரிந்தியர் 10:34 வசனங்களில் "எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள்; எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள்" என்று இஸ்ரவேலர்களைப் பற்றி வாசிக்கிறோம். இங்கே பவுல் இஸ்ரவேலர்கள் புசித்த மன்னாவைக் குறித்தும், கன்மலையிலிருந்து வந்த தண்ணீரையும் பற்றி பேசினபடியால் அவைகள் தேவனுடைய ஆவியால் உண்டாக்கப்பட்டு, ஆவிக்குரியவைகள் என்று அழைக்கப்பட்டன என நாம் முடிவுக்கு வரவேண்டும்.

எபேசியர் 1: 3ல் அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் என்று நாம் காண்கிறோம். இங்கே "ஆவிக்குரிய" என்னும் சொற்றொடர் தேவ ஆவியினால் உண்டாக்கப்பட்டது என்று பொருள் பட்டால் கிறிஸ்துவுக்குள் நமக்கிருக்கின்ற மன்னிப்பு போன்ற ஆசீர்வாதங்களெல்லாம் தேவ கிருபையினால் உண்டானது. எந்த ஒரு மனிதனாலும் அதை உண்டாக்கவோ அல்லது அதை சாதிக்கவோ முடியாது. ஆனால், நிச்சயமாக அந்தக் கிருபை தேவனுடைய நிபந்தனைகளின்படியே தான் எற்றுக்கொள்ளப்பட வேண்டும்.



எபேசியர் 5:19 மற்றும் கொலோசெயர் 3:16 வசனங்களில் “ஞானப்பாட்டுகள்” என்று வாசிக்கிறோம். இதன் மற்றொரு பெயர் ஆவிக்குரிய பாடல்கள் என்பதாகும். இப்பாடல்களை எல்லாம் நாம் ஆவியினால் நிறைந்து பாடவேண்டும் அல்லது கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருக் கும்போது பாடவேண்டும். [கொலோ 3:16]. இந்த கொலோசெயர் 3:16 வசனத்தின் இலக்கண அமைப்பை வைத்து நாம் பார்க்கும்போது கிறி ஸ்துவின் வசனம் நமக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாச மாயிருக்க ஞானப்பாட்டுகள் அல்லது ஆவிக்குரிய பாடல்கள் மூலமாக ஒருவருக்கொருவர் போதித்துச் சொல்லிக்கொண்டு அக்கட்டளைக்கு நாம் கீழ்ப்படிகிறோம். இதற்கு ஒப்பான ஓர் உதாரணம், “பெருக்கி த் தரையை சுத்தப்படுத்து” என்பதாகும். இங்கே சுத்தப்படுத்து என்பது கட் டளையாகும், பெருக்குவது அக்கட்டளை எப்படி செய்யப்படுகிறது என்பதைக் குறிக்கிறது.

I பேதுரு 2:5ல் பேதுரு நாம் ஆவிக்கேற்ற மாளிகையாக கட்டப் பட்டு வருகிறோம் என்று சொன்னபோது தேவ ஆவியினால் உண் டாக்கப்பட்ட சபை ஆவிக்கேற்றதாயிருக்கும் என்று பொருள்படும் படி யாகத்தான் சொல்லியிருக்கிறார். சபையாக நாம் ஆவிக்கேற்ற பலிக ளைச் செலுத்தும்படிக்கு கட்டளையிடப்பட்டிருக்கறோம். தேவனால் கட்டளையிடப்பட்ட பலி ஆவிக்குரிய பலி அல்ல என்று யாராவது மறைக்க முடியுமா?

என் முடிவு ஆரம்பத்தில் தவறாகிப் போனது. எனக்கு தெரிந்த ஓர் வசனம் உண்டென்றால் அது எபேசியர் 6:12 தான். ஏனெனில், மாம்சத் தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்க ளோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. இங்கே வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள் தேவனால் உண்டாக்கப்பட்டவைகளைத் தான் குறிக்கிறது. இந்த பொல்லாத ஆவிகள் தேவனால் உண்டாக்கப்பட்ட வைகள் தான். ஆனால், தேவனுக்கு விரோதமாக கலகம் செய்தபடி யால் தான் பரலோகத்திலிருந்து கீழே தள்ளப்பட்டன.

புதிய ஏற்பாட்டில் ஆவிக்குரிய என்னும் சொற்றொடர் ஒருபோதும் உயிரற்ற எந்த ஒரு ஜடப்பொருளையும் குறிக்கும் விதத்தில் பயன்படுத் தப்படவில்லை. அதேபோல், ஒருவருக்கு பரிசுத்த அடையாளம் கொ டுக்கவேண்டுமென்பதற்காக எந்த ஒரு விசேஷித்தத் தன்மையை குறிக்கும் விதமாகவும் பயன்படுத்தப்படவே இல்லை. வேதகாமத்தில் ஆவிக்குரிய என்னும் வார்த்தை எப்போதுமே தேவ ஆவியினால் உண் டாக்கப்பட்ட ஒன்றைத்தான் குறிக்கிறது. நம் ஆராதனையை அதிக ஆவிக்கேற்றதாக மாற்றுவதற்கான வழி கர்த்தருடைய பந்தியின் போது சிவப்பு வண்ண விளக்குகளை எரியச் செய்வதோ அல்லது ஜெப வேளையின் போது விளக்கொளியை குறைப்பதோ அல்லது வேறெதா வது மனோதத்துவ தந்திரமந்திரங்களோ அல்ல. மாறாக, நம் சிந்தை யும், பேச்சும், செயலும் தேவ ஆவியினால் உண்டாக்கப்படுகிறது என்ப தை நிச்சயப்படுத்திக் கொள்வது தான்.

## ஐந்து விதமான கண்ணீர்.

*1. விசுவாசத்தின் கண்ணீர் - மாற்: 9:24*

*2. தியானத்தின் கண்ணீர் - லூக்: 7.38*

*3. ஊழியத்தின் கண்ணீர் - அப்:20:19*

*4. ஜெபத்தின் கண்ணீர் - 2தீமோ:1:3,4*

*5. புத்தி சொல்லும் கண்ணீர் - அப்:20:31*

# கலாத்தியர் புத்தகம் மூலமாக தேடுதல் வேட்டை




## REBECCA RUSHMORE

1. வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறவனுக்கு என்ன சம்பவிக்க வேண்டும்?

2. பவுல் எருசலேமில் பேதுருவுடன் எத்தனை நாட்கள் தங்கியிருந்தார்?

3. பேதுருவின் மாய்மாலத்தினால் இழுப்புண்டுபோன பவுலின் உடன் ஊழியன் யார்?

4. எது கிறிஸ்துவின் மரணத்தை வீணாக்கும்?

5. நியாயப் பிரமாணத்தின் பணிகளை பவுல் எப்படி விவரிக்கிறார்?

6. ஒருவர் கிறிஸ்துவை எப்படித் தரித்துக் கொள்கிறார்?

7. மாம்சத்தின் கிரியைகளை நடப்பிக்கிறவர்கள் எதை இழந்து போவர்கள்?

8. எதற்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை?

9. ஆவிக்கென்று விதைக்கிறவர்கள் எதை அறுப்பார்?


10. நாம் எப்போது யாவருக்கும் நன்மை செய்ய வேண்டும், விசேஷமாக விசுவாச குடும்பத்தாருக்கு நன்மை செய்ய வேண்டும்?

# காலத்துக்கு முன்னே ஒன்றையுங் குறித்து தீர்ப்பு செய்யாதீர்

# Judge Nothing Before The Time

John Gipson

நியாயாதிபதிகள் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு மனிதனுடைய பெயர் தான் மனோவா. அவருடைய மனைவி, பிள்ளைப் பெறாத மலடியாயிருந்தாள். ஒரு நாளில் தேவதூதன் அந்த ஸ்திரீயினிடத்தில் வந்து நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்" என்றார். அதை அந்த ஸ்திரீ தன் கணவனாகிய மனோவாவிடம் உடனே சொன்னாள். மனோவா கர்த்தரிடம் நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது அந்தப்பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும் என்று கேட்டான். மேலும், மனோவா குழந்தை பாக்கியத்தை தன் மனைவியிடம் அறிவித்த கர்த்தருடைய தூதனானவரிடம் "நாங்கள் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை உமக்காகச் சமைத்துக்கொண்டு வருமட்டும் தரித்திரும்" என்றார்.



கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை நோக்கி : நீ என்னை இருக்கச் சொன்னாலும், நான் உன் உணவைப் புசியேன் ; நீ சர்வாங்க தகனபலி இடவேண்டுமானால், அதை நீ கர்த்தருக்குச் செலுத்துவாயாக என்றார். மனோவா போய் வெள்ளாட்டுக் குட்டியையும், போஜன பலியையும் கொண்டுவந்து, அதைக் கன்மலையின்மேல் கர்த்தருக்குச் செலுத்தினான். அக்கினி ஜூவாலை பலிபீடத்திலிருந்து வானத்திற்கு நேராக எழும்புகையில், கர்த்தருடைய தூதனானவர் பலிபீடத்தின் ஜூவாலையிலே ஏறிப்போனார்; அதை மனோவாவும் அவன் மனைவியும் கண்டு, தரையிலே முகுங்குப்புற விழுந்தார்கள். அப்பொழுது மனோவா தன் மனைவியைப் பார்த்து நாம் தேவனைக் கண்டதினாலே சாகவே சாவோம் என்றார். ஆனால், அதற்கு மனோவாவின் மனைவி "கர்த்தர் நம்மைக் கொன்று போடச் சித்தமாயிருந்தால், அவர் நம்முடைய கையிலே சர்வாங்க தகன

பலியையும் போஜன பலியையும் ஒப்புக்கொள்ள மாட்டார், இவைகளை யெல்லாம் நமக்குக் காண்பிக்கவுமாட்டார். இவைகளை நமக்கு அறிவிக்கவுமாட்டார் என்றாள்". [நியாயாதிபதிகள் 13:23].

மனோவாவைப்போல் நம்மில் பலரும் சில சமயங்களில் தவறான முடிவுக்குள் வந்து விடுகிறோம். நாம் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பாடுகளையும், உபத்திரவங்களையும் வைத்து தேவன் நம்மை கைவிட்டு விட்டதாக முடிவுக்கு வந்து விடுகிறோம். பல வருடங்களாக யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்பு மரித்து விட்டதாக நினைத்தார். ஆனால், யாக்கோபின் சந்ததியை வைத்து தேவன் ஒரு பெரிய தேசத்தை உருவாக்கத் திட்டமிட்டுக்கொண்டிருந்தார் என்பதை யாக்கோபு அறியாதிருந்தார். யோசேப்பும் கூட தனக்கு நேர்ந்த எல்லா மோசமான கரியங்களைக் குறித்து பலவாறெல்லாம் சிந்தித்திருப்பார். ஆனால், பின்பு அவர் தேவன் சகலவற்றையும் நன்மைக் கேதுவாக நடத்தினார் என்று சாட்சி கொடுத்தார்.

அடுத்த முறை நீங்கள் உங்கள் மோசமான சூழ்நிலையைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கும் போது காலத்துக்கு முன்னே ஒன்றையுங்குறித்து தீர்மானித்துவிடக் கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவன் நம்மீது அழிவு வரவேண்டும் என்றோ, கொடிய தீங்குவர வேண்டும் என்று நினைத்திருந்தால், நம் பாவங்களுக்காக ஒரேதரம் பலியாக ஒப்புக்கொடுத்த தம்முடைய ஒரே பேறான குமாரனை தேவன் அனுப்பியிருக்க மாட்டார். தேவன் இதுகாறும் நமக்குச் செய்த நன்மைகள் அவர் நமது உயரிய நலன் மீது கொண்டிருக்கும் ஆர்வத்தை நிரூபிப்பது மாத்திரமல்லாமல் நமது நித்திய நன்மைக்காக எல்லாவற்றையும் நம் கீழ் கொண்டுவருவார் என்பதையும் நிரூபிக்கிறது. எனவேதான், காலம் கனியுமுன்னே தேவன் கிரியை செய்கிற விதத்தைக் குறித்து எவ்வித முடிவுக்கும் வந்துவிடக் கூடாது.

குறித்த காலத்தில் மனோவாவுக்குக் குமாரன் பிறந்தான். அவருடைய பெயரை நீங்கள் நன்றாக நினைவில் வைத்திருப்பீர்கள். அந்த குமாரனுடைய பெயர் சிம்சோன்.

வேதாகம கதாப்பாத்திரங்கள்

# மூழ்கும் ஆத்துமாக்கள்

# Sinking Souls

Therman Hodge

மத்தேயு 14:29, 30 வசனங்கள் அப்போஸ்தலனாகிய பேதுரு கடலுக்குள் அமிழ்ந்து போன சம்பவம் பற்றி பேசுகிறது. நாம் பாவத்தில் மூழ்கத் தொடங்கும் போது இதிலிருந்து கிடைக்கும் பாடங்கள் நமக்கு உதவி செய்ய வேண்டும். ஆழமான பாவத்தில் நாம் அமிழ்ந்து போகையில் என்று பாடல் பாடுகிறோம். அப்பாடல் மத்தேயு 14 ஆம் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது தான்.

**பலத்த காற்று (22 – 26 வசனங்கள் )**

பலத்த காற்றைப் பற்றி சிந்திக்கும்போது பலத்த காற்றின் பிரச்சனையை நாம் கவனிக்க வேண்டும். முதலில், சீஷர்கள் உண்மையான பிரச்சனையை எதிர்கொண்டார்கள். அவர்கள் கலங்கிய கடலில் சிக்கித் தவித்தவர்கள். அவர்களுக்கு நடுக்கடலில் தத்தளித்த படியால் தூரம் அவர்களுக்கு பிரச்சனையாக இருந்தது. மேலும், அது இரவின் நாலாம் ஜாமமாக இருந்தபடியால் இருள் என்னும் பிரச்சனையை அவர்கள் எதிர்கொண்டார்கள்.

பொதுவாக, நாம் துன்மார்க்கருக்கும், மோசமானவர்களுக்கும்தான் பிரச்சனை வரும் என்று எதிர்ப்பார்ப்போம். நிச்சயமாக அப்படித்தான் நடக்கிறது. (நீதி 13:15; ஏசாயா 57 : 20–21). ஆனால், இங்கே இயேசுவின் சீஷர்கள் பிரச்சனைகளின் நடுவே சிக்கித் தவிக்கிறார்கள்.

இங்கே நாம் கற்றுக்கொள்ளும் பாடம் தேவனுடைய மிகப்பெரிய தாசர்கள் கூட சோதனைகள் மற்றும் உபத்திரவங்களுக்கு தப்புவதில்லை என்பதாகும். நாம் ஏதோ ஒரு தொலைக்காட்சி பிரசங்கியாருக்கு பணம் கொடுப்பதால் நம் பிரச்சனைகளும், சச்சரவுகளும் முடிவுக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. நம் பிரச்சனைகள் நண்பர்கள், எதிரிகள், நம் வறுமை, வியாதி போன்றவைகளால் வரலாம். சில வேளைகளில் பிரச்சனைகள் கொடுமையாகவும், கொடூரமாகவும் மாறி, வாழ்வதே மிகக் கடினமாகிவிடுகிறது.

**இரட்சகர் (25–27)**

நான் இங்கே கவனம் செலுத்த விரும்புகிற இரண்டாவது காரியம் இரட்சகர். நம் இரட்சகரைப் பற்றி சிந்திக்கும் போது அவருடைய கண்ணோட்டத்தையும், அவருடைய பிரசன்னத்தையும் அவருடைய வல்லமையையும் நாம் கவனிக்கும்படி விரும்புகிறேன். நம் கர்த்தரின்

கண்ணோட்டம் சம்மந்தமாக நாம் பார்க்கும்போது [மாற்கு 6:48]ல் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். “அவர்கள் தண்டு வலிக்கிறதில் வருத்தப்படுகிறதை அவர் கண்டு” [மாற்கு 6:48]. இயேசு கிறிஸ்துஅவர்கள் என்னவிதமாக கஷ்டங்களின் வழியாய் அவர்கள் கடந்து வந்தார்கள் என்பதை நன்றாய் அறிந்திருந்தார்.

இயேசு கிறிஸ்து நம்முடைய பிரச்சனைகளையும், பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறார். அப்போஸ்தலனாகிய யோவானை சிமிர்னா சபைக்கு எழுதச் சொன்னபோது, இவ்விதமாகச் சொன்னார். “உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும் அறிந்திருக்கிறேன்” என்று [வெளி 2:9]. அவர்களுக்கிருந்த பிரச்சனையையும் இயேசு கிறிஸ்து அறிந்திருந்தார். எனக்கு என்ன தேவை என்பதும் அவருக்குத் தெரியும். “சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமும், வெளியரங்கமுமாயிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்”.

இயேசுவின் பிரசன்னத்தைப் பற்றி வசனம் சொல்லும் போது, “இயேசு அவர்களிடத்திற்கு வந்தார்” என்று சொல்கிறது. சீஷர்கள் அவரை அடையாளங் காணாவிட்டாலும் கூட அவர்களுக்கு ஒரு தேவை ஏற்பட்ட போது இயேசு அங்கே இருந்தார். நமக்கு பிரச்சனைகள் ஏற்படும்போது அவர் நம்மோடிருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இயேசுவுக்கு தம்முடைய சீஷர்கள் எப்போது பிரச்சனையை சந்திக்கிறார்கள் என்பது தெரியும். அப்படி பிரச்சனைகள் ஏற்படும் போது இயேசு அவர்களிடத்திற்கு போகிறார் [மத்தேயு 28:20; பிலிப்பியர் 4:5; எபிரெயர் 13:5]. “பாவ சஞ்சலத்தை நீக்க பிராண சிநேகிதருண்டே” என்ற பாடல் எப்போதுமே நம் உள்ளத்தை உருக்குகிறது.

நம் கர்த்தரின் வல்லமை சம்மந்தமாக நாம் பார்க்கும் போது “இயேசு கடலின் மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்” என்று வசனம் சொல்கிறது [வசனம் 25]. சீஷர்களின் **தலைக்குமேல்** இருந்த பிரச்சனை இயேசுவின் **காலின் கீழ்தான்** இருந்தது. இன்றைய நாட்களில் நம் பிரச்சனைகள் என்று வரும்போது அவைகளை தீர்த்துவைக்க கிறிஸ்துவுக்கு வல்லமை உண்டு என்று நாம் உணரவேண்டும். நாம் வழிதெரியாமல் விழிபிதுங்கினால் கூட அவர் பிரச்சனையிலிருந்து விடுபடுவதற்கான வழியை அறிந்திருக்கிறார். “ நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு என்று வேதாகமத்தில் நாம் வாசிக்கிறோம்”. [எபேசியர் 3:20] நாம் இயசேுவை நோக்கிப் பார்க்கவும், அவர் மீது சாய்ந்திருக்கவும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும் [எபிரெயர் 12:1–2; I யோவான் 4:4; பிலிப்பியர் 4:13]. ஒரு மனிதன் சொன்னது போல,

“நேற்று தேவன் எனக்கு உதவிச்செய்தார், இது எதுவரை தொடரும் ? என்றென்றும். அவருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

## அமிழ்ந்து போகுதல் (28–33)

நாம் பார்க்கும் கடைசி காரியம், பேதுரு அமிழ்ந்து போவது தான். இப்பகுதி, பேதுரு பயந்து, அமிழ்ந்து போகையில், ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான்” என்பதோடு முடிகிறது. இங்கே நாம் பேதுருவின் விருப்பதையும், நடையையும், காற்றையும் கவனிக்க வேண்டும். பேதுரு கடலின் மேல் நடக்க விரும்பினார், அப்படிச் செய்ய இயேசுவிடம் அனுமதியும் கேட்டார், நம் ஆண்டவரும் அதற்கு அனுமதி கொடுத்தார்.

பேதுருவின் நடையைப் பற்றி வசனம் சொல்லும்போது, அப்பொழுது பேதுரு படகை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக தண்ணீரில் மேல் நடந்தான் (வசனம் 29). இந்த சமயம் வரை பேதுரு இயேசுவை நோக்கி பார்த்துக்கொண்டு தான் இருந்தார். அவர் விசுவாசித்து நடக்கிறவராகத்தான் இருந்தார் ( II கொரி 5:7) இங்கே நம் ஆண்டவர் பேதுருவை தம்மிடத்தில் வரும்படி அழைத்தபோது பேதுரு விசுவாசத்தில் இயேசுவினிடத்தில் போக தண்ணீரின் மேல்நடந்தார்.

அடுத்ததாக, காற்றை பற்றி பார்க்கும்போது, காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு பயந்து அமிழ்ந்து போகையில், ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். (வசனம் 30). பேதுரு கர்த்தரிடமிருந்து கண்களை விலக்கி காற்றை பார்க்கத் தொடங்கினான். இங்கே பேதுரு கர்த்தர் மீது கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு பிரச்சனை மீது கவனம் செலுத்தத் தொடங்கினபோது அவர் மூழ்கத் தொடங்கினான். இது அவர் சந்தேகப்படவும், பயப்படவும் காரணமாயிற்று. இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் பிரச்சனைகளால் சூழப்படும்போது கர்த்தர்மேல் கவனமாயிருப்பதை விட சூழ்நிலைகளின் மீது கவனமாயிருக்கிறபடியாலே அமிழ்ந்து போகத் தொடங்குகிறார்கள். அவர்கள் விசுவாசத்தைத் தொடக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி பார்க்கத் தவறுகிறார்கள் (எபிரெயர் 12:2).

இக்கட்டுரையில் (மத்தேயு 14:22–23) வசனங்களிலிருந்து அமிழ்ந்து போகும் ஆத்துமாக்களைப்பற்றி பார்த்திருக்கிறோம். நாம் காற்று, இரட்சகர், அமிழ்ந்து போகுதல் போன்றவைகளைப் பற்றி விவாதித்திருக்கிறோம். இவ்வாழ்க்கையில் பிரச்சனைகளையும், அழுத்தங்களையும் நாம் விழுந்துபோக, அமிழ்ந்து போக அனுமதிக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சில பாடங்களை கற்றுக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

## ராஜ்யம் வருகிறதா ?

## IS THE KINGDOM COMING ?

ROYCE FREDERICK

சிலர், கிறிஸ்து இப்பூமிக்கு அவருடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் படி மறுபடியும் வந்து, இப்பூமியில் அரசாளுவார் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் ஒரு முக்கியமான உண்மையை கவனிக்கத் தவறுகிறார்கள்; அவர் ஈராயிரம் ஆண்டுகளாக அரசாட்சி செய்து கொண்டுதான் இருக்கிறார் !

மாற்கு 9:1 ல் இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பார்த்து "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய் யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். இயேசு அங்கே நின்று கொண்டிருந்த சிலருடைய வாழ்க்கை காலத்திலேயே ராஜ்யம் வருமென்று தெளிவாகச் சொன்னார். பின்பு, அங்கே நின்றுகொண்டி ருந்த எல்லோரும் மரித்தார்கள். அவர்களெல்லாரும் மரித்து பல நூற் றாண்டுகளைகிவிட்டது. எனவே, ராஜ்யம் வருவதென்பது நிச்சயமாக ஒரு வருங்கால நிகழ்வாக இருக்க முடியாது.

கொலோசெயர் 1:13ல் பவுல், தேவனைப் பற்றி இவ்விதமாகச் சொல்கிறார். "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயி ருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்" என்று. இது கிறிஸ்துவின் ராஜ்யம் பவுல் கொலோசெயர் நிருபத்தை எழுதுவதற்கு முன்பாகவே ஸ்தாபிக்கப்பட்டு விட்டது என்பதை தெளிவாகக் காட்டுகிறது. முதல் நூற்றாண்டில் பவுலும், ஒவ்வொரு கிறிஸ்தவரும் கிறிஸ்துவின் ராஜ் யத்திற்குள் உட்படுத்தப்பட்டிருந்தார்கள். எனவே, ராஜ்யம் மாற்கு 9:1ல் இயேசு பேசின வார்த்தைகளுக்குப் பிறகு கொலோசெயர் 1:13ல் பவு லின் வார்த்தைகளுக்கு முன்பாக ஸ்தாபிக்கப்பட்டது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் ஒவ்வொரு நபரும் அவருடைய ராஜ்யத்தின் பிரஜையாக இருக்கிறார். பிலிப்பியர் 3:20 அவருடைய சரீரமாகிய சபையில் அங்கமாக இருக்கிறார் [கொலோ 1:8 ;கலாத்தியர் 3:26,27]. கிறிஸ்துவின் ராஜ்யம் எப்போது வந்தது என்ப தைக் குறித்து எந்த யூகத்திற்கும் அவசியமில்லை. அப்போஸ்தலரு டைய நடபடிகள் இரண்டாம் அதிகாரம் எருசலேமில் அந்த பெந்தே கொஸ்தே நாளில் பலத்தோடே வந்தது என்பதை தெளிவாகக் காட்டுகி றது. அந்த நாளிலே மூவாயிரம் பேர் சுவிசேஷத்திற்கு கீழ்படிந்தார்கள் ! அது தான் கிறிஸ்துவின் ராஜ்யமாகிய சபையின் ஆரம்பமாக இருந்தது.

கிறிஸ்து திரும்ப வருவாரா ? ஆம் ! அப்போஸ்தலர் 1:11 அவர் மறுபடியும் வருவார் என்று அறிவிக்கிறது. இருந்த போதிலும், இயேசு இப்பூமியில் வாழ்ந்து கொண்டு, இப்பூமிக்குரிய தலைமையகத்திலிருந்து அரசாளுகிறார் என்று வேதாகமம் போதிக்கவில்லை. சிலர் வெளிபடுத்தின விசேஷம் 20 யை அடிப்படையாக வைத்து கிறிஸ்து இப்பூமிக்கு வந்து அரசாளுகிறார் என்று தவறாகப் போதிக்கிறார்கள். ஆனால், நீங்கள் வெளிப்படுத்தின விசேஷம் 20 யை ஜாக்கிரதையாக ஆராய்ந்து பார்த்தால், அது கிறிஸ்து இப்பூமிக்கு வருவதைப் பற்றி எதையுமே சொல்லுவதில்லை.

ராஜ்யம் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டாகி விட்டது. கிறிஸ்து இப்போது ராஜாவாயிருந்து அரசாண்டு கொண்டுதான் இருக்கிறார். அவர் திரும்பி வரும்போது எல்லா கிறிஸ்தவர்களும், மரித்தவர்களும், உயிரோடிருப்பவர்களும் கர்த்தருக்கு எதிர் கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடே கூட இருப்போம் [I தெசலோனிக்கேயர் 4:17] இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வரும்போது ராஜ்யத்தை எல்லாம் ஸ்தாபித்துக்கொண்டு இருக்கமாட்டார். அவர் ராஜ்யத்தை இப்பூமியிலிருந்து எடுத்து தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கும் நேரமாகத்தான் இருக்கும். “அதன் பின்பு முடிவு உண்டாகும், அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்” [I கொரி 15:24].

நாம் நிச்சயமாக ராஜ்யத்தை எதிர்நோக்குகிறவர்களாயிருக்க வேண்டும். ஆனால், அதைக் கண்டுபிடிக்க வருங்காலத்தை நோக்க முயற்சிக்கக் கூடாது. கிறிஸ்துவின் ராஜ்யம் என்பது அவருடைய சபையாயிருக்கிறது. அவருடைய சபையை கண்டுபிடித்தால் அவருடைய ராஜ்யத்தை கண்டுபிடித்துவிட்டோம், இரண்டும் ஒன்றுதான். ✝

**தெளிந்த புத்தி எதற்கு தேவை?**

| | |
|---|---|
| பிசாசின் தந்திரங்களை அறிய | 1 பேதுரு 5:8... |
| பாவம் செய்யாமல் இருக்க | 1 கொரி 15:34... |
| நமது நிலைய உயர்த்து அறிய | லூக்கா 15:17... |
| ஜெபத்தில் உறுதியாயிருக்க | 1 பேதுரு 4:7 |

## வேதாகம கேள்விகள்

# பலதரப்பட்ட மதசம்மந்தமான கேள்விகளும், வேதகாம பதில்களும்

# Miscellaneous Religious Questions And Bible Answer

Ken Tyler

**கேள்வி : சிறு பிள்ளைகள் ஞானஸ்நானம் பெற வேண்டுமா ?**

பதில் : சிறு பிள்ளைகள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் – அவர்கள் தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டிய அவசியமில்லை. இயேசுகிறிஸ்து 18:3ல் **நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீகள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்** என்று சொன்னதை நம்மால் வாசிக்கமுடியும்.

இந்த வாக்கியத்திலிருந்து சிறுபிள்ளைகள் தேவனோடு சரியான உறவில் இருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. அப்போஸ்தலர் 8:30ல், பிலிப்பு ஒரு தனிநபர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு **காரியங்களைப் புரிந்து கொள்ளத்தக்கவராக** இருக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டுகிறார். சிறு பிள்ளைகளும், மன வளர்ச்சி குன்றியவர்களும் மேற்சொல்லப்பட்ட நிபந்தனைக்குப் பொருந்த மாட்டார்கள். எசேக்கியேல் 28:15 மற்றும் எசேக்கியேல் 18:20 போன்ற வசனங்களை வாசிக்கும் போது, சிறு பிள்ளைகளிடத்தில் பாவமில்லை என்று நமக்குப் புரிகிறது. ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்கானதாக இருப்பாதாலும், அவர்கள் இழந்து போகாத காரணத்தினாலும் சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாது [அப்போஸ்தலர் 2:38].

**பிலப்பியர் 4:3ல் குறிப்பிடப்பட்டிருக்கிற ஜீவ புத்தகம் என்ன ?**

இவ்வசனப் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஜீவ புத்தகம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிற ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகமாயிருக்கிறது. அதில் தேவனுடைய பிள்ளைகளின் நாமங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. வெளி 3:5 ல் நமக்கு “ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவ புத்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல், என்

பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்"என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் போது, அவருடைய பெயர் ஜீவபுத்தகத்தில் எழுதப்படுகிறது. அதே நேரத்தில் அந்த நபர் கர்த்தருக்கு உண்மையில்லாதவராக இருந்தால் அவருடைய பெயர் ஜீவ புத்தகத்திலிந்து கிறுக்கிப் போடப்படும். உங்கள் பெயர் ஜீவ புத்தகத்தில் இருக்கிறதா?

**கேள்வி : ஒருவர் ஒருமுறை இரட்சிக்கப்பட்டால் எப்போதும் இரட்சிக்கப்பட்டிருக்கிறார் என்னும் உபதேசம் வேதாகம உபதேசமா?**

**விடை :** ஒருவர் இரட்சிக்கப்பட்ட பிறகு அவர் எப்போது வேண்டுமானாலும் விழுந்து போகலாம் அல்லது இழந்து போகலாம் என்று வேதாகமம் வெளிப்படையாகப் போதிக்கிறது. இதற்கு ஒரு மிகச் சிறந்த உதாரணமாக தேமா இருக்கிறான். கி.பி. 62ல் பவுல் தேமாவை தன் உடன் வேலையாட்களில் ஒருவராக குறிப்பிடுகிறார். பிலேமோன் 24 இவ்விதமாகச் சொல்கிறது. "என் உடன் வேலையாட்களாகிய மாற்குவும், அரிஸ்தர்க்கும், தேமாவும், லூக்காவும்"... ஆனால், கி.பி. 68ல் பவுல் தீமோத்தேயுவிடம், "தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து, என்னை விட்டுப் பிரிந்து தெசலோனேக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்"என்று சோகமாகச் சொன்னார். அது மாத்திரமல்ல,கலாத்தியர் 5:4 ல் **கிருபையினின்று விழுந்தீர்கள்** என்று வாசிக்கிறோம். தேவனுடைய வார்த்தையின்படி ஒருவர் ஒருமுறை இரட்சிக்கப்பட்டால் எப்போதும் இரட்சிக்கப்பட்டிருக்கிறார் என்னும் உபதேசம் தவறானது.

**கேள்வி :** திருமணத்தில் இணையப்போகும் ஒரு ஆணும், பெண்ணும் ஒருவரிலொருவர் உண்மையான அன்புகொண்டிருந்தால் திருமணத்துக்கு முன்பு உறவு வைத்துக்கொள்ளலாமா?

முதலாவது, ஒழுக்க நெறிக்கான அளவு கோல் நம்மால் தீர்மானிக்கப்படுவதில்லை. தேவன் என்ன அளவு கோலை சொல்கிறாரோ அதை நாம் பின்பற்ற வேண்டும். எபேசியர் 5:3 ல் தேவன் " வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுக்கூடாது". என்று கட்டளையிடுகிறார். எபிரெயர் 13:4 விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக. வேசிக்கள்ளரையும், விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்பார்." எனவே, திருமணத்திற்கு முந்தைய உறவு வேசித்தனமாகும், வேசித்தனம் பாவமாயிருக்கிறது.

**கேள்வி :** ஒப்புரவாகுதல் என்பதன் பொருள் என்ன ?

Vine என்னும் கிரேக்க மொழி வல்லுநர் "பகைமையிலிருந்து நட்புக்கு மாறுவதுதான்" ஒப்புரவாகுதல் என்று விளக்கம் கொடுக்கிறார். பவுல் [II கொரி 5:18-19] வசனங்களில் "இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது : அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடையபாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்" என்று வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்து மூலமாகவும், அவருடைய சுவிசேஷத்தின் மூலமாகவும் நாம் தேவனிடத்தில் ஒப்புரவாக முடியும். இன்று, நீங்கள் தேவனுடைய நண்பராக இருக்கிறார்கள் அல்லது சத்துருவாக இருக்கிறீர்களா?.

✝

## தொழுகை முடிந்து போகும்போது செய்யும் பாவங்கள்

- **பிரசங்கத்தை கேலி செய்து பிறருடன் பேசுவது**
- **ஆராதனை நடத்தியவர்கள், பாடல் குழுவினர், வேதம் வாசிப்பவர்கள் இவர்களைப் பற்றி கேலி குறை சொல்லுவது.**
- **தன்னைக் காத்துக் கொள்வதற்காக சபையைக் குறை சொல்லுவது**
- **ஊழியத்திற்கு வருபவர்களையும் கெடுத்து குழப்புவது**
- **சபை, சபை ஊழியர் முன்பு போல் இல்லை என்று கூறி தன்னை நீதிமானாகக் காட்டுவது.**
- **வீட்டில் அமர்ந்து பிள்ளைகள் மத்தியில் சபையைக் குறை சொல்லுவது**

# மகா அலெக்சாண்டர்
## Alexander The Great
David R. Kenney

மகா அலெக்சாண்டரைப் பற்றி ஒரு கட்டுரை எழுதப்படுவதைக் குறித்து உங்களுக்கு விசித்திரமாக தோன்றலாம். இருந்த போதிலும், அலெக்சாண்டர் " மகா அலெக்சாண்டர்" என்று குறப்பிடப்படுவதற்கு காரணங்கள் இருந்தன. இந்தக் காரணங்கள் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது என்னும் உண்மையும் மகா அலெக்சாண்டரின் மாபெரும் தாக்கத்தை நிரூபிக்கிறது.



மகா அலெக்சாண்டர் ராஜா பிலிப்பு II க்கும், ஒலிம்பியாசுக்கு மகனாகப் பிறந்தார். அலெக்சாண்டரின் ஆசிரியர் தத்துவ ஞானி யான அரிஸ்டாட்டில் ஆவார். கி.மு. 336 ல் பிலிப்பு II PAUSANIAS என்பவரால் கொலை செய்யப்பட்டார். இந்த PAUSANIAS பிலிப் புவை அவருடைய மகனான அலெக்சாண் டர் மற்றும் மகள் கிளியோபட்ரா முன்னிலை யில் கத்தியால் குத்தினான். இன்னும் சொல் லப்போனால் மகள் கிளியோபட்ராவின் விவா கத்தின் போது தகப்பனாகிய பிலிப்பு II கத்தி யால் குத்தப்பட்டார். பிலிப்பு ஆசிய மைனரில் உள்ள பெர்சியா ராஜ்யம் கிரேக்கிலிருந்த அவருடைய எதிரிகளோடு கூட்டணி வைத்துக்கொண்டதற்கு பழிவாங்கும் விதமாக பெர்சியாவுக்கு எதிராக படையெடுக்க முடிவு வெடுத்தார். பிலிப்பு மரித்த போது 10,000 வீரர்கள் படையில் இருந்தார்கள். இப்படையை வைத்து அலெக்சாண்டர் முன் னெப்போதும் இல்லாத வகையில் தன் ராஜ்யத்தை விரிவு படுத்தத் தொடங்கினார்.

அலலெக்சாண்டர் issus பகுதியில் நடந்த போரில் பெர்சிய ராஜ்யத் தையும், தரியு III ராஜாவையும் தோற்கடித்தான். கி.மு. 333 அலெக் சாண்டர் தரியுவை பிடிப்பதற்கு முன்பாகவே கொலை செய்யப்பட்டார். தரியு ராஜா மரித்து விட்டாலும் கூட மகா அலெக்சாண்டர் தரியுவின் குடும்பத்தாரை இரக்கத்துடன் நடத்தியதாக சொல்லப்படுகிறது. உண்மையில் அலெக்சாண்டர் தான் படையெடுத்த பல தேசங்களில் இவ்விதமாக நடந்து கொண்டிருக்கிறார்.

இவர் தீருவின் தீவுபகுதியை கைப்பற்றின விதம் ஆச்சரியமாயிருந்தது. மகா அலெக்சாண்டரின் பெயர் வேதாகமத்தில் இடம் பெற விட்டாலும் கூட, அவனுடைய படையெடுப்பு சம்மந்தமாகவும், உலக வல்லரசாக கிரேக்க தேசத்தின் எழுச்சி குறித்தும் தீர்க்க தரிசனங்கள் உள்ளன (எசேக்கியேல் 26:1-14; தானியேல் 2:1-45; 8:18-22; 10:20-11:4).

வரலாற்று ஆசிரியர் Josephusன் கூற்றுப்படி யூதா தேசம் அலெக்சாண்டரின் படையை வலுப்படுத்த அவர் கேட்டுக்கொண்டபடி தீருவுக்கு படையை அனுப்ப மறுத்ததால், யூதா தேசத்தின் மீது இவர் படையெடுக்க வேண்டியதாயிருந்தது. அதற்காக அலெக்சாண்டர் எருசலேமை அணுகிய போது அங்கே இருந்த பிரதான ஆசாரியரும், இன்னும் சில பிரமுகர்களும் அலெக்சாண்டரை சந்தித்து மரியாதை செலுத்தினார்கள். Josephusன் கூற்றுப்படி எருசலேம் பட்டணத்தார் அப்படி மரியாதை செய்ததற்கான காரணம் அலெக்சாண்டர் அவர்களை சுய ஆட்சி செய்து கொள்ள விட்டு விடும்படியாகத்தான் இருக்க வேண்டும். Josephusன் கூற்றை பல வேத வல்லுநர்கள் ஏற்க மறுக்கிறார்கள். இன்னும் சிலர் அலெக்சாண்டர் ஒருபோதும் எருசலேமுக்குப் போயிருக்க வாய்ப்பில்லை என்று சந்தேகிக்கின்றனர். மகா அலெக்சாண்டருக்கு பெர்சியர்களோடு சில முக்கியமான வேலைகள் செய்ய வேண்டியதாயிருந்தது. ஆனால், அவர்களே தங்களை ஆண்டு கொள்ளும்படி சிலரை அப்படியே அங்கேயே விட்டுச் சென்று விட்டார்.

மகா அலெக்சாண்டர் தனக்குப் பின்வந்த ரோம சாம்ராஜ்யத்தைப் போலில்லாமல் தன் குடிமக்கள் எல்லோரும் கிரேக்க மொழியையும், கலாச்சாரத்தையும் தழுவ வேண்டும் என்று நிர்பந்தித்தான். பட்டணங்களின் கட்டிடக்கலை மற்றும் அமைப்பு போன்றவைகளெல்லாம் கிரேக்க பாணியில் இருக்க வேண்டுமென்று விரும்பினான். யூதர்கள் ஆரம்பத்தில் கிரேக்கக் கலாச்சாரத்தைத் தழுவ எதிர்ப்பு தெரிவித்தாலும் கூட பின்பு கிரேக்க வழிகளை தழுவிக்கொண்டார்கள். அப்போஸ்தலர் 6:1 ல் கிரேக்க வழியைத் தழுவிக்கொண்ட யூதர்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மகா அலெக்சாண்டர் நாடுகளின் மீது படையெடுக்கும் படலத்தை தன் இருபது வயதிலேயே தொடங்கி எகிப்து, இந்தியா உட்பட பல நாடுகளின் மீது படையெடுத்து தன் 33 ஆவது வயதில் அதாவது கி.மு. 323 ல் மரித்தார். "தேவன் ஜாதிகள் மேல் அரசாளுகிறார்; தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார்" என்று சங்கீதக்காரன் பாடினார் (சங்கீதம் 47:8). தேவன் இயேசு கிறிஸ்துவின் கிரியை மூலமாக ஒட்டுமொத்த உலகிற்கும் இரட்சிப்பை கொண்டு போய் தம்முடைய தெய்வீக திட்டத்தை நிறைவேற்ற நேபுகாத்நேச்சார், கோரேசு, மற்றும் மகா அலெக்சாண்டர் போன்றோரைப் பயன்படுத்தினார்.

# ஆசீர்வாதத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்
## Share The Blessing

Derek Broome

சபையில் அங்கமாய் இருப்பது கிறிஸ்தவர்களாக நாம் அனுதினம் அனுபவிக்கும் ஆச்சரியமான ஆசிர்வாதமாய் இருக்கிறது. தலாவதாக, நாம் இரட்சிக்கப்பட்டு கர்த்தரால் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருக்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம் அப்போஸ் தலருடைய நடபடிகள்( 2:47). இவ்வுலகில் அநேக ஜனங்கள் நாம் ன்பு எப்படி பாவத்தில் இழந்து போயிருந்தோமோ அதைப்போல அவர்களும இழந்து போன நிலையில் தான்இருக்கிறார்கள். நம் பாவங்கள் கழுவப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்வது ஓர் அளப்பரிய ஆசிர்வாத மாகும்(1கொரிந்தியர்6:11). அதேபோல் நாம் இப்போது தேவனோடு சரியான உறவில் இருப்பதும் ஓர் ஆசிர்வாதமாகும்இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களாக நாம் ஆராதிக்கிறோம், வேலை செய்கிறோம், ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொள்கிறோம் .அதேப்போல் தேவனோடும் ஐக்கியம் கொள்கிறோம். தேவனுடைய குடும்பத்தில் நாம் அங்கமாய் இருப்பது ஒரு ஆச்சரியமான அனுபவமாகும், ஏனென்றால் தேவனுடைய குடும்பத்தில் நாம் கிறிஸ்தவர்களாக இணைந்து பணிபுரியவும் ,மேம்படவும் டியும். ஒரு கிறிஸ்தவருடைய வாழ்க்கையில் ஆனந்தம் கொள்வதற்கும், ஆறுதலை அடையவும் கிறிஸ்தவ குடும்பம் என்று ஒன்று இருக்கிறது என்பதை அறிந்து கொள்வது ஓர் ஆச்சரியமான ஆசிர்வாதமாகம். சிலரைப் பொருத்தவரை அவர்களுக்கு இருக்கும் ஒரே குடும்பம் சபைதான். நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாய் இருப்பதினால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் எப்போதுமே நினைவில் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிப்பது ஓர் மிகப்பெரிய ஆசிர்வாதமாகும். ஆனால், அந்த ஆசிர்வாதத்தை நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? அந்த ஆசீர்வாதத்தை நாம் நமக்குள்ளேயே வைத்துக் கொண்டிருக்கிறோமா அல்லது அந்த ஆசீர்வாதத்தை உலகத்தோடு பகிர்ந்து கொண்டு வருகிறோமா?(மாற்கு 16:15-16). பாவத்தில் தங்களை இழந்து போய் இருக்கிறவர்கள் உண்மையாகவே இரட்சிக்கப்பட வேண்டும் என்று நாம் விரும்பினால் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியையும்,அவருடைய சபையில் அங்கம் வகிப்பதினால் உண்டாகும் ஆசிர்வாதங்களையும் ஒட்டுமொத்த உலகத்திற்கும் பகிர வேண்டும் (1தீமோத்தேயு 2:4). நம் ஜீவியங்கள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை இவ்வுலகத்திற்கு பகிர்ந்து கொடுக்கும் ஆசையினாலும், பொறுப்பினாலும் நிறைந்து இருக்கிறது என்று நான் நம்புகிறேன். நம்மால் பிறருக்கு செய்யும் மிகப்பெரிய நன்மை சிலுவையின் செய்தியையும், நம் ரட்சகர் நம் எல்லோர் மீதும் வைத்திருக்கும் அன்பையும் அவர்களுக்கு பகிர்ந்து கொள்வதாகத்தான் இருக்க முடியும்.

## ஒரு நாளில் ஏழு தரம்
## 7 Times in one Day

J.J. Turner

**முன்னுரை :**

கீழ்க்காணும் ஆரோக்கியப் பிரச்சனைக்கு எது காரணமாக அமைகிறது :

- ★ அதிவேக இதயத் துடிப்பு மற்றும் அதிகப்படியான படபடப்பு ?
- ★ உயர் இரத்த அழுத்தம் ?
- ★ தலை வலி ?
- ★ முதுகு வலி ?
- ★ வயிற்றுப் பிரச்சனைகள் ?
- ★ அழுத்தம் ?
- ★ புண்கள் ?
- ★ மன அழுத்தப் பிரச்சனைகள் ?
- ★ கோபம் / உக்கிரம் ?
- ★ மனச்சோர்வு / தூக்கமின்மை ?
- ★ மன்னிக்காத நிலை ! ( மனோதத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள்).

**எது மிகக்கடினமானது :**

- ★ மற்றவர்களிடமிருந்தும், தேவனிடமிருந்தும் மன்னிப்பை ஏற்றுக் கொள்வதா ?
- ★ உங்களை நீங்களே மன்னித்துக்கொள்வதா ?
- ★ மற்றவர்களை மன்னிப்பதா ?

லூக்கா 17:34: உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால் : அவனை கடிந்து கொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாக, அவன் ஒரு நாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய் குற்றஞ்செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து : நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால் அவனுக்கு மன்னிப்பாயாக என்றார். மத்தேயு 6:14-15: மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.

**மன்னிப்பு என்றால் என்ன ?**

எபிரெய மொழியில் NASA தூக்குவது, எடுத்துப் போடுவது, விட்டு விடுவது, அனுப்புவது என்று பொருள்கள் உண்டு.

கிரேக்க மொழியில் Aphiemi அனுப்புவது, விட்டுவிடுவது, போகவிடுவது போன்ற பொருள்கள் உண்டு.

**மனோதத்துவத்தின் விளக்கத்தின்படி மன்னிப்பு என்பது :**

மன்னிப்பு என்பது தனக்கு விரோதமாக ஒருவர் செய்த குற்றத்தின் காரணமாக பாதிக்கப்பட்டவரின் மனநிலையிலும், உணர்விலும் உண்டாகும் மாற்றத்தின் காரணமாக தானாகவே முன்வந்து தனக்கு விரோதமாக செய்யப்பட்ட குற்றத்தை மனதிலிருந்து அப்படியே அகற்றி விடும் செயல்முறையாகும்.

மன்னிப்பு என்பது அன்பின் ஒரு செயல்பாடாகும் ! அது ஒரு விருப்பமாகும்.

**வேதக் கண்ணோட்டத்தின்படி எது மன்னிப்பல்ல :**

மன்னிப்பு என்பது தவறை கண்டுகொள்ளாமல் இருப்பதோ அல்லது அதற்கு ஆதரவு கொடுப்பதோ அல்ல.

மன்னிப்பு என்பது ஒருவருடைய தவறான செயல்பாடுகளுக்கு அந்த நபரை பொறுப்பாளி ஆக்காமல் அப்படியே விட்டுவிடுவதல்ல. மன்னிப்பு என்பது நீதிபதியினால் கொடுக்கப்படும் ஒன்றல்ல. மன்னிப்பு என்பது நம் நினைவிலிருந்து நமக்கு விரோதமாக இழைக்கப்பட்ட குற்றங்களை உணர்வற்ற முறையிலே மறந்து விடுவதல்ல.

**மன்னிப்பு ஏன் கடினமானது :**

இதற்கு பல காரணங்கள் உண்டு

★ ஒரு விதமான நியாயம் – அந்த நபர் தண்டிக்கப்பட வேண்டும்

★ மற்றவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமை

★ பழிவாங்குதலில் நம்பிக்கை கொள்ளுதல்

★ கடந்த காலத்தில் வாழ்ந்து கொண்டு நடந்தவைகளை மனதிலிருந்து நீங்காமல் இருப்பது.

★ மன்னிப்புக்கான சில திறவுகோல்கள் (எபேசியர் 4:32)

★ தயவாயும், மன உருக்கமாயும் இருத்தல்

★ தேவன் உங்களை எப்படி மன்னித்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

★ மனதிலிருந்து தீய சிந்தனைகள் நீங்கும்படியாகத் தொடர்ந்து ஜெபியுங்கள். இவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் (பிலிப்பியர் 4:7–10) மத்தேயு 18:21–35: பொல்லாத ஊழியக்காரனின் உவமை.

**முடிவுரை :**

நீங்கள் உண்மையாகவே மற்றவர்களை மன்னிக்க வேண்டுமா ? மன்னிக்காமல் இருப்பது / கடுங்கோபம், கசப்புணர்வுபோன்றவைகள் விஷம் குடிப்பது போன்றது. நாம் மற்றவர்களை மன்னிக்காவிட்டால் தேவன் நம்மை மன்னிக்கமாட்டார்.

**மன்னிப்புக்காக வேதாகம உதாரணங்கள் :**

★ கெட்ட குமாரன்

★ மிக பரிச்சயமான வேதாகம சம்பவம்

★ குமாரனுடைய முழு சுதந்திரம் பிரயோகிக்கப்பட்டது

★ தகப்பன் குமாரனை ஏற்றுக்கொண்டார்

★ மூத்த குமாரன் மன்னிக்கவில்லை

★ யோசேப்பு தன் சகோதரர்களை மன்னித்தார்

★ அடிமையாக விற்கப்பட்டார் [ஆதியாகமம் 37:23–28]

★ யோசேப்பு மன்னித்தார் [ ஆதியாகமம் 50:15–26]

★ ஸ்தேவான் மன்னித்தார்

★ அப்போஸ்தலர் 7:60

**மன்னிக்காமலிருப்பதற்கான விளைவுகள் :**

★ தேவனுக்கும், கிறிஸ்துக்கும் கீழ்ப்படியாலிருப்பதாகும் [யோவான் 14:15 70x7= 490].

★ தேவனைப் பின்பற்றத் தவறுவதாகும் [எபேசியர் 5:1]

★ மற்றவர்களுக்கு மோசமான உதாரணத்தைக் காட்டுவதாகும் [Iதீமோ4:12]

★ நமக்கும் மன்னிக்கப்படமாட்டாது [மத்தேயு 6:14–15]

★ தேவனுடைய **அகப்பே** அன்பை மீறுவதாகும் [I கொரி 13]

★ தனக்குள்ளும், தேவனோடும் ஒருபோதும் சமாதானமாக இருக்க முடியாது.

★ கிறிஸ்துவின் சிந்தையை பெற்றுக்கொள்ளத் தவறுவதாகும் [பிலிப்பியர் 2:4–9]

★ பரலோகத்தை நிச்சயமாக இழந்து போவோம் [வெளி 22:14]

★ நித்திய நித்தியமாக வருத்தப்படுவோம்

★ மன்னியாமல் இருப்பது தேவனுக்கு விரோதமான பாவமாகும் [சங்கீதம் 51:3,4]

# உயர்த்தெழுதலுக்கு சாட்சி : ஜனங்கள்

## Witness To The Resurrection The People

SERGE SHOE MAKER

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைவிசு வாசியாதவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கவே முடியாது. இயேசுவின் உயிர்த்தெழுதல் சம்பவம் ஈராயிரம் வருடங்கள் பழமையானதாக இருந்தாலும் உயிர்த்தெழுதலின் சாட்சிகள் இன்னும் புதியவை களாகவே இருக்கின்றன. நாம் அவைகளை ஒன்றின் பின் ஒன்றாக கீழ்க்கண்டவாறு காணலாம்.

**I வாய்ப்பில்லாதவர்களுக்கு இயேசு தரிசனமானார்**

A. இயசேு முதலில் ஸ்திரீகளுக்குத்தான் தரிசனமானார்

1. மகதலேனா மரியாள் (யோவான் 20:13–14)

2. கல்லறையை விட்டுச்சென்ற மற்ற ஸ்திரீகளுக்கு (மத்தேயு 28:7–9)

B. புனையப்பட்ட கதைகளல்ல :

1. தரிசனத்துக்கு சாட்சியாயிருந்தவர்கள் இயேசுவுக்கு நெருக்கமான வர்கள் (மத்தேயு 17:1 ; மாற்கு 14:33 ; யோவான் 13:23)
2. அப்போஸ்தலர்கள் ஸ்திரீகளுடைய பேச்சை நம்பவில்லை (லூக்கா 24:11)

II. எதிர்ப்பார்க்கப்படாதவர்களுக்கு இயேசு தரிசனமானார்

A. சீஷர்களுக்கு இயேசு தரிசனமானார்

1. எம்மாவூருக்குப் போகும் பாதையில் (லூக்கா 24 :15)

2. இயேசு கேபவுக்குத் தரிசனமானார் (பேதுரு) I கொரி 15:5 ; லூக்கா 24:33–34).

3. இயேசு வந்து சீஷர்கள் நடுவே நின்றார் (யோவான் 20:19–20)

B. உயிர்த்தெழுதல் எதிர்ப்பார்க்கப்படாத ஒன்றாக இருந்தது

1. அவர்கள் இயேசுவின் போதனையை ஆரம்பத்தில் புரிந்து கொள்ளவில்லை (மாற்கு 9:31–32 ; லூக்கா 18:34)

2. அவர்கள் இயேசுவின் மரணத்தைக் தடுக்க விரும்பியிருக்கிறார்கள் (மாற்கு 8:31 , 32 ; யோவான் 18:10)

3. சீஷர்கள் இயேசுவின் மரணத்தைக் குறித்துக் கேள்விப்பட்டபோது துக்கமடைந்தார்கள் (யோவான் 16:20 ;யோவான் 20:19)

4. சீஷர்கள் ஆரம்பத்தில் இயேசுவின் உயிர்த்தெழுதலை விசுவா சிக்கவில்லை (லூக்கா 24:10–11; யோவான் 20:24–25)

III. **அவிசுவாசிகளுக்கும் தரிசனமானார் :**

A. அவிசுவாசியான யாக்கோபுக்கும் தரிசனமானார் (I கொரி15:7)

1. இயேசுவின் சகோதரர்கள் அவிசுவாசிகளாத்தான் இருந்தார்கள் (யோவான் 7:3–5; மாற்கு 3:21)

2. பிற்பாடு யாக்கோபு சபையை நடந்துகிறவராக மாறினார் (அப்போஸ் தலர் 15:13; கலாத்தியர் 1:19)

3. யாக்கோபு தான் கொண்டிருந்த விசுவாசித்திற்காக மரித்தார் !

ஆ. சத்துருவாயிருந்த சவுலுக்கும் தரிசனமானார் I கொரி 15:8; அப் போஸ்தலர் 9:1–9; 22:5–11; 26:12–18.

1. கிறிஸ்தவத்தை அதிகமாக, ஊக்கமாக துன்பப்படுத்திய பவுலுக்கு இயேசு தரிசனமானார் (அப்போஸ்தலர் 8:3; 26: 9–10)

2. இயேசுவுக்காக அதிகம் பாடுபட்ட பவுல் அவருடைய ஆஸ்தான ஆதரவாளராக கடைசியாக இருந்தார் (II கொரி 11:5,23)

3. பவுல் கிறிஸ்துவுக்காக மரிக்கவும் துணிந்தார் (அப்போஸ்தலர் 21:13; II தீமோ 4 : 6)

IV. **கடைசி கருத்துக்கள் :**

A. சாட்சிகளுக்கு ஏமாற்றம் ஏற்படவில்லை (அப்போஸ்தலர் 1:3; I கொரி 15:6)

B. சாட்சிகளும் ஏமாற்றுகிறவர்களாயிருக்கவில்லை (II கொரி 4:8–11)

**உறுதியில்லாததை உறுதியாய் பிடிக்காதே...**

**உறுதியானதை உறுதியில்லாமல் பிடிக்காதே...**

**எது உறுதியானதோ அதை உறுதியாய் பிடித்துக்கொள்...**

# இப்படி ஒரு காட்சி அமைய வாய்பிருந்தால் ?

## Did a Scene like this Possibly Happen ?

Betty Burton Choate

இயேசு கிறிஸ்து பரலோகத்திற்குத் திரும்பின பிறகு பிரதான தூதனாகிய மிகாவேல் மிகுந்த பரவசத்துடன் இயேசுவினிடத்தில் வந்து " நீர் உலகத்தோற்றத்திற்கு முன்பிருந்து என்னசெய்து கொண்டிருந்தீர் என்பதை நாங்கள் இப்போது அறிந்து கொண்டோம்! நான் பரமசேனையை அழைத்து அவர்களோடு நானும் வெளியே போய் சுவிசேஷத்தின் மகிமையான செய்தியை அறிவிக்கட்டும் " என்று சொன்னான். அதற்கு கர்த்தர் " இல்லை, இது உன்னுடைய வேலை அல்ல" என்று பதிலளித்தார். அப்படியென்றால், " இது யாருடைய வேலை"? என்று மிகாவேல் கேட்டான் . அதற்கு இயேசு "அந்த வேலையை என் சீஷர்களிடம் விட்டுவிட்டேன்'' என்றார். அதைக்கேட்டு மிகாவேல் ஸ்தம்பித்து, "காலங்களின் பணியை நீர் மனிதர்களுடைய கைகளில் விட்டுவிட்டீரே, கர்த்தாவே, உம்மால் மனிதர்களை நம்ப முடியாது. ஆதாம் உலகத்திற்குள் பாவத்தைக் கொண்டுவந்தான் ! பேதுரு உம்மை மறுதலித்தான் ! யூதாஸ் உம்மை காட்டிக்கொடுத்தான் ! அவர்கள் மறுபடியும் உமக்கு துரோகம் செய்தால் என்ன நடக்கும்? எனவே நிச்சயமாக வேறொரு திட்டத்தை வைத்துக்கொள்ளுங்கள் " என்றான். அதற்கு இயேசு "இல்லை" மிகாவேல் எனக்கு வேறொரு திட்டம் இல்லை என்று பதிலளித்தார். தேவன் கிரியை செய்கிறார்.

நீங்கள் செய்ய முயற்சிக்கும் வேலையில் உங்களால் செய்ய முடிந்த எல்லாவற்றையும் செய்து முடித்த பிறகு அமைதியா யிருங்கள் தேவன் கிரியை செய்கிறார், அதை இப்போது உங்களால் கேட்க முடியாமலும், பார்க்க முடியாமலும் உணரமுடியாமலும் இருக்கலாம். தேவன் சோம்பலாக இல்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

# தொடர்ச்சியாக கவனமாயிருங்கள்
# Stay Focused
## Tom Baxley

கடந்த காலங்களில் சுவிசேஷ ஊழியத்தில் எனக்குத் தடையாயிருந்த ஒரு காரியம் என்னவென்றால், என்னிடம் கேட்கப்படும் சம்மந்தமில்லாத கேள்விகளினால் தடம் மாறிப் போவதாயிருக்கிறது. ஒருவர் என்னிடம் கேள்வி எழுப்பும்போது, நான் பதில் அளிக்க விரும்புகிறோன். ஆனால், அது பல்வேறு கேள்விகளுக்கு வழிவகுக்கிறது. எனவே, நாம் தடம் மாறி, தடுமாறி, நம்மை நாமே இழந்து செய்து முடிக்க வேண்டிய பணியை சிறப்பாக செய்ய முடியாமல் தோற்றுப் போகிறோம். இயேசுவின் ஊழிய பாணியை உற்றுப் பார்த்தபோது என்னிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு நான் உடனடியாகவோ, நேரடியாகவோ பதிலளிக்க வேண்டியதில்லை என்பதை கண்டு கொண்டேன். இயேசுவின் ஊழியத்தில் பெரும்பாலும் அவரிடம் கேள்விகள் கேட்டபோது, அக்கேள்விகளுக்கு அவர் நேரடியாக பதிலளிக்க மாட்டார். உதாரணமாக, லூக்கா 10:26ல் நியாயசாஸ்திரி ஒருவன் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதற்கு தான் என்னச் செய்ய வேண்டுமென்று கேள்வி கேட்டபோது, அதைப் பற்றி நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது, அதை அவன் எப்படி புரிந்து கொண்டான் என்று கேள்வி கேட்பதன் மூலமாக பதிலளித்தார். மாற்கு 11 ஆம் அதிகாரத்தின் இறுதியில் இயேசுவின் அதிகாரத்திற்கு சவால் விடப்பட்டது, அவர் கேள்விகளுக்கு நேரடியாக பதிலளிப்பதற்கு பதிலாக யோவானின் ஞானஸ்நானத்தின் அதிகாரத்தை பற்றிக் கேட்டார்.

இயேசு கிறிஸ்து தம்மிடம் எழுப்பப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. நாமும் கூட நம்மிடம் கேட்கப்படும் எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டியதில்லை. நாம் அப்படிச் செய்தால், ஊழியத்தில் இன்னும் சிறப்பான காரியங்களைச் செய்ய முடியும். உங்கள் பணியிலிருந்து தடம் மாறி, உங்களையே இழந்து போய், நீங்கள் ஒன்றையும் சாதிக்க முடியாமல் போகாதபடி அதிக கேள்விகளை அனுமதிக்க வேண்டாம். உங்கள் வேலையில் தொடர்ந்து கவனமாயிருங்கள் ஒரு சிறப்பான அடித்தளம் அமைந்தபிறகு, ஒரே நேரத்தில் ஒரு கேள்விக்கு பதிலளிக்க அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.


# அன்பு அயோக்கியமானதைச் செய்யாது
## Love Is Not Rude
CECIL MAY JR

நல்ல பழக்க வழக்கங்கள் என்பது போஜன மேஜையை ஒழுங்குப் படுத்தி எந்தக் கரண்டியை எந்த ஆகாரத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்று முடிவு செய்வதை விட மேலானது. பொதுவாக, நல்ல பழக்க வ ழக்கங்கள், மற்றவர்களை மரியாதையாக எப்படி நடத்துவது என்பதை போதிப்பது மாத்திரமல்லாமல் அவர்களுடைய விருப்பங்களுக்கு,உ ணர்வுகளுக்கும் மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதையும் நமக்கு போ திக்கின்றது.

மேலும், நல்ல பழக்கங்கள் என்பது ஏதோ ஒன்றை பெற்றுக் கொள்வ தற்காக ஆட்கள் வரிசையில் நிற்கும் போது அவர்களை முந்திக் கொண்டு முன்னாகப் போவதல்ல. கதவைத் திறக்கும் போது மற்றவர் கள் போவதற்காக, அல்லது வருவதற்காக கதவை பிடிப்பது, முதியவர் களுக்கும் ஊனமுற்றோர்களுக்கும் உட்கார இடம் கொடுப்பது போன்றவைகளெல்லாம் நல்லப் பழக்கங்களாகும். வேதாகமம் நல்ல பழக்கங்கள் கிறிஸ்தவ அன்பிலிருந்து ஊற்றெடுத்து வருகிறது என்று சொல்கிறது. அன்பு அயோக்கியமானதைச் செய்யாது [I கொரி 13:6].



## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

நம்பிக்கை TV வெள்ளி காலை 7:30 – 8.00 மணி

தமிழன் TV செவ்வாய் காலை 6:30 – 7.00 மணி

**மாத இதழ் : திருமறை ஆசான்**

### அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.**

தொடர்புக்கு
இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**

E.Z.S. ராஜநாயகம் : 98427 30382
P.R. சுவாமி : 098440 70763
P.C. பிலேமோன் ராஜா: 9244204420
B. அர்ஜுனன் : 994435 58041

## சத்திய வழி


- ❖ பேச்சாளர்: **சகோ. P.R. சுவாமி**
- ❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

---

## கிறிஸ்துவின் வசனம்



- ❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**
- ❖ தமிழன் TV : செவ்வாய் மாலை 6:00 – 6:30 மணி
- ❖ நம்பிக்கை TV: வெள்ளி 8:00 – 8:30 மணி
- ❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்


<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---

## கிருபையுள்ள வார்த்தை



- ❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**
- ❖ தமிழன் : ஞாயிறு காலை 6:45 காலை 7.00 மணி
  அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- ❖ நம்பிக்கை TV : ஞாயிறு மாலை 3:30 காலை 4.00 மணி
- ❖ **Good News TV** செவ்வாய் இரவு 7:30 – 8.00 மணி
- ❖ பைபிள் பாடங்கள்: அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- ❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
- ❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
- ❖ **English Quaterly Magazine** THE VOICE OF TRUTH INTERNATIONAL
- ❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

- ❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

- ❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய ............................................ முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ..................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

- ❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி


**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**


பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________

# 5 நிமிட வேத பாடம்

## நற்கிரியைகள்

**Paula Bates**

1. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று ................................................ தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், ................................................ செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும். நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார் (தீத்து 2:14).

2. நாம் செய்த நீதியின் .......................... அவர் நம்மை இரட்சியாமல் தமது ............................ மறு ஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத்து 3:5).

3. ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது முத்துக்களினாலாவது விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல் ........................................... வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும் ........................................ சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்ற படியே .................................. தங்களை அலங்கரிக்க வேண்டும்.

4. இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தை யுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற .......................................... நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளை யும் நமக்கு சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும், ................................................ பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காக தங்களுக்கு நல்ல ஆகாரத்தைப் பொக்கிஷ மாக வைக்கவும் அவர்களு ................................ (I தீமோத்தேயு 6:17 – 19).

5. இயேசு அவர்களை நோக்கி : நான் என் பிதாவினாலே அநேக நற் கிரியைகளை உங்களுக்குக் ................................................ அவைகளில் எந்தக் கிரியையினித்தம் என்மேல் ..................................................... என்றார் (யோவான் 10:32 ).

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்




## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்

செவ்வாய் காலை 6.30 - 7.00 மணி

நம்பிக்கை தொலைக்காட்சியில்

வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

‘ திருமறை ஆசான் ’
‘ கிருபையுள்ள வார்த்தை ’
‘ வேர்டு ஆப் கிரைஸ்ட் ’

மேலும் விபரங்களுக்கு : E.Z.S. **ராஜநாயகம்,** தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385